


கல்கி
KALKI 27-2-
45 காசு
கி.ராஜேந்திரன்
எழுதும்
"ஸைக்கோ ஸாரநாதன்"
தொடர்கதை
5.3.72 இதழில் ஆரம்பம்





GOVAN/ISTM

J-27-2

தேசத்தை முன்னேற்றப்பாதையில் இயக்கிச் செல்லும் சக்கரங்கள்


சககரங்கள் பல தொழில்களை இயக்குகின்றன. உதாரணமாக, ரயில்கள் கிராமங்களையும் நகரங்களையும் இணைக்கின்றன; விற்பனைச்சரக்குகளை மார்க்கெட்டுகளுடன் இணைக்கின்றன; நாட்டின் ஒவ்வொரு பகுதியையும் மற்றப் பகுதிகளுடன் இணைக்கின்றன. டாடாவின் தண்டவாளங்கள், எஃகுச்சக்கரங்கள் மற்றும் ஆக்ஸில்கள் மக்களையும், பொருள்களையும் இப்பரந்த நாட்டின் பல்வேறு இடங்களுக்கும் கடத்திச் செல்லுகின்றன.

நாட்டின் முன்னேற்றத்திற்கான இணைப்புத் துறையில் எஃகு ஈடற்ற முக்கியத்துவம் வகிக்கிறது. உறுதியான உழைப்பு, உபயோகம் மற்றும் பணமுதலீட்டின் முழு மதிப்பையும் கிடைக்க வழி செய்வதில் அது ஈடு இணையற்றது.

அக்காரணத்தினுல்தான் நாங்கள் ஏராளமான நேரம், உழைப்பு மற்றும் பணம் இவற்றை டாடாவின் முத்திரையுள்ள பொருள்களை மேலும் மேலும் சீராக்குவதில் செலவிடுகிறோம்.

இந்தியப் பொருளாதாரத்தை சீராக்க ஊக்கமளிப்பது டாடா ஸ்டீல்.

டாடா ஸ்டீல்



கல்கி

பொருளடக்கம்

விரோதிகிருது, மாசி 15 — பிப்ரவரி 27, 1972



சந்தா விவரம்	ஒருவருடம்	ஆறுமாதம்
இந்தியா	ரூ. 23-00	ரூ. 11-50
இதர நாடுகள்	ரூ. 50-00	ரூ. 25-00
இலங்கை (இலங்கை நாணயம்)	ரூ. 23-00	ரூ. 11-50

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.

வரம்பற்ற வாய்ப்புகள்

- முதலீடற்ற தொழில்
- உழைப்பிற்கேற்ற ஊதியம்
- ஓய்வுற்றபோதும் தொடரும் வருமானம்
- பொதுநல சேவைக்கு ஓர் அரிய வாய்ப்பு
- தொழிலில் மன நிறைவு

ஆகியவற்றை அளிப்பது ஆயுள் இன்சூரன்ஸ்
முகவர் பணி ஒன்றே!
விவரங்களுக்கு அருகிலுள்ள எல்.ஐ.சி.
அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.



லைப் இன்ஸ்யூரன்ஸ்
கார்ப்பொரேஷன் ஆப் இந்தியா

EP-LIC-21.71

கல்கி
மலர் 31
இதழ் 31

தமிழ்த்திரு நாடுதன்னைப் - பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா
— பாரதியார்

மக்களை ஏமாற்ற மாநில சுயாட்சி கோஷம்

ராஜ்ய சர்க்கார்களுக்கு மேலும் அதிகாரம் தர வேண்டும் என்ற கோரிக்கை சில முதன் மந்திரிகளாலும், சட்டசபை உறுப்பினர்களாலும் வலியுறுத்தப்பட்டு வருகிறது. ராஜ்யங்கள் அதிக அதிகாரம் பெறுவதால் மத்திய சர்க்கார் பலவீனமுறும். மத்திய அரசைப் பலவீனப்படுத்தி, ராஜ்ய அரசுகளின் பலத்தை அதிகரிப்பதற்கு இது சமயமல்ல. கொள்கை அளவில் நல்லதாக உள்ள ஒரு விஷயம்கூட, சந்தர்ப்பத்தைப் பொறுத்து நடைமுறைக்கு ஏற்காததாக ஆகிவிடும். அதிகார பீடத்தில் உள்ளவர்கள் தெய்வபக்தி நிறைந்தவர்களாகவும், பாபத்தைக் கண்டு அஞ்சிப் புனித வாழ்க்கை நடத்துபவர்களாகவும் இருந்தால் மட்டுமே, கொள்கை அளவில் நல்லவையாக உள்ள அம்சங்கள் நடைமுறையிலும் நாட்டுக்கு உபயோகமாக இருக்கும். சுயநலம் ஒன்றே கருதிப் பணப் பிசாசை வழிபடுவோர் ராஜ்ய நிர்வாகத்தில் நிறைந்து கிடக்கிற தற்போதைய சூழ்நிலையில் ராஜ்ய அரசுகளுக்கு அதிகபட்ச சுயாதிக்க உரிமை தருவது நாட்டுக்குச் சிறிதும் நன்மை பயக்காது.

ராஜ்ய சர்க்கார்கள் அதிக அதிகாரம் பெறுவதைத் தொழிலதிபர்கள் வரவேற்கிறார்கள். ஏனெனில், இவ்வாறு ஏற்பட்டால் அதிகார ஸ்தானத்தில் உள்ளவர்களோடு பெர்மிட் லைசென்ஸ் கோட்டா விஷயங்களில் தாங்கள் 'பேரம்' செய்வது மலிவாக முடியும் என்று நம்புகிறார்கள்.

இப்போது ராஜ்ய முதன் மந்திரிகளுக்கு அதிக சுயாட்சி ஆசை வந்திருப்பதற்கு ஒரு முக்கியமான காரணம், பெர்மிட் — லைசென்ஸ் — ராஜ்ய ஏகபோகம் மத்திய சர்க்காரிடமே இருப்பதாகும். பெர்மிட்—லைசென்ஸ் விநியோகத்தினால் மத்திய ஆட்சி பீடத்தினர் பெற்றுள்ள வசதிகளையும் செல்வாக்கையும் பார்த்துவிட்டு, தங்களுக்கும் இதில் பங்கு வேண்டும் எனக் கருதி, 'மாநில சுயாட்சி' என்ற கோஷத்தை எழுப்பியிருக்கிறார்கள். ஆனால் இப்போது தேசத்துக்குத் தேவைப்படுவது மாநில சுயாட்சி அல்ல. பெர்மிட் — லைசென்ஸ் விநியோகப் பொறுப்பை ஒரு சுயாதிக்க உரிமை பெற்ற, கட்சிச் சார்பில்லாத பெருமக்கள் குழுவிடம் ஒப்படைப்பதே பிரச்னை தீர வழி. மத்திய சர்க்காரிடம் மட்டும் இந்தப் பெர்மிட் — லைசென்ஸ் காமதேனு இருப்பதே மாநில முதன் மந்திரிகளின் ஆசையைப் பேராசையாகத் தூண்டிவிட்டிருப்பதால், மத்திய சர்க்காருக்கும் பெர்மிட் — லைசென்ஸ் விநியோகத்தில் பங்கில்லாமல் செய்து, சுதந்திரக் குழுவிடம் இப்பொறுப்பை ஒப்புவித்தல் அவசியமாகும். 'மாநிலங்களின் அதிகபட்ச சுயாதிக்கம்' என்ற கோஷம் ஊழலை விரிவுபடுத்துகிற காரியமே என்பதை இன்றைய சூழ்நிலையில் அழுத்தமாகச் சொல்ல வேண்டியதாகிறது. மந்திரிமார்களும் அரசியல் எஜமானர்களும் சட்ட விரோதமாகச் சொத்து திரட்டி, சட்டத்துக்கு அகப்படாமல் பிறர் பெயர்களில் அவற்றை மாற்றி வருவதாக வதந்திகள் வலுத்து வருகின்றன.

இன்னொரு விஷயத்தையும் கவனிக்க வேண்டும். நிதி நிலைமையில் ராஜ்யங்கள் தனித்தியங்கக்கூடிய சக்தி பெற்றிருக்கவில்லை. இன்று அநேகமாக எல்லா வரிகளும், தீர்வைகளுமே மத்திய சர்க்காருடைய கட்டுப்பாட்டில்தான் உள்ளன. ராஜ்யங்களிடம் விற்பனை வரி ஒன்றே முக்கியமாக உள்ளது. இந்த வரிவிகிதத்தை மிகக் கடுமையாக உயர்த்தினாலன்றி, ராஜ்யங்கள் தங்கள் நிதிப் பொறுப்புக்களைத் தாங்களே கவனித்துக் கொள்வது முடியாத காரியம். மத்திய சர்க்காரிடமிருந்து பலவிதங்களில் மானியங்கள் பெற்றே ராஜ்ய அரசுகள் செயல்பட முடிகிறது. ஒருபுறம் மத்திய அரசிடம் நிதி உதவி கோரிப் பிச்சை கேட்டுக் கொண்டே, மறுபுறம் 'எங்களுக்குச் சுயாட்சி வேண்டும்' என்பது ஒன்றுக்கொன்று முரணாகும்.

இப்படி ஒரு கோரிக்கையை எழுப்புவது விஷயமறியாத மக்களை ஏமாற்றுகிற தேர்தல் கால கோஷங்களில் ஒன்றேயாகும். புதிய தேர்தலில் புதிதாக ஏதேனும் ஒரு கூப்பாட்டைக் கிளப்பி

ஞல்தான் மக்களைக் கவர முடியும் என்பதனாலேயே இப்போது 'மாநில சுயாட்சி' என்கிற விஷயம் பெரிய கோஷமாயிருக்கிறது. இந்தத் தேர்தல் கூப்பாட்டுக்கும் வங்காள தேசச் சுயாட்சிக் கிளர்ச்சிக்கும் எள்ளளவு சம்பந்தமும் இல்லை.

'மாநிலங்களின் அதிகபட்ச சுய ஆட்சி' என்பது நடைமுறையானால் லஞ்ச ஊழல் இன்றிருப்பதைவிடப் பரவலாகத் தாண்டவமாடும்; அடக்குமுறையும் இன்றிருப்பதைவிடக் கடுமையாகும். (அடிப்படை:
ராஜாஜி 'ஸ்வராஜ்யா'வில் எழுதியது.)

என்ன சேதி?

ராம சர்மா மறைவு

ஆயுர்வேத வைத்தியத்துறையில் மேதையாக விளங்கிய வைத்திய வாசஸ்பதி கரூர் பண்டிட் பி. எஸ். ராம சர்மா அவர்கள் காலமாகி விட்டார். சர்மா அவர்கள் சம்ஸ்கிருதத்தில் மகா பண்டிதர்; வேத சாஸ்திர விற்பன்னர்; ஆசார அநுஷ்டான சீலர்; காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகளிடம் மாறாத நேயம் பூண்டு அவர் இட்ட பணிகளைச் சிரமேல் நிறைவேற்றியவர்; சிறந்த சுப்பிரமணிய உபாசகர்; தேசபக்தி மிகுந்த சர்மா அவர்கள் காந்திஜியிடம் ஈடுபாடு கொண்டு கதரே உடுத்தியவர்.

ஏழை எளியவர்களுக்கு இலவச வைத்தியம் செய்வதைத் தம் இறுதி மூச்சு உள்ள வரையில் கொள்கையாகவே கொண்டிருந்தார். குழந்தைகளை வாட்டும் ஈரல், குலைக் கட்டிகளுக்குப் பண்டிட் ராம சர்மாவின் மருந்து தனிப் பெயர் பெற்றது.

தமிழ் நாடு முழுவதும் நமது சக்தி விலாஸ வைத்தியசாலையின் வைத்தியர்கள் ஊரூராகச் சென்று ஆங்காங்கு நோயாளிகளைக் கவனிக்குமாறு செய்து, நடமாடும் வைத்தியசாலையைத் திறம்பட நிர்வகித்து வந்தார்.

கரூர் வட்டாரம் ராம சர்மாவை என்றும் மறவாது.

தத்தாஜி பிரிவு

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகளின் மற்றோர் அத்தியந்த சிடரான ஸ்ரீ தத்தாஜி இறைவனடி சேர்ந்து விட்டது ஆஸ்திக உலகின் பெரு நஷ்டமாகும். தத்தாஜி முன்பு சென்னையில் இம்பீரியல் பாங்கியின் பிரதம அகௌண்டண்ட்டாகப் பணி புரிந்து பெரிய வட்டாரங்களில் பெயர் எடுத்தவர். அக்காலங்களில் நாகரிக வாழ்வில் ஈடுபட்டிருந்தவர் அவர். பதினைலாண்டுகளுக்கு முன் சென்னையில் ஸ்ரீ காஞ்சிப் பெரியவாள் எழுந்தருளிய போது சநாதன தர்மம் ஒரு புது மழையாகப் பொழிந்து பலரது வாழ்வில் ஆன்மிக, ஆசார வித்துக்களைக் கிளைக்கச் செய்ததல்லவா? அப்போது மறுமலர்ச்சி கண்டு ஆஸ்திக விருட்சமாகப் புது வாழ்வு கொண்டவர் தத்தாஜி. பெரியவாளின் அணுக்கத் தொண்டராகி, அவர்கள் ஆக்ஞாபித்த ஜீவகாருண்யப் பணிகளில் மனமார ஈடுபட்டார். வயதுவராத ஏழைக் கன்னிகைகளின் திருமணங்களுக்கு உதவுவதற்கென ஏற்பட்ட கன்யா தான டிரஸ்டின் ஜீவநாடியாகத் திகழ்ந்தார். முன்பு பெரும் பதவியிலிருந்த ஸ்ரீ தத்தாஜி தமது தள்ளாத பருவத்தில் வீடு வீடாக நடந்து சென்று ஒவ்வொரு ரூபாயாக வசூலித்துப் பலருக்குப் புண்ணியம் கிடைக்கச் செய்ததை நுங்கம்பாக்கம் வாசிகள், வியந்து பேசுவார்கள். பீடியரிசித் திட்டத்திலும் அவர் தமது உடல் பொருள் ஆவியை அர்ப்பணித்து வந்தார்.

அடக்கத்துக்கும் மரியாதைப் பண்புக்கும் உறைவிடமாக வாழ்ந்த புண்ணியாத்மா மறைந்து விட்டது.



''விவேகாநந்த கேந்திர பத்திரிகா''வின் முதல் பிரதியை ''ஸ்வராஜ்யா'' ஆசிரியர் ஸ்ரீ க. சந்தானத்திடமிருந்து பெற்றுக் கொள்கிறார் தொழிலதிபர் ஸ்ரீ என். மகாலிங்கம்.



சிவாஸ்தானம் சிவராத்திரி

ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகள் இவ்வருட சிவராத்திரி விரதத்தை, காஞ்சி தேனம்பாக்கம் சிவாஸ்தான ஆலயத்தில் அநுஷ்டித்தார்கள். சிவம் பெருகும் அச்சூழலில் ஏராளமான பக்த கோடிகள் பெரியவாளைத் தரிசித்து அருள் பெற்றனர். ❀

"விவேகாநந்த கேந்திர பத்திரிகா"

ஸ்வாமி விவேகாநந்தருக்குக் கன்னி முனையில் அற்புதக் கற்கோயில் எடுப்பதில் அரும் பங்கு கொண்ட நினைவுக் குழுவினர், இப்போது சொற்கோயில் ஒன்று தொடங்கியுள்ளனர். அதாவது, "விவேகாநந்த கேந்திர பத்திரிகா" என்ற ஆங்கில சஞ்சிகையைத் தொடங்கியுள்ளனர். இதன் முதல் பிரதி ஸ்ரீ ராமகிருஷ்ணரின் ஜயந்தி தினமாகிய பிப்ரவரி 16ந் தேதி உயர், நீதிபதி ஸ்ரீ வீராசாமி அவர்களின் தலைமையில் சென்னையில் நடந்த விழாவில் வெளியிடப்பட்டது. ஆறு மாதங்களுக்கு ஒரு முறை வெளியாக இருக்கும் இச்சஞ்சிகையின் ஒவ்வோர் இதழிலும் குறிப்பிட்ட ஓர் ஆன்மிக – சமூக விஷயம்பற்றி அறிஞர் பலர் வழங்கியுள்ள கட்டுரைகள் வெளியாகும். சஞ்சிகையின் ஆண்டுச் சந்தா ரூ. 15. பத்திரிகைப் பிரதி விலை ரூ. 8. வெளியீட்டாளர் விலாசம்: விவேகாநந்தா ராக் மெமோரியல் கமிட்டி, 12, பிள்ளையார் கோவில் தெரு, சென்னை—5.

கண்டமும் அகண்டமும்

ஜகத்குரு ஸ்ரீகாஞ்சி காமகோடி சங்கராசார்ய சுவாமிகள்

ஒரே ஒரு சூரியன்தான் உள்ளது; கையிலே கொஞ்சம் ஜலத்தை எடுத்துக்கொண்டு நல்ல வழுவழுப்பான தரையில் அதைத் தெளித்தால் ஒவ்வொரு முத்து ஜலத்திலும் பிரதிரூபமாக ஒவ்வொரு சூரியன் தெரிகிறது. அவை எல்லாம் பிரிந்து பிரிந்து காணப்பட்டாலும் அநேக சூரியன்கள் இருப்பதாக ஆகாது. சூரியன் ஒன்றுதான். அவ்வாறே உலகில் காணும் இத்தனை ஜீவராசிகளுக்குள் சிறியதாக மினுமினுக்கிற அறிவொளி அனைத்தும் ஒரே பிரம்மத்தின் பிரதிபலிப்புத்தான். இதைத்தான் ஸ்ரீ ஆதி சங்கராசார்யரவர்கள் ப்ரம்ம ஸூத்திரத்தின் பாஷ்யத்தில் சொல்லியிருக்கிறார். எல்லாவற்றுக்கும் மூலமாக இருக்கும் அகண்டமான ஒரே சக்தி எதுவோ, அறிவு எதுவோ அந்த எல்லை கடந்த சக்திதான், அறிவுதான் நம்மிடத்தில் ஓர் எல்லைக்குள் பிரிந்து கண்டம் கண்டமாகத் தோன்றுகிறது. அந்த ஒரே வஸ்துதான் வேதத்தின் அந்தத்தில் இருக்கும்படியான தத் (அது) என்பது. 'தத்' என்றால் தூரத்தில் எல்லாவற்றுக்கும் மேலே இருக்கிறதென்று அர்த்தம். எல்லாமாய் இருப்பது அதுதான். 'அது நீயேதான்' – 'தத்-த்வம்' என்கிறது வேதம்.

இப்படி நான் சொல்லுகிற க்ஷண காலம் நமக்கு எல்லாம் புரிந்து விட்டது போல் இருக்கிறது. இந்த ஒரு க்ஷணத்தில் எப்படி இருக்கிறோமோ அப்படியே எப்போதும் இருந்தால் துக்கம் இல்லை. ஆனால் நாம் பலவிதமான பொய்களாலேயே கஷ்டங்களுக்காளாகிறோம். பொய்யினால் பெறும் ஆனந்தமும் விரைவில் பொய்யாகி விடும். உண்மையில் என்றும் ஆனந்தமாக இருப்பதற்கு, உண்மையாக இருக்கிறவனை எப்போதும் பிடித்துக் கொண்டிருக்க வேண்டும். உண்மையாக இருக்கிறவன் ஸ்வாமி ஒருத்தன்தான். ஆசாமிகளாகிய நாம் அந்த சுவாமியைத்தான் பற்றிக் கொள்ள வேண்டும். கண்டம் கண்டமாக நாம் இருக்கிறோம். கண்டம் கண்டமாக இருப்பது எல்லாம் முடிவில் அகண்டத்தோடு ஒன்றுபடும்போது அகண்டமாக ஆகி, நிரந்தர ஆனந்தமாகி விடுகிறது.

அகண்டமாக இருப்பவன் ஒருவன்தான் இருப்பு. கண்டமாக இருப்பது வெறும் நினைவுதான். நினைவு, கனவு எல்லாம் சாசுவத உண்மை அல்ல.

அகண்டமாக இருக்கிற ஒருவனைக் கண்டம் கண்டமாக உருவமும் குணமும் உள்ளவனாக தியானம் பண்ணிக் கடைசி நிலையாக நிர்குண தியானம் செய்ய ஆரம்பித்தால் சண்டை, பூசல் ஒன்றுமே வராது. இதுதான் ஸ்ரீ சங்கர பகவத் பாதர்கள் உபநிஷத மரத்திலிருந்து நமக்குப் பறித்துக் கொடுத்த பழம்.

இந்தப் பழுத்த நிலையை நாம் அடைவதற்கு முன் மொட்டாக, பூவாக, பிஞ்சாக, காயாக இருந்து முதிர வேண்டும். பழுக்கும் நிலைவரைக்கும் பொறுமையாகத்தான் இருக்க வேண்டும். வெம்பி விழுந்து விட்டால் பயன் இல்லை. 'வெம்பி விழுந்திடுமோ?'



என்று இராமலிங்கர் சொல்லுகிறார். நமக்கும் அந்தக் கவலை இருக்க வேண்டும். கனிந்த பழம் ஆகும் வரையில் பூஜை, ஜபம், தபம் எல்லாம் இருக்க வேண்டும். வேதத்தின் அந்தத்தில் இருக்கும்படியான தத்வம் என்கிற உண்மை நிலைக்கு நாம் வரும்வரையில் அவை வேண்டும். அப்போதுதான் வெம்பாது பழுக்கும். கடைசியில் அந்த தத்வம் – மூலம் – எங்கே இருக்கிறது? 'தன்னிடத்திலேயேதான் இருக்கிறது; எந்த அறிவு தத்துவத்தை ஆராய்கிறதோ அந்த அறிவுக்குள்ளேயே இருக்கிறது' என்பதை அநுபவத்தில் உணரலாம்.



4. 'அடிப்படை ஜனநாயகம்' விளைவித்த அலங்கோலம்!

டாக்காவில் பிரதமர் முஜீபுர் ரஹ்மானின் ஜாகையும்...


பாகிஸ்தான் வாழ்வில் பாதிக்குமேல் ராணுவ ஆட்சி. இதற்குக் காரணம் மேற்குப் பாகிஸ்தானில் அரசியல்வாதிகள் விளைவித்த குழப்பம். அஸ்திவாரம் இல்லாமல் வீடு கட்டியதின் கோளாறு.


புரட்சி செய்தோ சாத்வீகப் போராட்டம் நடத்தியோ பெறப்பட்டது அல்ல பாகிஸ்தான் சுதந்திரம். இந்திய சுதந்திரப் போராட்டத்துக்குக் கட்டை போட்டு வெள்ளையர்களின் திட்டத்துக்கு ஒத்து ஊதி அடையப்பட்டது பாகிஸ்தான். மொட்டை மாடியிலிருந்து தொடங்கி அஸ்திவாரத்துக்குக் கட்டடம் கட்டிய வித்தையைப் பாகிஸ்தான் சிருஷ்டியில் மக்கள் கண்டனர். அதிலும் தலைவர்களும் ஜமீந்தார்களும் தாங்கள் ஏகபோகமாகச் சுரண்ட ஏற்பட்ட வாய்ப்பு பாகிஸ்தான் என்றே கருதினார்கள். அவர்களுக்குப் பலியானவர்கள் ஏழை எளிய முஸ்லிம்கள்.


பாகிஸ்தானில் பாலும் தேனும் பெருக்கெடுத்து ஓடப் போகிறது என்று பகற் கனவு கண்டவர்கள், இருபத்தைந்து ஆண்டுகளுக்குப் பிறகும் கனவு கனவாக இருப்பதைக் கண்டு ஆத்திரம் கொண்டுள்ளார்கள்.

ஆதியில் முஸ்லிம் லீக் பாகிஸ்தானில் ஏகபோகமாகச் செயல்பட்டது. ஆனால் காலம் செல்லச் செல்ல அதன் வண்டவாளம் வெளிப்பட்டது. ஏன், பிரதமர் லியாகத் அலிகான் கொலையுண்டது பற்றி இன்றுவரையில் முழு உண்மை வெளியாகவில்லையே!

நாட்டில் லீகின் சாயம் வெளுக்கத் தொடங்கியதும் மற்றக் கட்சிகள் தலை தூக்கின. இன்று அதிபராக உள்ள ஜனாப் பூட்டோ, மக்கள் செயல் கட்சியை ஆரம்பித்தார். வடமேற்கு மாநிலத்தில் கான் அப்துல் கபர்கானின் மகன் ஜனாப் வாலிகான் தேசிய அவாமி லீக் கட்சியை ஆரம்பித்தார். கிழக்குப் பாகிஸ்தானில் அவாமி லீக் உருவாயிற்று. மந்திரி சபைகள் வந்து போயின. ஒவ்வொரு மந்திரி சபையும் தன்னாலான நாற்றத்தையும், லஞ்சக் வியாதியையும்







1. ஷேக் அப்துல் அஜீஸ் - விவசாய மந்திரி.
2. ஜாகீர் அகமத் சௌத்ரி - சுகாதாரம், தொழில் மந்திரி.
3. டாக்டர் கமால் ஹுசைன் - சட்ட மந்திரி.



... பாதரட்சை விற்கும் நடைபாதைக் கடையும்.

விட்டுச் சென்றது. இந்தச் சூழ்நிலையில்தான் ஜெனரல் அயூப்கான் அதிகாரத்தைக் கைப் பற்றினர். அமெரிக்க நிர்வாகம் அயூப்கானுக்கு ஆயுத உதவியும் நிதி உதவியும் கொடுத்து பாகிஸ்தானை — சண்டைக் கோழியாகக் கொழுக்கச் செய்தது என்பதைச் சரித்திரம் பறைசாற்றுகிறது.

கழுதைக் குட்டி பிறந்தவுடன் குதிரைக் குட்டியைப் போல் அழகாகத்தான் இருக்கும்! ஆனால் நாட்கள் ஆக ஆக அதற்கு மூக்கு வெளுக்கும், முட்டிக் கால் தட்டும்! பாகிஸ்தானில் ராணுவ ஆட்சி ஆரம்ப கட்டத்தில் வெகு துடியாகச் செயல்பட்டது. லஞ்ச ஒழிப்பில் அயூப்கானைப் போல் உண்டா என்றுகூடக் கேட்டார்கள் பலர். தொழில் துறையில் கூடப் பெருக்கம் ஏற்பட்டதாகச் சொன்னார்கள். இந்த ராணுவ ஆட்சி மோகம் வெகு நாட்கள் நீடிக்கவில்லை. காரணம் எந்த ஊழல், லஞ்சம் பொரிகைகள் அரசியல் தலைவர்களுக்குக் கெட்ட பெயரைத் தேடிக் கொடுத்தனவோ, அதே காரணங்கள் ராணுவத்தினருக்கு அதிகக் கெட்ட பெயரைத் தேடிக்



எதிரிகளை வெலவெலக்கச் செய்த விஜயந்தா டாங்கு சென்னை அருகே, ஆவடியில் தயாராகிறது.

கொடுத்தன. அது மட்டுமல்ல, ராணுவத்தினரால் நாட்டை ஆள முடியாது என்பது எவ்வித ஐயமுமின்றி 1970 டிசம்பர் மாதம் நிரூபிக்கப்பட்டது.

ஷேக் முஜிபுர் ரஹ்மான் அரசியலுக்குப் புதியவர் அல்லர். மொழிக் கிளர்ச்சி நடந்த போது அவர் மாணவர். அப்பொழுதே சிறை சென்றார் அவர். அதற்குப் பிறகு எப்பொழுதெல்லாம் அரசியல் கிளர்ச்சிகள் ஏற்பட்டனவோ, அப்பொழுதெல்லாம் முன்னணியில் நின்றார். ராணுவ ஆட்சி ஏற்பட்ட பிறகு அவர் அவாமி லீக் கட்சி வலிவடையும்படி ஆக்க வேலையில் ஈடுபட்டார்.

1965-ம் ஆண்டு இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையே யுத்தம் மூண்டதல்லவா? அது ஷேக் முஜிபுர் ரஹ்மானின் கண்ணைத் திறந்தது. ஏனென்றால், அப்போது பாகிஸ்தான் அரசு கிழக்குப் பாகிஸ்தானின் கதி என்ன என்றுகூடக் கவலைப்படவில்லை. சுமார் இரு வாரங்களுக்கு இரு பாகிஸ்தான்களுக்குமிடையே எவ்வித உறவுமில்லாமல் இருந்தது. கிழக்கே இந்தியா தாக்கியிருந்தால்



கைதிகள் முகாமில் சரணடைந்த பாகிஸ்தானிய வீரர்களும்...

அப்பொழுதே பாகிஸ்தான் பிளவுண்டிருக்கும். ஆனால் ஸ்ரீ லால்பகதூர் சாஸ்திரி கிழக்குப் பாகிஸ்தானிகள் பாகிஸ்தானால் துன்புறுத்தப்பட்டவர்கள் என்று அதைத் தாக்க மறுத்துவிட்டார். இதை ஷேக் போன்றவர்கள் அறிந்து மனத்துக்குள் மெச்சியிருக்க வேண்டும்.

பழைய நாட்களில் தெருக்கூத்து என்று விடிய விடிய நடக்கும்.

அது என்னவென்பது புதுத் தலைமுறைக்குத் தெரியாது. அதில் பிள்ளையார் வேஷம் என்று முதலில் வருவதுண்டு. அது மாதிரி 1968ம் வருடம் பாகிஸ்தானில் ஒரு பிள்ளையார் சுழி போடப்பட்டது. மே மாதம் ஆறும் தேதி பாகிஸ்தான் அரசு இருபத்தெட்டு நபர்களைக் கைது செய்து அவர்கள் பாகிஸ்தானைப் பிரிக்க முயன்றதாகக் குற்றம் சாட்டியது. கைது செய்யப்பட்டவர்களில் உள்ளடக்கம் லெப்டினென்ட் கம்மோடர் குவாஜும் ஹூஸேன், மூன்று ஸிவில் அதிகாரிகள், பல கமிஷன் பெறாத ராணுவ அதிகாரிகள்.

அவர்களுடைய குற்றம்தான் என்ன? அவர்கள் டாக்காவிலிருந்த இந்திய ஹைகமிஷனின் முதல் காரியதரிசியான ஸ்ரீ பி. என். ஓஜா என்பவருடன் தொடர்பு கொண்டிருந்ததாகவும், இந்தியன் யூனியன் பகுதியான திரிபுராவின் தலைநகர் அகர்தாலில் இருந்த கர்னல் மிச்ரா என்பவருடனும் மேஜர் மேனன் என்பவருடனும் — பேச்சுவார்த்தைகள் நடத்தியதாகவும் சொல்லப்பட்டது. ஸ்ரீ ஓஜாவை இருபத்திநாலு மணி நேரத்தில் டாக்காவை விட்டு வெளியேறும்படி பாகிஸ்தான் அரசு பணித்தது. ஸ்ரீ ஓஜாவைப் பாகிஸ்தான் வெளியேற்றிய சமயம் இந்தியா, பாகிஸ்தான் ஹைகமிஷனில் பணியாற்றிய ஜனாப் அகமத் என்பவரை வெளியேறும்படி உத்தரவிட்டது. ஜூன் மாதம் பத்தொன்பதாம் தேதி, 36 நபர்கள் மீது விசாரணை நடந்தது. அந்த எண்ணிக்கையில் இன்று வங்க தேசப் பிரதமரான ஷேக் முஜிபுர் ரஹ்மானும் இருந்தார்.

...நம் வசப்பட்ட பாகிஸ்தானிய ராணுவத் தளவாடங்களில் ஒரு பகுதியும்.





லெப்டினன்ட் கமோடோர் குவாஜம் ஷேக் முஜீபுர் ரஹ்மானிடம் ஒரு திட்டத்தைக் கொடுத்தாராம். அதன் பிரகாரம் — பாகிஸ்தானின் கப்பற் படையில் ஒரு பகுதி கிழக்குப் பாகிஸ்தானின் விடுதலைக்காகப் போராடத் தயாராம். இந்தத் திட்டத்துக்கு அரசியல் ஆதரவை லெப்டினன்ட் கமோடார் குவாஜம் தேடினாராம். பாகிஸ்தானின் குற்றச்சாட்டுப் பிரகாரம் ஷேக் சாகிப் இதற்கு இசைந்தாராம். கிழக்குப் பாகிஸ்தானில் கிளர்ச்சி தொடங்கியதும் இந்தியா ஆகாயத்திலும், சமுத்திரத்திலும் பாகிஸ்தானின் படைகள் கிழக்குப் பக்கம் செல்லாதபடி முற்றுகை போடச் சம்மதித்ததாம். உள் நாட்டு யுத்தத்தில் கைது செய்யப்பட்ட பாகிஸ்தானிகளை உபயோகித்து மேற்கு பாகிஸ்தானில் இருந்த கிழக்கு வங்காளிகளை நாடு திரும்பச் செய்யும்படி திட்டமாம்.

அன்று நடந்தது கபட நாடகம். நாடக ஆசிரியர் ஜெனரல் அயூப். 1971ல் நடந்தது உண்மை. அப்பொழுது கதை வசனம் டைரக்ஷன் எல்லாம் ஷேக் முஜீபுர் ரஹ்மானுடையது. ஒருகால் விதிதான் அன்றே கோடி காட்டிவிட்டுச் சென்றதோ? அன்று ஷேக் தமக்கு உள்நாட்டு யுத்தம் போன்ற நடைமுறைகளில் நம்பிக்கை இல்லை என்றார். இன்று கிழக்கு பாகிஸ்தான் என்பது நேற்றைய பயங்கரக் கனவு என்று தெளிவுபடுத்தி விட்டார்.

இந்த நாடகம் நடந்த அதே வருடம் நவம்பர் மாதம் பாகிஸ்தானிய வரலாறு காணாத வகையில் மாணவர் கொந்தளிப்பு ஏற்பட்டது. மாணவர்கள் கல்வி முறையில் சீர்திருத்தத்தைக் கோரிக் கிளர்ச்சி செய்தனர். அதே மாதம் பதின்மூன்றும் தேதி ஜுல்பிகார் பூட்டோ கைது செய்யப்பட்டார். அவர் செய்த குற்றம் ? மாணவர்களைத் தூண்டி விட்டாராம் ! அருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்தானே !

ஜுல்பிகார் பூட்டோ கைதானதும் கலவரம் மூண்டது. அது கிழக்குப் பாகிஸ்தானைக் கவ்விற்று. இதன் நடுவில் எட்டுக் கட்சிகள் கொண்ட செயல் குழு, அயூப்கான் தமது 'அடிப்படை ஜனநாயக' தத்துவத்துக்கு முழுக்குப் போடவேண்டும் என்றும் அவசர நிலையை ரத்து செய்ய வேண்டும் என்றும் கோரிற்று. அதைத் தவிர அந்தக் குழு, கிழக்குப் பாகிஸ்தானில் மாநில சுயாட்சி வேண்டும் என்றும் பத்திரிகை சுதந்திரம் நிலைநிறுத்தப்பட வேண்டும் என்றும் கோரியது.

ஜனக் கொந்தளிப்பைக் கண்டு கலகலத்த ஜெனரல் அயூப் முதலில் எட்டுக் கட்சிக் குழுவுடன் பேச்சு நடத்த முன் வந்தார். அவசர நிலை ரத்து செய்யப்பட்டது. ஜுல்பிகார் பூட்டோ விடுதலை செய்யப்பட்டார். ஆனால் அத்துடன் அவர் தலைவலி நீங்கவில்லை.

மறுமுறை அதிபர் பதவிக்குப் போட்டியிடப் போவதாகப் பயமுறுத்திய அயூப் 1970ம் ஆண்டு மார்ச்சு மாதம் 28ந் தேதி தம் பதவியைத் துறந்தார். ஜெனரல் யாஹ்யா கான் அதிபரானார்.

1966ல் ஜுல்பிகார் முஜீபுர் ரஹ்மான் தம் ஆறு அம்சத் திட்டத்தைப் பிரகடனப்படுத்தி யிருந்தார். இந்தத் திட்டத்தின் சாராம்சம் கிழக்குப் பாகிஸ்தானில் முழு சுயாட்சி ஏற்பட வேண்டும்; பாகிஸ்தான் சுரண்டல் ஒழிய வேண்டும் என்பது. ஷரத்துக்கள் வருமாறு:

1. பாகிஸ்தானின் மத்திய அரசு மாநிலங்களின் சமஷ்டியாக அமைய வேண்டும். நாடாளுமன்றம் வயது வந்தவர்களின் வாக்குகளால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.
2. மத்திய அரசு, அந்நிய விவகாரம், பாது காப்புத் தவிர மற்ற அதிகாரங்களை மாநில அரசுகளுக்குக் கொடுக்க வேண்டும்.
3. கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து மேற்குப் பாகிஸ்தானுக்கு ஏற்பட்ட மூலதன ஓட்டம் நிற்க வேண்டும். பாகிஸ்தானின் இரு பாகங்களுக்கும் தனித் தனி நிதிக் கொள்கைகள் ஏற்பட வேண்டும்.
4. மத்திய அரசு, மாநில வரிகளில் தன் செலவை ஈடுகட்டப் பங்கு கோரலாம். ஆனால் அதற்கு வரி விதிக்க அதிகாரம் கிடையாது.
5. ஒவ்வொரு மாநில அரசுக்கும் அந்நிய நாடுகளுடன் வர்த்தக உடன்பாடுகள் செய்துகொள்ள அதிகாரம் கொடுக்கப்பட வேண்டும். தான் சம்பாதித்த அந்நியச் செலாவணியைத் தானே நிர்வகிக்க அதற்கு உரிமை உண்டு.
6. மாநிலங்களுக்குத் தனித் தனி பாது காப்புப் படைகள் திரட்ட அதிகாரம் கொடுக்கப்பட வேண்டும்.

இந்தத் திட்டத்தின் சாராம்சம் என்ன? கிழக்கு வங்கத்துக்குப் பாகிஸ்தானில் நம்பிக்கை இல்லை. பச்சாத்தாபம் காரணமாகப் பெயரளவில் பாகிஸ்தானுடன் உறவு கொள்ளத் தயார். ஷேக் முஜீபுர் அப்பொழுதுகூடக் கிழக்கு வங்கத்துக்குச் சுதந்திரம் வேண்டும் என்று கூப்பாடு போடவில்லை.

ஜல்லிக் கட்டு மாட்டுக்குச் சாய வேஷ்டியைக் கண்டால் ஆக்ரோஷம் வருவதுபோல் ஜெனரல் அயூப்கான் இந்தத் திட்டத்தைத் தம் மனம் போனபடி திட்டி வெளுத்துக் கட்டினார். இது பாகிஸ்தானைத் துண்டிக்க வென்று உண்டான சதி என்றார். தேவையானால் உள்நாட்டு யுத்தத்துக்குத் தயார் என்றார். 1966ல் நிகழாத உள்நாட்டு யுத்தம் 1970ல் நடந்தது.

ஜெனரல் அயூப்கான் தம் பதவியை விட்டு விடுமுன் மக்களுக்கு அதிகாரத்தைக் கொடுப்பதாக வாக்களித்திருந்தார். இதன் பிரகாரம் தேசிய சபை (நாடாளுமன்றத்துக்குச் சமமானது) முந்நூறு அங்கத்தினர்களைக் கொண்டதாக இருக்கும். இதில் நூற்று அறுபத்திரண்டு ஸ்தானங்கள் கிழக்குப் பாகிஸ்

தானில் இருக்கும். இவை தவிர பதின்மூன்று ஸ்தானங்கள் பெண்களுக்காக ஒதுக்கப்படும். இதில் கிழக்குப் பாகிஸ்தானின் பங்கு ஏழு. அதாவது கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து 169 அங்கத்தினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

ஜெனரல் யாஹ்யாகான் 1970ம் ஆண்டு அக்டோபர் மாதம் பாகிஸ்தானில் தேர்தல் நடக்க உத்தரவிட்டார். இறுதியாக இது டிசம்பர் மாதம் நடந்தது. பாகிஸ்தானில் அரசியல் கட்சிகள் இடையே நிலவிய சச்சரவுகளால்தான் ராணுவ ஆட்சி சாத்தியமாயிற்று என்று முன்னர் குறிப்பிட்டிருந்தேன். ஜெனரல் அயூப்கானைப் பதவி இறக்கம் செய்வதில் அரசியல் கட்சிகள் ஒற்றுமை காட்டின. ஆனால் எந்தவிதமான அரசு நாட்டுக்கு வேண்டும் என்பதில் அவைகளிடம் ஒற்றுமை இல்லை. இதனால்தான் 'வால் போச்சு கத்தி வந்தது டும்டும்' என்று கொட்டுக் கொட்டிக் கொண்டு ஜெனரல் யாஹ்யாகான் அதிபரானார். பாகிஸ்தான் அரசியல் உலகில் என்ன மாறுதல்? ஒன்றுமில்லை! பெருமாள் போய்ப் பெத்தபெருமாள் தோன்றினார். பெத்த பெருமாள் மக்களுக்கு அதிகாரத்தைத் திருப்பிக் கொடுக்கப் போவதாகப் பசப்பினாரே தவிர, அவ்வாறு செய்யும் எண்ணம் அவருக்குத் துளிக்கூட இல்லை! பஞ்சாபி முஸ்லிம்கள் ஆதிக்கம் மேற்குப் பாகிஸ்தானில் இருக்க வேண்டுமென்று மேற்குப் பாகிஸ்தானின் நான்கு மாநிலங்களை — பஞ்சாப், சிந்த், பலுசிஸ்தான், வடமேற்கு எல்லை மாநிலம்— ஒன்றாக்கினார் அயூப். இதை மற்ற மாநிலங்கள் வெறுத்தன. ஜெனரல் யாஹ்யாகான் மீண்டும் ஓர் அங்க மேற்குப் பாகிஸ்தானைக் கலைத்துப் பழைய மாநிலங்களையே நிலைநிறுத்தினார். கிழக்குப் பாகிஸ்தானுக்கும் மேற்குப் பாகிஸ்தானுக்குமிடையே சமத்துவம் என்ற பெயரால் அயூப் இரு பாகங்களுக்கும் சம அங்கத்தினர் பலம்தான் தேசிய சபையில் உண்டு என்று நிர்ணயித்திருந்தார்.

இது கிழக்குப் பாகிஸ்தானின் அதிக ஜனத்தொகையை ஈடு கட்டும் யுக்தி. ஷேக் ரஹ்மான் இது அயோக்கியத்தனம் என்று கர்ஜித்து வந்திருந்தார். இனி தாக்குப் பிடிக்க முடியாது என்று தெரிந்ததும் ஜெனரல் யாஹ்யாகான் ஜனத்தொகை அடிப்படையை மீண்டும் நிலைநிறுத்தினார். இதன் பிரகாரம் கிழக்குப் பாகிஸ்தானுக்கு 169 ஸ்தானங்கள் 312 அங்கத்தினர்கள் கொண்ட அமைப்பில் உண்டாயிற்று. கிழக்குப் பாகிஸ்தான் அங்கத்தினர்கள் எல்லோரும் ஒருங்கிணைந்து செயல்படும் காலம் இந்த நூற்றாண்டில் இல்லை என்று எண்ணினார் யாஹ்யாகான். 169 ஸ்தானங்களில் ஷேக் முஜிபுர் ரஹ்மான் என்ன நூறு ஸ்தானங்களைப் பிடிக்க முடியுமா? ஆகவே, கிழக்குப் பாகிஸ்தான் ஒருங்கிணைந்து செயல்பட்டு — ஷேக் முஜிபுர் ரஹ்மான் பாகிஸ்தானுக்குப் பிரதமராவது என்பது நடக்காது என்று ஜெனரல் யாஹ்யாகான் முடிவு செய்து விட்டார். இந்த அம்சத்தில் அவர் ஏமாந்த சோணகிரி.



மக்களின் மதிப்பைப் பெற்ற ஷேக், கிட்டத்தட்ட நூற்றுக்கு நூறு ஸ்தானங்களைப் பிடிக்கப் போகிறார் என்பது அவருக்கு எப்படித் தெரிந்திருக்கும்? எல்லாவற்றுக்கும் மேலாக யாஹ்யாவின் துருப்புச் சீட்டு ஒன்றிருந்தது. தேசிய சட்டசபை நான்கு மாதங்களில் ஓர் அரசியல் சாஸனத்தை உருவாக்க வேண்டும் என்பது அது. இந்த அரசியல் சாஸன மசோதா பாகிஸ்தான் அதிபரின் அங்கீகாரத்தைப் பெற வேண்டும். அவர் அங்கீகாரம் கொடுக்க மறுத்தால் தேசிய சபை கலைக்கப்படும். இப்பொழுது புரிந்ததல்லவா பாகிஸ்தான் ராணுவத்தின் உண்மை எண்ணம்? மக்களை ஏமாற்றுவதுதான் அடிப்படைச் சித்தாந்தம்.

மேற்குப் பாகிஸ்தானில் தேர்தல் பிரசாரம் சூடு பிடிக்கத் தொடங்கியதும் அரசியல் கட்சிகள் ஒன்றின் குரல் வளையை மற்றொன்று பிடிக்கத் தொடங்கின. இதற்கு யாஹ்யாகானின் அத்தியந்த ஆலோசகர்கள் ஆதரவு கொடுத்ததுடன் பண வசதியும் கொடுத்தார்கள். பிரிட்டிஷார் பிரித்து ஆளவில்லையா? அதே தந்திரம். பாகிஸ்தானில் 1970ல் முப்பத்தாறு கட்சிகள் இருந்தன என்பதை வாசகர்கள் அறிய வேண்டும்! ஆனால் கிழக்குப் பாகிஸ்தானிலோ? ஷேக் முஜிபுர் ரஹ்மான் வரும் தேர்தல்கள் தம் ஆறு அம்சத் திட்டத்தின் மேல் வாக்கெடுப்பாக அமைய வேண்டும் என்று கர்ஜித்துச் சூறாவளிப் பிரசாரம் செய்தார். தேர்தல் முடிவுகள் வந்ததும் ஜெனரல் யாஹ்யாகானுக்கு ஹிருதயத் துடிப்பே நின்றுவிடும் போலாகி விட்டது. 313 அங்கத்தினர்கள் கொண்ட தேசிய சபையில் ஷேக் முஜிபுர் ரஹ்மானுக்கு 167 ஸ்தானங்கள் கிடைத்தன! அதாவது அவர் கேந்திர அரசை யார் தயவும் இல்லாமல் அமைக்க முடியும்! பிரதமரும் ஆக முடியும். இந்த முடிவுதான் வங்க தேசத்தில் சூறாவளிக்குக் காரணம் என்பதை உலகம் அறியப் பறைசாற்ற வேண்டும்.

தேர்தலில் ஷேக் முஜிபுர் ரஹ்மான் வெற்றி பெற்றதும் அல்லாமல் அவருடைய ஆறு அம்சத் திட்டத்தையும் மக்கள் ஆதரித்து விட்டார்கள். இதற்கு அர்த்தம் அவர் அரசை அமைத்து அந்தத் திட்டத்தை அமுல் செய்வார். இருபத்தைந்து ஆண்டுகளாக மாக்களாகக் கருதப்பட்டு ஏழைமைக்கும் சிறுமைக்கும் அவதிக்கும் ஆளான மக்கள் தலைநிமிர்ந்து நடந்து 'நாங்கள் வங்க தேசத்து மன்னர்கள்' என்று சொல்ல முடியும். பாகிஸ்தானில் பஞ்சாபி முஸ்லிம்களின் ஆட்டபாட்டத்துக்கு முற்றுப்புள்ளி. இந் நிலைமையில் உண்மை அதிபராக இருக்கக்கூடிய எவரும் தம் அறிவைப் பணயம் வைத்து மோசடியில் இறங்கியிருக்க மாட்டார். ஆனால் விதி ஜெனரல் யாஹ்யாகானை விடவில்லை. அரசியல் சொக்கட்டானில் அவர் தவறான காய்களை உருட்டினார். இதன் விளைவாக அவரே உருளும்படியாயிற்று! (தொடரும்)



ஸ்ரீ முத்து

ஸ்ரீ சேஷாத்திரி



திருவல்லிக்கேணி கடற்கரைக்குச் செல்லும் வழியில் அமைந்திருக்கும் என். கே. டி. கலா மண்டபம். மாலை நேரம்.

'திருவேட்டீசுவரர் சபா'வின் துணி 'பானர்' காற்றில் சலசலத்தது.

அன்று மாலை ஆறரை மணிக்கு நடக்கவிருந்த 'சகுனி காட்டிய வழி' என்னும் நாடக நிகழ்ச்சிக்கான சுவரொட்டிகள், அலங்கார விளக்குகள்.

சபா அங்கத்தினர்கள் ஒருவர் இருவராக வந்து கொண்டிருக்கும் சமயம்.

''உங்க சபா புரோகிராமுக்குப் போய்க் கொண்டிருக்கிறீர்கள் போலிருக்கிறது?''

கலாமண்டபத்தின் முகப்பிலே கேட்ட குரல் ஸ்ரீமதி சரோஜா சேஷாத்திரியுடையது.

''அட, நீங்களா! வாங்கோ!'' என ஸ்ரீமதி சுலோசனா முத்து வரவேற்றார்.

ஸ்ரீமதி சுலோசனா முத்து: இன்றைக்கு ஆர். ஆர். சபாவிலே உங்கள் கணவர் நடிக்

இரு இல்லத்தரசிகளின் சந்திப்பு

கும் 'தெய்வம்' நாடகம் இருக்கிறது போலிருக்கிறதே? பேப்பரில் பார்த்தேனே! இங்கே நீங்கள் எப்படி...?

ஸ்ரீமதி சரோஜா சேஷாத்திரி: வரக் கூடாதா? மயிலாப்பூருக்கு டாக்ஸியில் கிளம்பினார். நானும் திருவல்லிக்கேணி பக்கம் வர வேண்டும் என்று சொன்னேன். சொந்தக்காரங்க வீட்டில் இறக்கிவிட்டு விட்டு அவர் மயிலாப்பூர் போய்விட்டார். நான் என் உறவினர்களுடன் உங்க சபாவுக்குத்தான் வந்திருக்கிறேன்.

சுலோ: ரொம்ப சந்தோஷம். உங்கள் கணவர் நடித்த 'தெய்வம்' போன மாதம் நடந்தது. பார்த்தேன்.

ஏதோ ஆபீசில் பல வருஷங்கள் இருந்தவராமே? எங்க வீட்டுக்காரர் சொன்னார். வேலையில் இருக்கும்போதே நடித்து வந்தாரா?

சரோ: ஆமாம். ஸ்டாண்டர்ட் வாக்குவம் ஆயில் கம்பெனியில் இருந்தார். பின்னால் அதுவேதான் எஸ்ஸோவாக மாறியது. இருபத்து மூனு வருஷங்கள் வேலை பார்த்திருக்கிறார். 'இண்டியன் ஆயில் கம்பெனி' ஆரம்பமானதும், பெரிய எண்ணெய்க் கம்பெனிகளில் ஆட்களைக் குறைத்தார்கள். 'செபரேஷன் ஸ்கீ'மோ என்னவோவாமே, அதன்படி இன்னும் பத்துப் பன்னிரண்டு வருஷங்கள் வேலை பார்க்க வேண்டியிருக்க, முன்னாடியே கணக்குத் தீர்த்துக் கொண்டு வந்து விட்டார்.

பதினோராம் வயசிலிருந்தே நடிக்க ஆரம்பித்து விட்டாராம். என் கல்யாணத்தின் போதெல்லாம் ஆபீஸ் நாடகங்களிலும் வெளி நாடகங்களிலும் நடித்து வந்தார்.

சுலோ: முதல் முதல் என்ன நாடகத்தில் நடிச்சாராம்? அதையெல்லாம் விவரமாகக் கேட்டிருப்பீங்களே?

சரோ: கேட்காமல் இருப்பேனா? 'ராஜ பக்தி' நாடகம் என்று சொல்லியிருக்கிறார்.

பெரும்பாலும் நகர சபாக்களில் பாட்டுக் கச்சேரிகளை அறவே நிறுத்தி விட்டார்களே, இதை நீங்கள் வரவேற்கிறீர்களா?

சுலோ: நல்ல கேள்வி கேட்டீர்கள்! பாட்டுக் கச்சேரிகள் நிறைய சபாக்களில் இடம் பெற வேண்டும் என்று சொல்பவர் எங்கள் வீட்டுக்காரர். அவர் கட்சிதான் நானும். சில சபாக்களில் கர்நாடக சங்கீதக் கச்சேரிக்கு அவ்வப்போது ஏற்பாடு செய்து வருகிறார்கள். அதில் என் கணவர் காரியதரிசியாக உள்ள திருவட்டீசுவரர் சபாவும் ஒன்று என நான் சற்றுப் பெருமையாகச் சொல்லிக் கொள்வேன். சங்கீதக் கச்சேரிகள் நிறைய நடைபெற வேண்டும் என்றுதான் சபாக்கள் ஏற்பட்டன. பின்னர் கச்சேரியுடன் டான்ஸ் புரோகிராம்கள் இருந்தன. டான்ஸ் நிகழ்ச்சி

இவ்வாரம் உரையாடலில் பங்கு கொள்வோர்:

ஸ்ரீமதி சரோஜா சேஷாத்திரி

ஸ்ரீமதி சுலோசனா முத்து



களுக்கு மவுசு ஏற்பட்டு அதுவே பிரதானம் வகித்தது. கச்சேரிகள் குறைந்தன....

இரண்டுக்கும் ஆதரவு மங்கி, நாடகங்களுக்குத்தான் இப்போது மவுசு!...

சரோ: ஆமாம். அதனால்தான் 'பே மாஸ்டர்' வேலை பார்த்து நிறையச் சம்பளம் வாங்கி வந்த என் கணவர் இப்போது முழு நேர நாடக நடிகராக மாறிவிட்டார்! நாடகங்களை டைரக்ட் செய்யவும் முன் வந்துவிட்டார்.

கலா: எத்தனை நாடகங்களில் நடித்திருப்பார்?

சரோ: ஐந்நூறு நாடகங்களுக்கு மேல் இருக்கும்! பெயரை யெல்லாம் எழுதி வைத்திருக்கிறார். நானூறு நாடகங்களை டைரக்ட் பண்ணியிருக்கிறார்...

நாடகங்களுக்குத் தவறாமல் நீங்கள் வருவதுண்டா? எந்த மாதிரி நாடகங்களை நீங்கள் விரும்புகிறீர்கள்?

கலா: சமூக நாடகங்கள்தான் விருப்பம். புராண நாடகமானால் மனோகர் குழுவின் நாடகங்கள் ரொம்பப் பிடிக்கும்.

உங்கள் கணவர் நடிக்கும் நாடகங்களில் உங்களுக்குப் பிடித்த நாடகம் எது? அந்த நாடகம் பார்த்தபோது தன்னை மறந்து லயித்ததுண்டா?

சரோ: 'நெஞ்சே நீ வாழ்க' நாடகம்தான் எனக்கு ரொம்பப் பிடித்தது. லஞ்சம் வாங்காமல், கடமை தவறாத ஹெட் கிளார்க் பாத்திரம்.... பல தடவை பார்த்து ரசித்தேன். நீங்கள் சபா நிகழ்ச்சிகளுக்குப் போய் வந்து அதைப் பற்றிக் கணவரிடம் விமர்சனம் செய்வதுண்டா?

கலா: உண்டு. என் கணவர் அமெச்சூர் நாடகக் குழுக்களை ஆதரிக்கும் உள்ளம் கொண்டவர். அவரேகூடச் சில வருஷங்களுக்கு முன்னால் நாடகத்தில் நடித்து வந்தார். 'ஆனந்த விகடன்' சிறுகதைப் போட்டியில் முதல் பரிசு பெற்ற 'கடவுள் எங்கே' கதையை நாடகமாக்கி, அந்த நாடகத்தில் இவரும் நடித்தார்.

அது போகட்டும். உங்கள் கணவர் மற்றப் பெண்களுடன் சேர்ந்து நடிப்பதைப் பார்த்து....

சரோ: உம், புரிகிறது. தயங்கித் தயங்கிக் கேட்கிறீர்களே!... ஆரம்பத்தில் அதாவது கல்யாணமான புதிதில் ஆட்சேபம் பண்ணியிருக்கேன்! இளம் நடிகைகளுடன் ரொம்ப நெருங்கி நடித்ததற்காகச் சண்டை கூடப் போட்டுப் பிறகு சமாதானம் அடைந்திருக்கிறேன். இப்பவெல்லாம் ஆட்சேபிக்கிறதில்லை.... அது சரி, இப்போது சபாக்களில் புதிய மாறுதல்கள் ஏற்பட்டு வருகின்றனவே, பார்த்தீர்களா?

கலா: என்ன மாறுதல்?

சரோ: சினிமா காலைக் காட்சி, பிக்னிக் என்றெல்லாம் சபாக்கள் அமர்க்களமாய் விளம்பரப்படுத்துவதைத்தான் சொல்கிறேன். இதைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

கலா: இந்தக் கேள்விக்கு என் கணவர் ஒரு கூட்டத்தில் சொன்னதையே நானும் சொல்ல விரும்புகிறேன்.

சென்னை சபாக்களில் சினிமாக் காட்சிகளும் பிக்னிக்குகளும் ஆரம்பித்திருப்பது ஆட்சேபிக்கத் தக்கதுடன், கண்டிக்கத் தக்கதுமாகும்.

ஒரு சமயம் — பதினான்கு வருஷங்களுக்கு முன்னால் பதினைந்தே சபாக்கள்தான் உண்டு. இப்போது வட்டத்துக்கு வட்டம் சபாக்கள் வந்துவிட்டன. சபாக்கள் பெருகுவதை வரவேற்க வேண்டும். சபாக்களுக்கிடையில் போட்டி இருக்க வேண்டியது அவசியம். ஆனால் அது நல்ல கலை நிகழ்ச்சிகளை நடத்துவதில் இருக்கணும். இசை, நாட்டியம், இரண்டும் குறைந்துவிட்டது போல, சினிமாக் காட்சிகளைச் சபாக்கள் போட்டி போட்டுக் கொண்டு திரையிட்டால் நாடகங்கள்கூட நாளாவட்டத்தில் நடக்காது; நசித்துப் போய்விடும். ஏற்கனவே தொழில் முறை நாடகக் குழுக்கள் பல கலைக்கப்பட்டு விட்டன. அமெச்சூர்களுக்கும் ஆபத்து வந்துவிடும்.

சபாக்கள் இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழை வளர்க்கத்தான் பாடுபட வேண்டும். பட்டி மன்றங்கள், கவியரங்கங்கள் ஆகியவற்றை நடத்திப் பெயர் வாங்கச் சபாக்கள் போட்டி போடலாம்.

சரோ: பலே! பலே! உங்கள் வீட்டுக்காரர் மாதிரியே நீங்களும் காரசாரமாகப் பேசுகிறீர்களே!... 'நாடகக் கலைக் காவல'ரின் மனைவி இல்லையா!

(கலா மண்டபத்தில் நாடகம் ஆரம்பமாக 'டிங் டிங்' என மணி அடிக்கும் ஓசை கேட்டது. இருவரும் பேச்சை முடித்துக்கொண்டு தங்கள் இருக்கைகளை நாடிச் சென்றனர்.)

உரையாடல் தொகுப்பு: **ஏ. சுவாமிநாதன்.**

புதுதில்லி உத்தர ஸ்வாமிமலை ஆலயத்தில் கல்யாண மண்டபம்

முருகப் பெருமானுடைய ஏழாவது படைவீடு என்றும் வடவேரகம் என்றும் புகழ்பெற்ற புதுதில்லி உத்தர ஸ்வாமிமலை ஆலயத்தை அடுத்துக் கட்டப்பெறவிருக்கும் கல்யாண மண்டபத்திற்கு நிதி திரட்டுவதற்காக ஸ்ரீ தியாகபிரம்ம சபையார் 1972 மார்ச் 3ந் தேதி முதல் நான்கு தினங்கள் ஒரு சங்கீத விழா நடத்துகிறார்கள். லோதி எஸ்டேட் ஸர்தார் படேல் வித்யாலயா மண்டபத்தில் நடைபெறவிருக்கும் இவ்விழாவில் என். ரமணி, பி. வி. ராமன், பி. வி. லக்ஷ்மணன், பேபி காயத்ரி, எம். எஸ். கோபாலகிருஷ்ணன், உமையாள்புரம் சிவராமன் ஆகிய வித்வான்கள் கச்சேரி செய்வார்கள். குமாரி புஷ்கலாவின் பரதநாட்டியக் கச்சேரியும் உண்டு. காமகோடி பெரியவாள் ஸ்ரீமுகம் அளித்துள்ள இந்த நற்பணியில் ஆஸ்திகர்கள் அனைவரும் கலந்துகொள்வார்கள் என்று நம்புகிறோம்.

அலை ஓசை




13. வானம் இடிந்தது!

ராகவன் பேசத் தொடங்குவதற்கு ஒரு நிமிஷம் ஆயிற்று. பேசத் தொடங்கியபோதும் அவன் கேட்க விரும்பியதை உடனே கேட்க முடியவில்லை. பேச்சை வேறுவிதமாக ஆரம்பித்தான்.

''அம்மா! அங்கே யார்? இன்னும் யாராவது வந்திருந்தார்களா? புதிய குரல் ஏதோ கேட்டதே?'' என்றான்.

''ஆமாண்டா, அப்பா! பீஹாரிலே பூகம்பம் என்று சொல்லி உண்டிப் பெட்டியுடனே நாலு காந்தி குல்லாக்காரர்கள் வந்தார்கள். உன்னுடைய அப்பாவின் சமாசாரம் தெரியாதா? ஒன்றும் கிடையாது என்று சொல்லி விரட்டி அடித்துவிட்டார்!''



இதைக் கேட்டதும் ராகவனுடைய முகம் சுருங்கியதைக் காமாட்சி அம்மாள் கவனித்தாள். ஆனால், அதன் காரணத்தை அவள் நன்கு உணர முடியவில்லை.

சற்று நேரம் ராகவன் முகத்தைத் தொங்கப் போட்ட வண்ணம் இருந்தான். காமாட்சி அம்மாளும் அவனிடம் பேச்சுக் கொடுக்கப் பயந்து கொண்டு சும்மா இருந்தாள். ராகவன் இன்னும் ஏதோ முக்கியமான விஷயம் தன்னைக் கேட்கப் போகிறான் என்று அவளுடைய உள்ளுணர்ச்சிக்குத் தெரிந்திருந்தது.

திடீரென்று அவன் தலையைத் தூக்கித் தாயாரை ஏறிட்டுப் பார்த்து, "அம்மா! அப்பாவும் நீயுமாகச் சேர்ந்து என் வாழ்க்கையைக் கெடுத்துவிட உத்தேசித்திருக்கிறீர்களா? நான் சந்தோஷமாயிருப்பதில் உங்கள் இருவருக்கும் இஷ்டமில்லையா? அப்பாவின் சுயநலம் உன்னையும் பிடித்துக் கொண்டு விட்டதா?" என்று ஆத்திரம் நிறைந்த குரலில் கேட்டான்.

இந்த மாதிரி கேள்வியைத்தான் காமாட்சி அம்மாள் எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள். ஆகையால், அவள் கொஞ்சமும் பரபரப்பு அடையாமல் சாவதானமாகப் பதில் சொன்னாள்.

"ராகவா! உன் அப்பா சமாச்சாரத்தை என்னிடம் கேட்காதே! என்னைப் பொறுத்தவரையில் கேள், சொல்கிறேன். உன்னைப் பெற்ற நாளிலிருந்து இன்று வரையில், இந்த இருபத்துநாலு வருஷங்களாக, உன்னுடைய சந்தோஷத்தைத் தவிர எனக்கு வேறு எண்ணமே கிடையாது! உன்னுடைய சந்தோஷத்துக்காக என்னை என்ன செய்ய வேண்டும் என்கிறாயோ, அதைச் சொல்! கிணற்றில் விழச் சொன்னால் விழுந்து விடுகிறேன்; விஷத்தைக் குடிக்கச் சொல்கிறாயா, குடித்துவிடுகிறேன். ஆனால், உன்னுடைய சந்தோஷத்தைக் காட்டிலும் என்னுடைய சுய நன்மையைப் பெரியதாகக் கருதுகிறேன் என்று மட்டும் சொல்லாதேடா அப்பா!" என்று கூறி விட்டுக் கண்களில் பொங்கி வந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள்.

மௌனமாகச் சிந்தனையில் ஆழ்ந்திருந்த ராகவனைப் பார்த்துக் காமாட்சி அம்மாள் மறுபடியும், "எதனால் அப்படிக் கேட்டாய், ராகவா! என்ன காரணத்தினால் என்னைச் சுயநலக்காரி என்கிறாய்?" என்றாள்.

"எனக்குப் பிடிக்காத பெண்ணை என் தலையில் கட்டிவிடப் பார்க்கிறாயே, அதற்குப் பெயர் என்ன......?" என்று ராகவன் பொருமினான்.

"ராகவா! நீ எவ்வளவோ தெரிந்தவன்; படிப்பிலே இணையில்லை என்று இந்தியா தேசமெங்கும் பேர் வாங்கியவன். அப்படியிருந்தும் என் பேரில் தவறான பழியைப் போடுகிறாயே? உனக்குப் பிடிக்காத பெண்ணைக் கல்யாணம் செய்து கொள்ளும்படி நான் சொல்வேனா? எப்போதாவது சொன்னதுண்டா? உன் அப்பா எது வேணுமானாலும் சொல்வார். வீடு கட்டிய கடன் பாக்கியை அடைப்பதற்கு உனக்கு வரும் வரதட்சிணையை அவர் நம்பியிருக்கிறார். அவர் பணத்தாசை பிடித்தவர். ஆனால் நான் எப்போதாவது பணத்தைப் பெரிதாய் நினைத்ததுண்டா? ராகவா! வாசலில் வருகிற பிச்சைக்காரப் பெண்ணை உனக்குப் பிடித்திருந்து அவளைக் கல்யாணம்



பண்ணிக் கொள்கிறேன் என்று நீ சொன்னால், அதற்கு நான் குறுக்கே நிற்க மாட்டேன். செல்வச் சீமானுடைய பெண்ணைக் காட்டிலும் அவளை அதிக அன்போடு வரவேற்பேன். உனக்குப் பிடிக்காத பெண்ணை ஒரு நாளும் கல்யாணம் செய்து கொள்ளும்படி சொல்ல மாட்டேன். உன் அப்பா சொல்கிறார் என்று நீ சம்மதித்தால்கூட நான் சம்மதிக்க மாட்டேன்!'' என்று காமாட்சி அம்மாள் கூறியபோது அவளுடைய கண்களிலிருந்து மீண்டும் கலகலவென்று கண்ணீர் பொழிந்தது.

''இந்த மாதிரி நீ கண்ணீர்விட ஆரம்பித்தால் நான் உன்னுடன் பேசவே தயாராயில்லை. எங்கேயாவது போய்த் தொலைகிறேன். சமுத்திரத்திலே விழுந்து சாகிறேன். இல்லாவிட்டால் ரயில் தண்டவாளத்தில் போய்ப் படுத்துக் கொள்கிறேன்......''

''வேண்டாமடா ராகவா! வேண்டாம்! இப்படியெல்லாம் சொல்லாதே! நான் இனிமேல் கண்ணீர்விடவில்லை. நீ கேட்க வேண்டியதைக் கேள், செய்ய வேண்டியதைச் செய்!'' என்று கூறிக் காமாட்சி அம்மாள்



மீண்டும் நன்றாய்க் கண்ணைத் துடைத்துக் கொண்டாள்.

"நான் சந்தோஷமாயிருப்பதுதான் உன்னுடைய விருப்பம் என்றால், தாரிணியை ஏன் அப்படி விரட்டி அடித்தாய்?" என்று ராகவன் மிக்க எரிச்சலுடன் கேட்டான்.

"ஐயையோ! இதென்ன வீண் பழி! நானா அந்தப் பெண்ணை விரட்டி அடித்தேன்? உண்மையாகச் சொல், ராகவா! நான் விரட்டி அடித்தால் அவள் போய்விடக்கூடிய பெண்ணா...?"

"அவள் ஏன் அவ்வளவு அவசரமாகப் போக வேண்டும்? நான் வெளியே போய்த் திரும்பி வருவதற்குள்ளே அவள் ரயில்வே ஸ்டேஷனுக்குப் பறந்தோடிப் போய் பம்பாய் மெயில் ஏறிவிட்டாளே? அப்படி அவள் மிரண்டு ஓடும்படி ஏதோ நீ சொல்லித்தானே இருக்க வேண்டும்?"

"ராகவா! ஆகாசவாணி பூமாதேவி சாட்சியாகச் சொல்கிறேன். அவளை ஒரு வார்த்தைகூடத் தப்பாகச் சொல்லவில்லை. சொல்லியிருந்தால் அவள் நீ வருகிற வரையில் இருந்து உன்னிடம் புகார் சொல்லியிருக்கமாட்டாளா? அவள் என்ன பட்டிக்காட்டுப் பெண்ணா? பயந்தவளா? உன்பேரில் அவளுக்கு உண்மையில் அன்பு இருந்தால் அப்படி நான் சொன்னதற்காகப் போய்விடுவாளா? யோசித்துப் பார்!"

ராகவன் கொஞ்ச நேரம் யோசித்துப் பார்த்த பிறகு, "பின்னே என்னதான் இங்கே உண்மையில் நடந்தது, நான் இல்லாத போது? நீ என்ன சொன்னாய்? அவள் என்ன சொன்னாள்?"

"ஐயையோ! அவள் சொன்னதையெல்லாம் சொல்வதற்கு என் நாக்குக் கூசும். அவள் என்னமோ நினைத்துக் கொண்டு வந்தாளாம். வந்து பார்த்த பின் ரொம்ப ஏமாற்றமாய்ப் போய் விட்டதாம். நானும் உன் அப்பாவும் ரொம்பக் கர்நாடகமாம்! எங்களைப் பற்றி அவள் எது வேணுமானாலும் சொல்லட்டும். உன்னைச் சுத்த அசடு என்று சொன்னாள், ராகவா! முதல் கிளாஸிலிருந்து எம். ஏ.வரை பரீட்சைக்குப் பரீட்சை மெடலும் பரிசும் வாங்கிய உன்னை, 'அசடு' என்று சொன்னாள், ராகவா! அதுதான் எனக்குப் பொறுக்கவில்லை. புடவை கட்டிக் கொண்ட பெண் யாரைப் பார்த்தாலும் நீ பின்னோடு பல்லைக் காட்டிக் கொண்டு போகிறாயாம்! உனக்கு நல்ல புத்தி சொல்லி அடக்கி வைக்கும்படி சொல்லிவிட்டுப் போவதற்காக மதராஸுக்கு வந்தாளாம். இன்னும் என்னவெல்லாமோ கர்ண கடூரமாகச் சொன்னாள். என்னால் பொறுக்கவே முடியவில்லை!" என்று சொல்லிக் கண்களைப் புடவைத் தலைப்பினால் மூடிக் கொண்டு காமாட்சி அம்மாள் விம்மினாள்.


ராகவனுக்குக் கோபம் பொங்கிக் கொண்டு வந்தது. ஆனால் கோபம் அம்மாவின் பேரில் வந்ததா, தாரிணியின் பேரில் வந்ததா என்பது அவனுக்கே சரியாக விளங்கவில்லை.

தாரிணியின் கடிதத்தில் எழுதியிருந்த ஒரு விஷயம் ராகவனுக்குச் சட்டென்று ஞாபகம் வந்தது.

"அழுகையை நிறுத்து அம்மா! இன்னும் ஒரே கேள்விக்கு மட்டும் பதில் சொல்! தாரிணியின் கால்களை எதற்காகவாவது நீ தொட்டதுண்டா? தொட்டு அவளை ஏதாவது கேட்டுக் கொண்டாயா?" என்றான் ராகவன்.

"ஓகோ! அதை அவள் உனக்கு எழுதியிருக்கிறாளா? என்னவெல்லாம் பொய், புனைகருட்டுச் சேர்த்து எழுதியிருக்கிறாளோ, அது எனக்குத் தெரியாது. ஆனால், நான் நடந்ததை உள்ளதை உள்ளபடி சொல்கிறேன். அவள் என்னைப் பற்றி அலட்சியமாய்ப் பேசிய பிறகு எனக்குக் கொஞ்சம் பயமாய்ப் போய்விட்டது. அதனால் நான் அவளிடம், 'பெண்ணே! என் பிள்ளைக்கு இந்தப் பக்கத்தில் ஆயிரம் பேர் இருபதினாயிரம், முப்பதினாயிரம் பணத்துடன் பெண்ணைக் கொடுக்கக் காத்திருக்கிறார்கள். ஆனால், ராகவனுக்கு உன்னைத்தான் பிடித்திருக்கிறது. எப்படியாவது அவன் சந்தோஷமாயிருக்க வேண்டும் என்பதுதான் என் பிரார்த்தனை. சாதி, குலம், நடவடிக்கை எல்லாம் வித்தியாசமாயிருந்தாலும் ஏதோ எங்கள் பாஷையாவது நீ பேசுகிறாயே, அது வரையில் சந்தோஷந்தான். ஒரே ஒரு பிரார்த்தனை உனக்குச் செய்து கொள்கிறேன். என்னையும் என் குழந்தையையும் பிரித்து விடாதே! அவன் ஒருவனுக்காகத்தான் இந்த உயிரை நான் வைத்துக் கொண்டிருக்கிறேன். அவன் நன்றாயிருக்க வேண்டும் என்றுதான் அல்லும் பகலும் அனவரதமும் ஸ்ரீராமச்சந்திர மூர்த்தியைத் தியானித்துக் கொண்டிருக்கிறேன். அவனும் நீயும் எங்கே போனாலும் எங்கே இருந்தாலும் என்னையும் உங்களோடு அழைத்துக் கொண்டு போ! உங்கள் இருவருக்கும் பணிவிடை செய்துகொண்டிருப்பதுதான் எனக்கு இந்த வாழ்க்கையில் இனிமேல் சந்தோஷம்! இந்த ஒரு வரத்தை எனக்குக் கொடு! உன் காலில் விழுந்து கேட்டுக் கொள்கிறேன்!' என்று சொல்லி அவளுடைய காலைத்



துணிகளை
அதிக
வெண்மையாக
சலவை செய்கிறது
வண்ணத் துணிகளை
அதிக
பிரகாசமாக
சலவை செய்கிறது
துணிகளுக்கும்,
கைகளுக்கும்
அதிக
பாதுகாப்பு


NEW!
TRIPLE ACTION
def
WASHES WHITEST

துரிதமாக. ஜாக்கிரதையாக. நிச்சயமாக.

எப்படி?

ஓரிடத்திலிருந்து
மற்ருெரு இடத்திற்கு
நேரிடை
பார்சல் சர்வீஸ்



இப்போது இடையில் நிற்காதபடி ஒரு நகரத்திலிருந்து மற்ருெரு நகரத்திற்கு நேராக எங்கள் லாரிகளைச் செலுத்துகிறோம். இந்த துரித சர்வீஸை எங்கள் வாடிக்கையாளர்கள் பெரிதும் வரவேற்கின்றனர்.

ஏனெனில் இந்த முறையில் பார்சல்களை மேலும் துரிதமாக, ஜாக்கிரதையாகக் கொண்டு சேர்க்க முடிகிறது. இது போன்ற துரித சர்வீஸ்களை நாங்கள் மேலும் விரிவுபடுத்தி, பல நகரங்களை நேரிடையாக இணைத்து வருகிறோம்.

இந்த சர்வீஸை வியாபாரிகள் சமூகம் மிக மிக வரவேற்கிறது. ஏனெனில் வியாபாரத்திற்கான சாமான்களை ஜாக்கிரதையாக தடங்கலின்றி அடைவதால் அவர்கள் தேவையான அளவே ஸ்டாக் செய்கின்றனர். இதனுல் அவர்கள் மூலதனத்தை அனுவசியமாக முடக்கத் தேவையில்லை.

இந்தச் சிறப்பான பணி ஸதர்ன் ரோட்வேஸினுல் எப்படி முடிகிறதென்ருல்:

- தனியார் துறையில் ஸதர்ன் ரோட்வேஸ் நிறுவனமே மிகவும் பெரிய ஸ்தாபனம்.
- அவர்கள் தங்களுக்குச் சொந்தமான லாரிகளை இயக்குகிருர்கள்.
- அவர்களின் பயிற்சி பெற்ற ஊழியர்கள், லாரி ஸ்தாபனத்தின் ஒவ்வொரு இயக்கத்தையும் தனித்தனியே கண்காணிக்கின்றனர்.
- அவர்களின் டிரைவர்கள், உடலியலிலும், உளவியலிலும் பொருத்து நடத்தும் பரிசோதனைகள், மற்றும் தூரத்தைப் பற்றி மதிப்பிடும் பரிசோதனைகள், கண் கால்களிடை கச்சித ஒத்துழைப்புக்கான பரிசோதனைகள் ஆகியவற்றிற்கு உள்ளாகிய பிறகுதான் தேர்ந்தெடுக்கப் படுகிருர்கள்.
- 100 மைல்கட்கு ஒன்றுவீதம் ரிப்பேர் மற்றும் பராமரிப்புக்கான வசதிகொண்ட தொழில் பட்டறைகள் அமைத்திருக்கிருர்கள்.

தென் இந்தியா முழுமையிலும் சரக்குகளை புக் செய்யும் ஆபீஸ்கள் பரவி உள்ளதால் மக்களிடை ஸதர்ன் ரோட்வேஸ பெருநம்பிக்கை பெற்றிருக்கிறது.

உங்கள் நம்பிக்கைக்கு உரியது டிவிஎஸ்

TVS

ஸதர்ன் ரோட்வேஸ்
பிரைவேட் லிமிடெட்
(இது ஒரு டிவிஎஸ்
ஸ்தாபனம்)
மதுரை

தொட்டேன்! உடனே, 'டாம்! நான்ஸென்ஸ்!' என்றெல்லாம் உன் அப்பா திட்டுவதுபோல் என்னைத் திட்டினுன். அதோடு, 'உங்களுக்கு வயசாச்சே? புத்தி எங்கே போச்சு! நானே சாதி, மதம் ஒன்றும் இல்லாதவள். கர்நாடக வைதிகமாகிய உங்களுக்கும் எனக்கும் எப்படிச் சரிக்கட்டி வரும்? உங்கள் பிள்ளைக்குக் கொஞ்சம் புத்தி சொல்லித் திருத்துங்கள்!' என்று சொல்லிவிட்டு விடுவிடென்று போய்விட்டாள். அப்பா, ராகவா! நான் சொல்லுவதை நம்புவது உனக்குக் கஷ்டமாகத்தானிருக்கும். அவள் ஏன் அப்படி அவசரப்பட்டுக் கொண்டு போனுள் என்று எனக்கே புரியவில்லை. அவள் இங்கே இருந்த போது யாரோ ஒருவன் வந்து கதவைத் தட்டி, 'தாரிணி அம்மாள் இங்கே இருக்கிறுளா?' என்று கேட்டான். இவள் அவசரமாய் எழுந்து போய் ஒரு கடிதத்தை வாங்கிக் கொண்டு வந்தாள். கடிதத்தைப் படித்ததும் அவள் முகத்தில் ஒரு மாறுதல் ஏற்பட்டது. 'நான் போய் வருகிறேன். உங்கள் பிள்ளையைக் கெடுத்து விடுவேன் என்று பயப்பட வேண்டாம்' என்று சொல்லிக் கொண்டே அவசரமாய் நடந்து வாசலில் நின்ற காரில் ஏறிக் கொண்டு போய் விட்டாள். போகும் அவசரத்தில் அவளுக்கு வந்த கடிதத்தைக்கூடக் கீழே போட்டுவிட்டுப் போய்விட்டாள். அதை நான் எடுத்து வைத்திருக்கிறேன். நீ வேணுமானுலும் அதைப் பார்!'' என்று சொல்லிக் கொண்டே காமாட்சி அம்மாள் எழுந்து போய் அலமாரியில் பத்திரப்படுத்தி வைத்திருந்த ஒரு கடிதத்தை எடுத்துக் கொண்டு வந்து கொடுத்தாள். ராகவன் அந்தக் கடிதத்தை வாங்கிக் கைகள் நடுநடுங்க நெஞ்சு படபடவென்று அடித்துக் கொள்ளப் படித்துப் பார்த்தான். அதில் சுருக்கமாக நாலைந்து வரிகள்தான் எழுதியிருந்தன.

''என் கண்ணே! என்னுடைய காரியம் நான் நினைத்ததைக் காட்டிலும் சீக்கிரம் ஆகிவிட்டது. இன்று மாலை மெயிலில் அவசியம் பம்பாய் புறப்பட வேண்டும். உடனே ஹோட்டலுக்கு வரமுடியாவிட்டால் ரயில் ஸ்டேஷனில் வந்து சேர்ந்து கொள். உனக்கும் டிக்கெட் வாங்கி விடுகிறேன். மிஸ்டர் ராகவன் காதல் தமாஷ்! எப்படி இருக்கிறது? ராகவனுக்கு ஏற்கனவே இரண்டாயிரம் ரூபாய் அபராதம் விதித்தது போதும். இன்னும் அவனுக்குத் தண்டம் வைக்காதே! ஏதாவது விபரீதத்தில் முடியப் போகிறது!''

கடன்பட்டார் பட்பட்டென அடித்தார்!



''சாதாரணமாக எல்லா மாட்சுகளிலும் பூஜ்யம் அடிக்கும் நீ இன்றைக்கு மட்டும் சரியான சமயத்தில் இரட்டை செஞ்சுரி அடித்து நம்ம கோஷ்டியைக் காப்பாற்றினுயே எப்படி?''

''அதில் ஒரு ரகசியம் இருக்கு. கேப்டன் என்னைக் கூப்பிட்டு 'இன்றைக்கு மட்டும் நீ ஒரு செஞ்சுரி அடித்தால் நீ எனக்குத் திருப்பித் தரவேண்டிய கடனில் பாதியைத் தரவே வேண்டாம்' என்றுர். அவ்வளவுதான்!''

--- கோட்டா மோகன்

இதைப் படித்து வருகையில் ராகவனுடைய கண்கள் சிவந்து நெருப்புப் பொறி பறந்தது. அவனுடைய நெஞ்சில் எரிமலை வெடித்து நெருப்பைக் கக்கியது. கொல்லன் துருத்தியில் வரும் காற்றைப் போல் அவனுடைய மூச்சு கொதித்துக் கொண்டு வந்தது.

கடிதத்தைப் படித்து முடித்ததும் ஆகாசம், பூமி, திக்குத் திகந்தம் எல்லாம் தாறுமாருக வெடித்தன. பட்டப் பகலில் இருள் கவிந்தது. வானத்துக் கிரகங்களும் நட்சத்திரங்களும் பொல பொல வென்று உதிர்ந்து ராகவன் தலை மீது விழுந்தன.

இத்தகைய உணர்ச்சிகளுக்கெல்லாம் உள்ளான ராகவன் சற்றுநேரம் ஸ்தம்பித்து உட்கார்ந்துவிட்டுத் திடீரென்று எழுந்தான். அம்மாவின் முன்னிலையில் தரையில் விழுந்து சாஷ்டாங்கமாக நமஸ்காரம் செய்தான்.

''என்னைப் போல் மூடன் யாரும் இல்லை. தாரிணி சொன்னது சரிதான். அவளுடைய காலைப் பிடிக்கும்படியான நிலையில் உன்னை வைத்தேன் அல்லவா? இந்த க்ஷணம் முதல் நீதான் எனக்குத் தெய்வம். நீ என்ன சொல்லுகிறுயோ, அதைக் கேட்கிறேன். நீ யாரைக் கல்யாணம் செய்து கொள்ளச் சொல்கிறுயோ, அவளையே கலியாணம் செய்து கொள்கிறேன்!'' என்றுன்.

இவ்விதம் சொல்லிவிட்டுக் கையில் உள்ள கடிதத்துடன் விடுவிடு என்று நடந்து மச்சுக்குப் போனுன் ராகவன். அங்கே மேஜை மேலே இருந்த தாரிணியின் கடிதத்தையும் தாரிணிக்குத் தான் எழுத ஆரம்பித்திருந்த கடிதத்தையும் சேர்த்துச் சுக்குச் சுக்காகக்

கிழித்துக் குப்பைக் கூடையில் போட்டான்.

காமாட்சி அம்மாள் பூஜை அறைக்குள்ளே சென்று ஸ்ரீ ராம பட்டாபிஷேக படத்துக்கு முன்னால் பயபக்தியுடன் நமஸ்காரம் செய்து எழுந்தாள். இரண்டு கன்னத்திலும் போட்டுக் கொண்டாள்.

14. வண்டி வந்தது

இந்தக் கதையின் வாசகர்களை இப்போது நாம் பம்பாய்க்கு அழைத்துச் செல்ல வேண்டியதா யிருக்கிறது. பம்பாய்க்கு மட்டுமல்ல... கல்கத்தாவுக்கும் கராச்சிக்கும் டில்லிக்கும் லாகூருக்கும் கூட நம்முடன் வாசகர்கள் வரவேண்டியதாயிருக்கும். ஒரே நாளில் ஒரே நேரத்தில் அவ்வளவு தூர தூரமான இடங்களில் இருந்து கொண்டு அங்கங்கே நடக்கும் சம்பவங்களைக் கவனிக்கும்படியாகவும் நேரிடக்கூடும்!

பம்பாய் நகரின் ஒரு பகுதியான தாதரில் அடையாளம் கண்டுபிடிக்க முடியாத ஒரு வீதி. அடையாளம் கண்டு பிடிக்க முடியாத ஒரு வீடு. பல வீதிகள் ஒரே மாதிரியா யிருப்பதாலும் பல வீடுகள் ஒன்றைப் போல் இருப்பதாலும் அடையாளம் கண்டுபிடிக்க முடியாதவை என்று சொன்னோம். நாம் குறிப்பிடும் வீடு ஐந்து மாடிக் கட்டிடம். 'அதைப் போல அந்த வீதியின் இரு பக்கங்களிலும் அநேக கட்டிடங்கள் இருந்தன. ஒன்றைப் போல் ஒன்று அச்சில் வார்த்தது போல் தோற்றமளித்தன. வீதி முனையிலிருந்து மூன்றாவது வீடு நாம் குறிப்பிடும் வீடு என்று அடையாளம் வைத்துக்கொள்வோம். அந்த வீட்டின் ஒவ்வொரு மாடியிலும் பத்துக் குடித்தனங்கள் வீதம் மொத்தம் ஐம்பது குடித்தனங்கள்; ஜனத்தொகை மொத்தம் முந்நூறுக்குக் குறைவில்லை. ஒவ்வொரு குடும்பமும் இரண்டு அறைகளிலோ மூன்று அறைகளிலோ குடியிருந்தன. குடியிருக்கும் அறைகளைத் தவிர ஒரு குளிக்கும் அறையும் உண்டு.

அந்த வீட்டின் நாலாவது மாடியில் மூன்று அறைகளும் ஒரு குளிக்கும் அறையும் சேர்ந்த ஜாகையில் கிட்டாவய்யரின் சகோதரி ராஜம்மாள் சென்ற இருபது வருஷ காலமாக வசித்து வந்தாள். ஹிந்து சமூகப் பெண் குலத்தின் உத்தம குணங்கள் எல்லாம் ஒருங்கு சேர்ந்து உருவெடுத்தாற் போன்ற அந்த மாதரசி கல்யாணமாகிக் கணவனைக் கைப்பிடித்துப் பம்பாய்க்கு வந்த பிறகு அந்த மூன்று அறைக்குள்ளேயே தன்னுடைய ராஜ்யபாரத்தைச் செலுத்தி வந்தாள். இருபது ஆண்டு இல்வாழ்க்கையின் இன்ப துன்பங்களையெல்லாம் அந்த மூன்று அறைக்குள்ளேயே அவள் அநுபவித்தாள். குழந்தைகளைப் பெற்று வளர்த்ததும் அங்கே தான். குழந்தைகளைப் பறி கொடுத்து விட்டு அலறி அழுததும் அங்கேதான். கணவனுடன் கூடிக் குலாவிச் சிரித்துக் களித்ததும் அங்கேதான். கணவனுடைய விசித்திர நடவடிக்கைகளை எண்ணி உள்ளம் வெதும்பி இதயம் வெடித்துக் கண்ணீர் பெருக்கியதும் அதே இடத்தில்தான்.

அந்த மூன்று அறைகளில் ஒன்றிலே தற்சமயம் ராஜம்மாள் படுத்த படுக்கையாகி, பிழைப்போம் என்ற நம்பிக்கையையும் இழந்து இருபது தினங்களுக்கு மேலாகக் கிடந்தாள். வீட்டில் வைத்திய சிகிச்சைக்கும் பணி விடைக்கும் அவ்வளவு வசதி போதாது என்று அவளை ஆஸ்பத்திரியில் சேர்ப்பதாக அவளுடைய கணவர் துரைசாமி எவ்வளவோ சொல்லிப் பார்த்தார். ஆஸ்பத்திரிக்குப் போக ராஜம் கண்டிப்பாக மறுத்து விட்டாள். "இருபது வருஷங்களாக இருந்த இடத்திலேயே இருந்து கண்ணை மூடுகிறேன்; ஆஸ்பத்திரிக்குப் போக மாட்டேன்" என்று பிடிவாதமாகச் சொல்லி விட்டாள்.

பத்து வருஷங்களுக்கு முன்னால் ஒரு மகாராஷ்டிர வேலைக்காரி வீட்டுச் சில்லறை வேலைகளைச் செய்வதற்காக வந்தாள். ராஜத்தை அவளுக்கு ரொம்பப் பிடித்து விட்டது. வீட்டு வேலைகளையெல்லாம் அவளே இப்போது செய்தாள். ராஜம் படுத்துக் கொண்ட பிறகு வீட்டு வேலைகளைப் பார்த்துக் கொண்டதோடு ராஜத்துக்குக் கஞ்சி வைத்துக் கொடுப்பது மருந்து கொடுப்பது முதலிய காரியங்களையும் அந்த வேலைக்காரியே செய்து வந்தாள். கூடிய வரையில் குழந்தை சீதா அவளுக்கு உதவி புரிந்து வந்தாள்.

சீதா பள்ளிக்கூடம் போவதை நிறுத்தி ஒரு வருஷம் ஆயிற்று. ராஜம்மாள் மிக்க முன்யோசனையுடன் குழந்தையை எந்த மாதிரி இடத்தில் கல்யாணம் செய்து கொடுக்க வேண்டியிருக்குமோ என்னமோ என்று எண்ணி அவளைச் சமையல் முதலிய வீட்டு வேலைகளுக்குப் பழக்கப்படுத்திக் கொண்டு

இன்று—ஜானகியின் வீட்டுவேலை பூராவும் முடிந்தது. அம்மாவைப் பார்த்துவிட்டு, வரும் வழியில் கடைக்கும் போய் வந்தாயிற்று. இப்போது — மகன் ராஜனுடன் விளையாடும் நேரம்.



"என்ன இருந்தாலும் 'ஹார்லிக்ஸ்' தரும் முழுமையான ஊட்டச்சிறப்பே தனி"

என்கிறாள் ஜானகி

முழு ஆடைப்பால், செழுமையான கோதுமை இவை தரும் நிறைவான பயனும் புரதச்சத்தும் நிரம்பியது 'ஹார்லிக்ஸ்'.

அன்றாட உணவில் விட்டுப்போகும் ஊட்டக்குறையை 'ஹார்லிக்ஸ்' ஈடுசெய்து உடலுக்கு உறுதியும் அதிக சக்தியும் அளிக்கிறது.

80 ஆண்டுகளுக்கும் மேலாக டாக்டர்கள் சிபாரிசு செய்து வரும் 'ஹார்லிக்ஸ்' தாய்மார்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமானது.

'ஹார்லிக்ஸ்' அருந்துங்கள். தரமான சத்தும் அதிக சக்தியும் அளிப்பது அதுவே.



முழுமையான ஊட்டம்பெற–'ஹார்லிக்ஸ்'

ஹார்லிக்ஸ்' பதிவு பெற்ற டிரேட் மார்க்.

HL-2916 A

டெட் சலவை செய்யும் கட்டி
டெடர்ஜென்ட் சக்தி செறிந்தது





டெட் டெடர்ஜென்ட் சலவைக் கட்டி
சோப்பைவிட 50% அதிக துணிகளை, அதிவெண்மை- யாக சலவை செய்கிறது

—மென்னீரிலும், சாதாரணமாக நுரைவிடாத நீரிலும்

Shilpi HPMA-45/70 TH

வந்தாள். அது . இப்போது மிக்க சௌகரியமாயிருந்தது.

இதோ. இந்தக் குறுகலான மாடி வராந்தாவில் கைப்பிடிச் சுவர் ஓரமாக நின்று கீழே வீதியைக் குனிந்து பார்த்துக் கொண்டிருப்பது யார்?.... சந்தேகம் என்ன? அகன்று விரிந்த அவளுடைய வட்ட வடிவமான கண்களிலிருந்தே தெரிந்து விடுகிறதே! லலிதாவின் அருமை அத்தங்காள் சீதாதான் அவ்வளவு ஆர்வத்துடன் வீதியைப் பார்த்துக் கொண்டிருக்கிறாள்.

ஏதேனும் சந்தேகம் இருந்தாலும் அடுத்த நிமிஷமே தீர்ந்து விடுகிறது. உள்ளே இருந்து ''சீதா!'' என்று ஆணைக் குரல் கேட்கிறது. ''அம்மா! இதோ வந்து விட்டேன்!'' என்று வீணைக் குரலில் கூவிக் கொண்டு சீதா உள்ளே ஓடுகிறாள். மூன்று அறைகளில் ஒன்றில் படுத்திருக்கும் தாயாரின் அருகே செல்கிறாள். ''சீதா! ஏதோ கார் சத்தம் கேட்டதே!'' என்று ராஜம்மாள் தன் மெலிந்த முகத்திலே ஆர்வம் ததும்பக் கேட்கிறாள். ''இல்லே அம்மா! அது வேறே எங்கேயோ போகிற கார். இன்னும் நேரமாக வில்லேயே அம்மா! ரயிலே இப்போது தான் வந்திருக்கும்! ஸ்டேஷனிலிருந்து இங்கே வரக் கால் மணி நேரமாவது வேண்டாமா? இப்படி அவசரப்பட்டால் என்ன செய்கிறது?'' என்று கலகல வென்று வார்த்தைகளைக் கொட்டுகிறாள் சீதா.

இதற்குள் மறுபடியும் கார் சத்தம் கேட்கவே, சீதா வராந்தாவுக்கு ஓடி வந்து வீதிப்புறம் எட்டிப் பார்த்தாள். ஒரு மோட்டார் வந்து அந்த வீட்டு வாசலில் நின்றது. ''அம்மா! மாமா வந்தாச்சு! நான் கீழே போய் அழைத்துக்கொண்டு வருகிறேன்!'' என்று கூவிக் கொண்டே சீதா மாடிப் படிகளின் வழியாக ஓர் எட்டில் இரண்டு மூன்று படிகளைத் தாண்டிக் கொண்டு இறங்கினாள். இரண்டு மச்சு இறங்கியதும் கையில் தோல் பையுடன் டாக்டர் வருவதைப் பார்த்துத் தயங்கி நின்றாள். ''டாக்டர்! உங்கள் வண்டியா இப்போது வந்தது! ஊரிலிருந்து மாமா வந்து விட்டாராக்கும் என்று நினைத்தேன்!'' என்றாள். ''ஓகோ! உன் மாமா இன்றைக்கு வருகிறாரா? அவர் வந்த பிற்பாடாவது உன் அம்மாவுக்கு உடம்பு சரியாகிறதா, பார்ப்போம்!'' என்றார் டாக்டர். வழக்கம் போல் சீதா டாக்டர் கையிலிருந்த தோல் பையை வாங்கிக் கொண்டாள். பிறகு இருவரும் மௌனமாக மேலே ஏறி வந்தார்கள்.



ஸ்டெனோ : ''ஸார்! உங்களுக்கு ஒன் பிளஸ் த்ரீ பிறந்திருக்கிறதாம். பிரசவ ஆஸ்பத்திரியிலிருந்து ஃபோன் பண்ணிருக்க!''

- கோட்டா மோகன்.

நாலாவது மாடி வராந்தாவுக்கு வந்ததும் சீதாவின் ஆவல் அவளை மறுபடியும் வீதிப் பக்கம் எட்டிப் பார்க்கச் செய்தது. அச்சமயம் ஒரு கோச்சு வண்டி வந்து அந்த வீட்டு வாசலில் நின்றது. அந்த வண்டியிலிருந்து தன் தகப்பனாரும் மாமாவும் இறங்குவதைச் சீதா பார்த்தாள். உடனே சீதாவின் மௌனம் கலைந்து விட்டது. ''அம்மா! அம்மா! மாமா வந்தாச்சு! நிஜமாகவே வந்தாச்சு!'' என்று கூவிக் கொண்டு உள்ளே போனவள், ''முதலில் வந்தது மாமா இல்லே, அம்மா! டாக்டர் வந்தார்! டாக்டரை அழைத்துக்கொண்டு நான் மேலே வந்தேன். மேலே வந்ததும் வீதியைப் பார்த்தால், அப்பாவும், மாமாவும் கோச்சு வண்டியில் வந்து இறங்குகிறார்கள். ஒரு டாக்ஸி வைத்துக் கொண்டு வரக் கூடாதோ? அதனால்தான் இவ்வளவு தாமதம்....'' என்று அலாரம் கடிகாரம் மணி அடிப்பது போலப் பொழிந்தாள் சீதா.

''அதனால் என்ன சீதா? ஒருவேளை டாக்ஸி கிடைத்திராது. நீ மறுபடியும் கீழே போக வேண்டாம், அம்மா! இங்கேயே டாக்டருக்கு ஒத்தாசையாக இரு. அவர்கள் வந்து விடுவார்கள்'' என்றாள் ராஜம்.

சீதா கொஞ்சம் அதிருப்தியுடன் அங்கேயே இருந்தாள். டாக்டர் வழக்கம் போல் தர்மா மீட்டரை வைத்துப் பார்த்தார். முதுகிலே குழாயை வைத்துப் பார்த்தார்; தொண்டைக்குள் டார்ச் விளக்குப் போட்டுப் பார்த்தார். எல்லாம் பார்த்து விட்டு, 'பிரிஸ்க்ரிப்ஷன்' மாற்றி எழுதிக் கொண்டிருக்கும் சமயத்தில் துரைசாமியும் கிட்டாவய்யரும் வந்து விட்டார்கள்.

ராஜத்தைப் பார்த்ததும் கிட்டாவய்யர் திகைத்துப் போனார்.

கிராமத்தை விட்டுப் புறப்படும் போது கிட்டாவய்யர், உற்சாகக் குறைவுடன் கிளம்பினார். ஆனால் சென்னை

யில் பத்மலோசன சாஸ்திரி வீட்டுக்குப் போய் 'மாப்பிள்ளைப் பைய'னைப் பார்த்ததின் காரணமாக அவருக்குக் கொஞ்சம் உற்சாகம் ஏற்பட்டிருந்தது. வரன் நிச்சயமானதாகவே வைத்துக் கொள்ளலாம் என்று சுப்பய்யர் உறுதி சொல்லியிருந்தார். ஆகவே, சென்னையிலிருந்து பம்பாய்க்குப் புறப்பட்டபோது கிட்டாவய்யர் உற்சாகமாக இருந்தார். அந்த உற்சாகம் காரணமாக, 'ராஜத்துக்கு அப்படி ஒன்றும் உடம்பு அதிகமாயிராது. சரசு சொன்ன மாதிரி கொஞ்சம் அதிகப்படுத்தியே கடிதத்தில் எழுதியிருக்கலாம்' என்று அவருடைய மனம் எண்ணத்தொடங்கியது.

ஸ்டேஷனில் அவரைச் சந்தித்த துரைசாமியும் 'காபரா'ப் படுத்தும் முறையில் ஒன்றும் சொல்லவில்லை.

ஆகவே பல நாள் காய்ச்சலினால் உலர்ந்து மெலிந்து போயிருந்த ராஜத்தைத் திடீரென்று பார்த்ததும் கிட்டாவய்யரின் அன்பு நிறைந்த உள்ளம் பெரும் துன்பத்துக்கு உள்ளாயிற்று. ராஜத்தின் உடல் மெலிவு மட்டுமல்ல; அவளுடைய முகத் தோற்றத்தில் பிரதிபலித்த ஏதோ ஒரு சாயல், 'இவள் பிழைப்பது துர்லபம்' என்ற எண்ணத்தைக் கிட்டாவய்யரின் மனத்தில் உண்டாக்கியது. அந்த எண்ணத்தை மாற்றிக் கொண்டு 'ராஜம் பிழைப்பாள்' என்று உறுதி பெற விரும்பியவராய், கண்ணீர் ததும்பிய கண்களுடன் கிட்டாவய்யர் டாக்டரை நோக்கினார்.

''என்ன டாக்டர்? ராஜத்துக்கு உடம்பு எப்படி இருக்கிறது?'' என்று கேட்டார்.

''நீங்கள். இன்று வந்துவிட்டீர்கள் அல்லவா? இனிமேல் ஒருவேளை சீக்கிரம் குணமாகி விடும். உங்கள் சகோதரிக்கு உடம்புக் கோளாறு காற்பங்கு; மனக் கோளாறு முக்காற் பங்கு. 'எனக்கு உடம்பு குணமாகாது' என்று இந்த அம்மாள் திடமாகத் தீர்மானம் செய்து கொண்டிருக்கிறாள். நான் மருந்து கொடுத்து என்ன பயன்? நீங்கள் கொஞ்சம் பிரயத்தனம் செய்து உங்கள் சகோதரிக்கு மனோதைரியம் உண்டாக்குங்கள். அப்போது உடம்பும் சரியாய்ப் போய்விடும்.''

இவ்விதம் சொல்லிவிட்டு டாக்டர் புறப்பட்டார். அவரைக் கொண்டு போய் விடுவதற்காகத் துரைசாமியும் கூடச் சென்றார்.

கிட்டாவய்யர் தம் அருமைச் சகோதரியின் அருகில் சென்று உட்கார்ந்தார். ''ராஜம்! டாக்டர் சொன்னதைக் கேட்டாயல்லவா? தைரியமாக இருக்க வேண்டும், அம்மா! வீணாக மனத்தை அதைரியப்படுத்திக் கொள்ளக் கூடாது!'' என்றார்.

''அண்ணா! டாக்டர் சொல்வதை நீ நம்புகிறாயா? என்னைப் பார்த்தால் பிழைப்பேன் என்று தோன்றுகிறதா?'' என்று ராஜம் நேரடியாகக் கேட்டதும் கிட்டாவய்யரால் பதில் ஒன்றும் சொல்ல முடியவில்லை. இதுவரைக்கும் அவருடைய கண்களில் ததும்பிக் கொண்டிருந்த கண்ணீர் இப்போது கலகலவென்று கொட்டியது. அங்க வஸ்திரத்தினால் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு, ''நானே உன்னை அதைரியப்படுத்துகிறேன். இத்தனை நாட்களும் உன்னைக் கவனியாமல் இருந்து விட்டேனே என்பதை நினைத்தால் எனக்குத் துக்கம் பொங்கி வருகிறது'' என்றார்.

''அண்ணா! உன்பேரில் என்ன தவறு? இத்தனை நாட்களும் என்னை நீ கவனித்து ஆகக் கூடியது ஒன்றுமில்லை. என்னுடைய விதிக்கு நான் பிறந்தவள். நீ என்ன செய்வாய்? ஒருவேளை நீ இப்போது வராமல் இருந்து விடுவாயோ என்றுதான் பயந்து கொண்டிருந்தேன். எப்படியாவது நீ வருகிற வரைக்கும் உயிரோடு என்னை வைத்திருக்க வேண்டும் என்றுதான் பகவானைப் பிரார்த்தித்துக்கொண்டிருந்தேன். நல்லவேளையாக நீ வந்து விட்டாய். என் மனத்திலுள்ளதை உன்னிடம் சொல்லிவிட்டால் பாரம் தீர்ந்தது. அப்புறம் நிம்மதியாகக் கண்ணை மூடிப் பரமாத்மாவின் பாதாரவிந்தத்தை அடைவேன்!''

மீறி வந்த துக்கத்தையும் விம்மலையும் அடக்கிக் கொண்டு கிட்டாவய்யர், ''சீ, பைத்தியமே! இது என்ன இப்படிப் பேசுகிறாய்? அதெல்லாம் உனக்கு ஒன்றும் வராது. சீதாவுக்குக் கல்யாணம் பண்ணிப் பேரன் பேத்திகள் பெற்றெடுத்துச் சௌக்கியமா யிருப்பாய்!'' என்றார்.

அவநம்பிக்கையைக் குறிப்பிடும் சோகப் புன்னகை புரிந்தாள் ராஜம். மரணச் சாயல் படர்ந்திருந்த அவளுடைய முகத்துக்கு அந்தப் புன்னகை ஒரு கணம் உயிர் ஒளி அளித்தது.

அறையில் கதவண்டை சீதா கண்ணீருடன் நின்று தங்களுடைய சம்பாஷணையைக் கேட்டுக் கொண்டிருப்பதை ராஜம் கவனித்தாள். கையினால் சமிக்ஞை செய்து அவளை அருகில் அழைத்தாள்.

''சீதா! ஊரிலிருந்து மாமா வந்திருக்கிறாரே? காப்பி போட்டுக் கொடுக்க வேண்டாமா?'' என்று ராஜம்மாள் சொன்னதும், சீதா ''இதோ ஒரு நிமிஷத்தில் போட்டுக் கொண்டு வருகிறேன், அம்மா!'' என்று சமையலறைப் பக்கம் ஓடினாள். (தொடரும்)



அம்மா

ரா. கணபதி

21. சாரதையின் சபதம்

"தாங்கள் என்னைத் திரஸ்காரம் செய்கிறீர்கள். மங்களமான அறிவு வாய்ந்த தாங்கள் ஒருகாலும் மனமொப்பி இவ்வாறு செய்யமாட்டீர்கள். இதில் ஐயமே இல்லை. என்னுடைய பூர்வஜன்ம பாவங்களே இப்படித் தாங்கவொண்ணாத இடியாக வந்திருக்கின்றன." - சீதாதேவி ஸ்ரீராமனுக்கு லக்ஷ்மணன் மூலம் சொல்லியனுப்பியது.

(ரகு வம்சம் 14.62)

நோயிலும் துயரிலும் காந்தி இழந்திருந்த சாரதையின் முகத்தில் திடீரென ஒரு ஜோதிப் பிரகாசம் வந்து மேவியது. ஸ்படிகத்தின் தெளிவும், மல்லிகையின் மணமும், பூர்ண சந்திரனின் தண்மையும் அந்தத் திவ்ய வதனத்திலிருந்து பெருக்கெடுத்தன.

கொடுங்கள்வனே காளிமாதாவை அம்முகத்தில் கண்டான் எனில், ராமகிருஷ்ணருக்குக் கேட்பானேன்? தன்னை ஒளித்துக்கொண்டே சாரதாவதாரம் செய்திருந்த தேவி, ஏதோ ஓர் அளப்பரிய உந்துதலின்மீது அவ்வப்போது தன்னைப் புலர்த்திக் கொண்டாள் போலும். அந்தப் புலர்ச்சி சாரதைக்கே தெரியாதது போலிருந்ததுதான் பேர் அதிசயம்! இப்போது சாரதையின் முகத்தில் ராமகிருஷ்ணர் தமது திவ்விய மாதாவையே முகமாகக் கண்டு விட்டார். அதீத பரவசத்தில் ஆழ்ந்தார். தேவியின் சௌந்தரியத்தைப் பற்றிப் பேசத் தொடங்கினார். அழகு வெள்ளத்தைப் பற்றி அவரது வதனத்திலிருந்து வசன வெள்ளம் பெருகலாயிற்று. பேசினாரோ, பேசினாரோ, அப்படிப் பேசினார். அந்தத் தெய்விகப் பேச்சிலே கட்டுண்டு கிடந்தனர் சாரதையும், காசிக் கிழவியும்.

பேச்சு முடிந்தது; இரவும் முடிந்தது.

கிழவி காசிக்குப் புறப்பட்டு விட்டாள். காசியில் அவளது இருப்பிடத்தை விசாரித்துக் கொண்டாள் சாரதை.

பல வருடங்களுக்குப் பின் நம் அம்மா காசியம்பதிக்குச் சென்றபோது இந்த மூதாட்டியைச் சல்லடை போட்டுத் தேடினாள். ஆனால் அவள் கிடைக்கவில்லை. அவளது அடையாளங்களைச்

சொல்லி விசாரித்தபோது, அங்கு எவருக்குமே அப்படி ஒரு வியக்தியைத் தெரியவில்லை.

ராமகிருஷ்ணர் நோயுற்றபோது தருணமறிந்து எங்கிருந்தோ வந்து சுசுருஷை புரிந்து, வந்தது போலவே எங்கோ மறைந்த அந்தக் கிழவி யார்?

ஹ்ருதயரது ஊராகிய ஷியாடுக்குப் புறப்பட்டார் ராமகிருஷ்ணர். ஹ்ருதயர், சாரதாமணி இருவரும் அவருடன் சென்றனர். ஷியாடில் ஹ்ருதயரின் வீட்டில் நடந்த ஒரு பஜனையின்போது தான் பச்சைக் குழந்தை சாரு முதன் முதலாக ராமகிருஷ்ணரைக் கண்டு, 'அதோ என் அகத்துக்காரர்' என்று கைதூக்கிக் காட்டினாள். ஆனால் ஏனோ ஹ்ருதயருக்கு அவளைக் கண்டாலே ஆகவில்லை. தனக்கே பாத்தியமாக இருந்த 'மாமா'விடம் அவளுக்கு ஏற்பட்டுவிட்ட நெருக்கம் ஹ்ருதயரின் இருதயத்தை நெருக்கி, அவளிடம் மாறாத மனக் கசப்பை உண்டாக்கிவிட்டது. பைரவி பிராம்மணிக்கு அடுத்த வாரிசாக வந்து வாய்த்தார் ஹ்ருதயர். புலியையும் ஆட்டுக் குட்டியையும் சேர்த்து அழைத்துப் போவதே போல் இப்போது ஹ்ருதயரையும் சாருவையும் சேர்த்து அழைத்துச் சென்றார் ராமகிருஷ்ணர். இந்த ஆட்டிடம் புலியின் ஜம்பம் சாயவே சாயாது: அது தனது கோமளத்தாலேயே புலியின் கொடூரத்தை வென்றுவிடும் என்று அவரறிவார். அந்த வெற்றியைப் பார்த்துப் பூரிப்பதில் அவருக்குத் தனி ஆசை போலும்!

நீராவிப் படகு ராஜ ஹம்ஸமென கங்கையில் மிதக்க, பரமஹம்ஸ தம்பதியர் பரமஹிம்ஸை தரும் ஹ்ருதயருடன் பிரயாணம் தொடங்கினர்.

ஆடவர்கள் ஏறிக்கொண்டபின் நாணராணி சாரதை தயங்கித் தயங்கிப் படகேறினாள். "அம்மா, இப்போ நான் சொல்கிற பாடத்தைக் கவனமாகக் கேட்டுக்கோ. எங்கேயானாலும் போகிற சே நீதான் முதல்லே வண்டியிலே ஏறணும். இறங்கற சே நீதான் கடைசியில் இறங்கணும். எல்லா சாமானும் ஏற்றியாச்சான்னு கவனிச்சு, அதுகளை வாங்கி வண்டியிலே ஒழுங்குபடுத்தி வைக்கிறதுக்கும், அதேமாதிரி கடைசியிலே எல்லாத்தையும் இறக்கியாச்சான்னு பார்த்துக்கறத்துக்கும் இது தான் வழி" என்றார் ராமகிருஷ்ணர்.

அப்பப்பா! அவர்தான் எத்தனை சிறிய—ஆனால் அரிய—பாடங்களை அவளுக்குப் புகட்டினார்!

நீராவிப் படகு நீந்தத் தொடங்கியது. 'மாமிக்கு ஸ்டீமர் பிரயாணமா?' என்று ஹ்ருதயருக்குத் தாங்கவில்லை. நீராவிப் படகைப் போலவே இவரும் ஆவி கக்கிக் கொண்டு வந்தார். படகு தன்னைக்



கிழித்துச் சென்றாலும் உடனுக்குடனே ஒரு சுவடுமின்றி அலையால் தன்னை மூடிக் கொள்ளும் தூய கங்கையாக வந்தாள் சகிப்பு ஸ்வரூபமான சாரதை. ஆனால் ராமகிருஷ்ணரின் மெல்லிய இதயத்தை ஹ்ருதயரின் கொடூரம் கிழிக்கத்தான் செய்தது.

மத்தகஜம் பிளிறுவதுபோல் குரல் கனன்று பேசினார் ராமகிருஷ்ணர்: ''அடேய், ஹ்ருது! நீ எனக்கு ரொம்பப் பிரியமானவன். இந்த நிமிஷம்கூட நீ என் பிரிய ஹ்ருதுதான். அதனாலேயே உன்னை எச்சரிக்கிறேன். கேட்டுக்கோ. (தமது சரீரத்தைத் தொட்டுக் காட்டி) இந்தக் கட்டையை நீ அவமதிக்கலாம். அதனாலே பரவாயில்லே. ஆனால் இவகிட்டே மட்டும் அந்த வேலை வெச்சுக்காதே. ஆமாம். (தம்மைத் தொட்டு) இதுக்குள்ளே இருக்கிற சக்தி தன் படத்தை விரிச்சுண்டு சீறினாலும், உனக்கு ஒரு வேளை கதி மோட்சம் கிடைக்கலாம்; ஆனா இவளுக்குள்ளே இருக்கிற சக்தி மட்டும் படமெடுத்து வந்தால், அப்புறம் பிரம்மா, விஷ்ணு, மஹேசுவராளாலேயும் உன்னைக் காப்பாத்த முடியாது.''

சாரதையின் மகிமை அப்படிப்பட்டது! தம்மை அவமதித்தாலும் காப்புக் கிடைக்கலாம் என்று அவர் சொன்னாரே, அப்படிக் காப்பது அவள்தான்! அவருக்கு ஒருவரிடம் சீற்றம் வந்தாலும் அதைத் தணிப்பவள் தேவி தான். அவளே சீறிவிட்டால்?

ராமகிருஷ்ணர் இப்படி ஆணி அறைந்ததுபோல் சொல்லியும் அது ஹ்ருதய'ன் மனத்தில் புகவில்லை. ஒருவிதத்தில் அவர் ராமகிருஷ்ணரைவிடவும் சாரதையை நன்கு அறிந்திருந்தார் எனலாம். அவள் சீறிவிட்டால் விமோசனமே இல்லை என ராமகிருஷ்ணர் கூறினார். ஹ்ருதயரோ அவள் ஒருகாலும் சீறவே மாட்டாள் என்பதாக அவ்வளவு மகிமையை அதைவிடச் சிறப்பாக உணர்ந்திருந்தார் போலும்!

பந்தர் என்ற இடத்தில் ஸ்டீமர் பயணத்தை முடித்து, நாட்டுப் பரிசலில் ஏறி பாலி தேவாகஞ்ஜ் என்ற ஊரை அடைந்தனர். வைஷ்ணவர்கள் மிகுந்த அவ்வூரில் மோதக வகுப்பைச் சேர்ந்த ஒரு வியாபாரி இம்மூவருக்கும் விருந்தோம்பல் செய்தார்.

நல்ல மழை பிடித்துக் கொண்டது. அங்கிருந்து மூன்று நாட்களுக்குப் பிறகே அவர்கள் கிளம்ப முடிந்தது.

வியாபாரி நமது ஹம்ஸ தம்பதியை வணங்கி நாத் தழுதழுக்கச் சொன்னார்: ''புது வீடு கட்டினால் அதில் மூணு நாளாவது ஒரு மகானை அழைத்து வந்து தங்கச் செய்யணும்னு எனக்குச் சொல்லி முடியாத ஆசை. நீங்களாவே வந்து தங்கி அநுக்கிரகிச்சுட்டேள்.''

ஹ்ருதயரின் சொந்த ஊராகிய ஷியாடில் இவர்களது வருகை பக்தி வெள்ளத்தைப் புரளவிட்டது. சியாம் பஜாருக்குச் சென்று அங்கும் ஓர் அற்புத சங்கீர்த்தனம் நிகழ்த்தினார் ராமகிருஷ்ணர்.

பெண்ணும் மாப்பிள்ளையும் ஜயராம்பாடிக்குச் சேர்ந்து வந்ததும் சியாமசுந்தரியின் சந்தோஷம் கரை புரண்டது.

ஆனால் சாரதையோ, சியாமையோ ரொம்பவும் சந்தோஷப்பட்டுவிட்டால் அம்பாளுக்குப் பொறுக்காது போலும்! ஊர் வாயைக் கிளறிவிட்டாள்.

''தம்பதியா வந்திருக்கான்னு என்ன பெருமை வேண்டியிருக்கு? தம்பதின்னாலும் இதுகள் ஏகாங்கிகளாகத் தானே இருக்கு? இருந்தாலும் இந்த மாப்பிள்ளை சாருவை இப்படி வெச்சிருக்க வேண்டாம். ஒரு மங்கள காரியத்துக்கும் பிரயோஜனமில்லாத மலடியான்னு உன் பெண்ணை நிறுத்தியிருக்கார்?'' என்று கிராமப் பெண்டிர் சியாமையிடம் தொண தொணத்தனர்.

'மங்கள காரியத்துக்கே ஆகாதவள்' என்ற வார்த்தைகளை சாரதையும் கேட்டுவிட்டாள். 'சர்வ மங்கல மங்கல்யே' என்று பூஜித்து அவளை வணங்கிய ராமகிருஷ்ணரும் கேட்டுவிட்டார்.

சாரதையின் கண்களிலிருந்து முத்து முத்தாக நீர் உதிரலாயிற்று.

''இந்தப் பேச்சை, இந்த ஏச்சை எத்தனை தடவை இங்கேயும் காமார்புகுரிலும் கேட்டுட்டேன்?'' என்று சொல்லி விம்மினாள். சுய அநுதாபம் என்ற இழிதகைமைக்கு இழையளவும் இடம் தராத தேவி இப்படிப் பேசியது ராமகிருஷ்ணருக்கே வியப்பாயிருந்தது.


''இன்னமுமா இந்த வருத்தம்? அசடே! கவலைப்படாதே.' தலையை வெட்டிண்டு தபஸ் இருந்தாக்கூட பெற முடியாத புத்திர ரத்தினங்களையாக்கும் உனக்காக நான் விட்டுட்டுப் போகப் போறேன். கடைசிலே 'அம்மா, அம்மா'ன்னு உன்னைக் கூப்பிட்டுண்டு வர கூட்டத்தைச் சமாளிக்கவே முடியாம திண்டாடப் போறே, பாரேன்'' என்று பன்னீராகப் பேசினார் பகவான்.

சியாமசுந்தரி மாப்பிள்ளையிடம் நேரே நின்று பேசமாட்டாள். மறைவில் புலம்பித் தள்ளினாள். ''ஊரார் ஏன் சொல்ல மாட்டா? எனக்கும்தான் இந்தப் பட்டு வயித்திலே ஒரு புழு நெளிஞ்சு பார்ப்போமான்னு ஆதங்கமாயிருக்கு. தலை விதி, இப்படி ஒரு பைத்திய மாப்





FD3AS-1664TM-A


புதுமையின் பொலிவுக்கு
ஹமாம்
HAMAM
the family soap
நாள்தோறும் ஹமாம் தேய்த்துக் குளியுங்கள்.
ஹமாம் தரும் நறுமணமுள்ள நுரை உங்கள்
சருமத்தை சுத்தம் செய்வதுடன், புத்துணர்ச்சி
யையும் அளிக்கிறது. உங்கள் மேனிக்கு
கவர்ச்சியான மெருகையும் ஊட்டுகிறது.
நெடுங்காலம்...நீடித்திருக்கும் ஹமாம்
டாய்லெட் சோப்பை உபயோகியுங்கள்.
அதிக காலம் நீடித்துழைக்கும் டாய்லெட் சோப்
டாடா
தயாரிப்பு

பிள்ளையைப் படைச்சுட்டேன். இந்தக் குழந்தை, தனக்கு என்று ஒரு குடித்தனமில்லாமல், 'அம்மா'ன்னு கூப்பிட ஒரு குரல் இல்லாம பட்ட மரமா நின்னுடுத்தே'' என்று ராமகிருஷ்ணர் காதுபட வாய்விட்டுச் சொன்னான். 'அதி'யாகத்தான் பேசிவிட்டான்!

ஆனால் மாப்பிள்ளை கொஞ்சமேனும் முறுக்கிக் கொள்ள வேண்டுமே! முறுவலோடேயே சியாமை முன் நின்றார். பதவிசான குரலில் சொன்னார்: ''மாமீ! வருத்தப்படாதேள். உங்க பெண்ணுக்கு ஏராளமான புத்திர சம்பத்து கிடைக்கத்தான் போறது. அப்புறம் . ஒரு காலத்திலே 'அம்மா, அம்மா'ன்னு அவளைப் பிச்சுப் பிடுங்கற குரல்களுக்கு மத்தியிலே அவ திண்டாடப் போறா. அதையும் பார்க்கத்தான் போறேன்.''

சாரதையிடம் புத்திர ரத்தினங்களை அவளுக்கு **விட்டுச் செல்வதாகச்** சொன்னார்; இப்போது எதிர்காலத்தில் சாரதையை மக்கள் சூழுவதையும் மாமி மட்டுமே பார்க்கப் போகிறாள் என்று தொனிக்கப் பேசினார். அந்தத் திரிகால ஞானி தமது சரீர யாத்திரையின் முடிவைப் பற்றி அறியாரா ?

நள்ளிரவு ஒன்றிலே ராமகிருஷ்ணர் ''பசி பசி'' என்று பதறினார்.

மகா பாவங்களில் உள்ள மகானின் சரீரத்துக்கு ஏற்படும் உணர்வுகளை யாராலும் புரிந்து கொள்ள முடியாது.

சாரதா தேவிக்கு வெட்கமாக இருந்தது. இரவு விருந்துண்ட கணவர் நள்ளிரவில் மீண்டும் உணவு கேட்பதால் தன் வீட்டார் அவரைப் பைத்தியமாகவே கருதிவிடுவரோ என்று அல்ல ! அவரைப் பற்றி யார் என்ன கருதுகிறார்கள் என்பதில் அவளுக்குச் சிறிதும் கருத்தில்லை. அவள் வெட்கப்பட்டதற்குக் காரணம், ஒரு பிடி பழையமுது தவிர வீட்டில் ஏதுமே இல்லாததுதான்.

''கொஞ்சம் பொறுத்துக்கறேளா ? நாலு அரிசி களைஞ்சு வெச்சிட்டு, ரெண்டு கறிகாயும் வேக விடறேன்'' என்றாள்.

''ஊஹூம், பொறுக்கவே முடியாது. இருக்கிற சாதத்தை இப்பவே கொண்டா'' என்றார் அவர்.

கூசிக் கொண்டே பழையதைப் பிழிந்து படைத்தாள் தேவி. ''நீங்க ஊறுகாய் போட்டுக்க மாட்டேள். தொட்டுக்க காய்கறி ஏதுமே இல்லையே'' என்றாள் கண் கலங்கி.

''போய் நன்னாப் பாரு. வாணலிலே ஏதாவது ஒட்டிண்டு இருந்தாக்கூடப் போதும்'' என்றார் ராமகிருஷ்ணர்.

> **அன்பு**
>
> அன்பே கடவுள். அன்பில் வாழ்பவன் கடவுளுக்குள் வாழ்கிறான். கடவுள் அவனுக்குள் வாழ்கிறார். - பைபிள்

என்ன ஆச்சரியம்! அவள் சமையற்கட்டில் போய்ப் பார்த்தபோது மெய்யாகவே வாணலியில் சிறிது பொரியல் இருந்தது. அதைக் கொணர்ந்து அவருக்குப் படைத்தாள்.

கண்ணன் திரௌபதியிடமிருந்து கீரைத் துவட்டலில் ஒரு நுனி வாங்கி உண்டவுடன் தூர்வாசருக்கும் அவரது சிஷ்யகோடிகளுக்கும் வயிறு நிறைந்துவிட்டது என்று வியாசர் கூறுகிறார். ராமகிருஷ்ணர் இன்று உண்டது எவர் பொருட்டு என்பதைச் சொல்ல ஒரு வியாசர் இல்லையே !

ஜயராம்பாடியிலேயே சாரதையை விட்டு விட்டு ராமகிருஷ்ணர் காமார்புகூர் சென்று அதன்பின் தக்ஷிணேசுவர் திரும்பினார். பிற்கால விவேகாநந்தர், பிரம்மாநந்தர், சாரதாநந்தர் முதலியோர் ராமகிருஷ்ணரை வந்தடைந்து, அவர் திரட்டி வைத்திருந்த ஞான நிதியத்தை ஆர்ஜிதம் செய்து கொள்ளத் தொடங்கி விட்டனர். ராமகிருஷ்ணர் குருமகராஜ் எனவும், பரமஹம்ஸர் எனவும், டாகூர் எனவும் பெயர் கொண்டு சீடர் பலரது இதயங்களில் இடம் கொள்ளலானார். சீடர்களுக்காகவே ஏங்கித் தவித்துக் கொண்டிருந்த ராமகிருஷ்ணர் தம் ஞானம் அனைத்தையும் அவர்களிடம் இரு்றுப் பொழிந்து விட்டு, மழை பெய்தபின் மறைந்தே போகும் முகிலாக ஆவதற்கு ஏற்பாடு செய்து கொண்டிருந்தார்.

சிறிது காலத்துக்குப் பின் சாரதை தக்ஷிணேசுவரத்துக்கு வந்தாள். தனது தாயையும் தக்ஷிணேசுவரத்துக்கு அழைத்து வந்தாள்.

வருகிற வழியில் தாரகேசுவரத்திலே தன் முடியைக் களைந்து பகவானுக்குச் சமர்ப்பித்தாள் சாரதை. முன்பு அவள் சுகவீனமுற்றிருந்தபோது தாரகேசனுக்குக் கேசம் களைவதாக வேண்டிக் கொண்டிருந்ததால் இவ்விதம் செய்தாள். வங்காள வழக்கப்படி சிகையோடு நகங்களையும் வெட்டிப் போட்டாள்.

சாரதையையும், அதோடு மட்டுமின்றி சியாமையையும் கண்டவுடன் ஹ்ருதயருக்கு உண்டான கடுப்புக்கு எல்லையே இல்லை. 'சின்ன மாமி' தன்



அக்கோசெட்-50 உபயோகமாகும் நிர்மாண வேலைகள்:

- ஓட்டுப் பூச்சு, ரிபேர் மற்றும் இணைப்பு
- எரிசெங்கல்களை அடுக்கி ஒட்டுதல்
- தரை மற்றும் உலைச் சுவர்கள் மீது பாதுகாப்புக்காக மெழுகுதல்
- மானோலிதிக் லைனிங் வேலை, கனைட்டிங் முதலியன.

ஒரு முறை உலர்த்தி வெப்பப் படுத்தப்பட்ட அக்கோசெட்-50 உலைகளின் பாகமாகி விடுகிறது.

ACC

உயர் தர
தயாரிப்புக்களுக்கு
உங்கள் உத்தரவாதம்

தி சிமெண்ட் மார்கெடிங் கோ. ஆப் இந்தியா லிட். மற்றும் அன்னாரது வினியோகஸ்தர்களிடம் தயாராகக் கிடைக்கிறது.

தி அசோசியேடெட் சிமெண்ட் கம்பெனீஸ் லிமிடெட்

தி சிமெண்ட் மார்கெடிங் கோ. ஆப் இந்தியா லிட்.

ACC. 292. TAM.

குடும்பப் பட்டாளத்தையே தக்ஷிணேச வரத்தில் குடியேற்றுவதாகக் கருதிக் கொதித்தார் ஹ்ருதயர்.

ராமகிருஷ்ணரின் அறைக்குள் அவர்கள் நுழைகையில், ஹ்ருதயர் வாய்விட்டு ''இதுகள் எதுக்காக இங்கே வந்திருக்காம்? இங்கே என்ன கொட்டி வெச்சிருக்குன்னு இப்போ வந்து சேர்ந்திருக்குகளாம்?'' என்றார்.

தன் ஊர்ப் பிள்ளை அப்படிப் பேசியது சியாமசுந்தரியை ஆட்டிவிட்டது. மாப்பிள்ளை வீட்டில் இப்படியா முதல் வரவேற்பு என்று வெதும்பினாள்.

''சரியப்பா, இதோ நான் போறேன். ஆனா இந்தப் பெண் இங்கே இருக்கலாமோன்னோ? இவளை யார்கிட்டே விட்டுப் போவேன்?'' என்றாள் சியாமை.

ராமகிருஷ்ணரின் மனைவி என்று உலக ரீதியில் குடித்தனம் செய்யாவிட்டாலும், அவளுக்கு அவரோடு வசிக்கக் கூடவா உரிமை இல்லாமல் போய் விட்டது என்ற குமுறலோடு பேசினாள் சியாமை. ஹ்ருதயர் இத்தனை காட்டுமிராண்டித்தனமாக நடந்து கொண்டபோது, இதைப் பார்த்துக் கொண்டே ராமகிருஷ்ணரும் கல்லுப்போல் அமர்ந்திருந்ததால்தான் 'யாரிடம் விட்டுப் போவேன்' என்று அவள் கேட்டாள். அவர் தாலி கட்டிய மனைவியை வெருட்டுகிறான் ஒன்று விட்ட மருமான். அவர் வாய் மூடி அமர்ந்திருந்தது சியாமைக்கு ஆத்திர மூட்டியது.

அப்போதும் பேசவில்லை அந்த அதிசய மாப்பிள்ளை.

சாரதையின் நெஞ்சு நைந்தது. நான், எனது என்ற நினைப்பு மூளைகூட விடாமல் அடங்கி ஒடுங்கி நடுங்கியே வாழ்ந்த தேவிக்கும், மானம் பீறிக் கொண்டு வந்தது. அவமானம், அபிமானம் இரண்டும் அறியாத சாரதை மன நோவிலேயே ஓர் அதிசய எழுச்சி கொண்டாள். பவதாரிணியின் ஆலயப் பக்கம் திரும்பிச் சபதம் போல் மொழிந்தாள்: ''என் அம்மா! நான் போறேன். நீயாக மறுபடி நான் இங்கே வரும்படியாகப் பண்ணினால்தான் இங்கே இனி கால் வைப்பேன்.''

அவள் ராமகிருஷ்ணரையோ, ஹ்ருதயரையோ தூற்றவில்லை. அனைத்தையும் ஆட்டுவிக்கும் அம்பாளையே அடைக்கலம் புகுந்து பேசினாள். இப்படிச் சொல்லிக் கொண்டே வேகமாக வெளி நடந்தாள் தேவி சாரதாமணி.

அப்போதும் வாய் திறக்கவில்லை, அவளது அதிசயக் கணவர்.

அந்த அதிசயக் கணவரது தமையன் மகன் ராம்லால் கங்கைக் கரையிலே

விஷப் பூச்சியும் விஷ எண்ணமும்

''ஒரு காரியத்தில் ஈடுபடும் போதுங்கூட மனம் அந்த ஒன்றிலேயே லயிக்கிறது. தியானம் செய்ய அமர்ந்தாலோ பல தீய எண்ணங்கள் எழுகின்றனவே!'' என்று அடியார் ஒருவர் கூறியபோது அன்னை ஆனந்தமயி சொன்னார்:

''என் அம்மா வயலில் வேலை செய்யும் போது சாண நீரைத் தெளிப்பாள். உடனே பூமியின் அடியில் வளையிலிருந்து எறும்பும் பூச்சிகளும் ஏராளமாக வெளி வரும். அந்தப் பூச்சிகள் சாண நீரால் புதிதாக உண்டாக்கப்படவில்லை. ஏற்கெனவே உள்ளேயே இருந்து வெளி வந்தன. சாண நெடி தாங்காமல் அவை ஓடிப் போகும், அல்லது சாகும். இதைப்போல் தியான சாதனையின் ஆரம்ப காலத்தில், பழைய உள் நினைவுகள் வெளிக்கிளம்பி வருகின்றன. அதற்காக பயம் வேண்டாம். தியானத்தைத் தொடர்ந்தால் அந்த 'நெடி'யில் பழைய தீய நினைவுகள் அழிந்தே போகும்.''

படகு அமர்த்திக் கொடுத்து சாரதை ஊருக்கு 'சொஸ்த'மாகத் திரும்ப ஏற்பாடு செய்தான்!

எத்தனையோ கஷ்டத்துடன் பிரயாணம் செய்து தக்ஷிணேசுவரம் வந்த சாரதை, ஒரு முகூர்த்த காலம்கூட அங்கு இருக்கமாட்டாமல், அவமானத்துக்கும் அலட்சியத்துக்கும் ஆளாகித் திரும்புகிறாள்!

ராமகிருஷ்ணர் ஏன் இப்படி இடித்த புளியாக இருந்தார்? சாரதையும் சியாமையும் அங்கு அப்போது தங்கினால் ஹ்ருதயரின் வெஞ்சினம் கொண்ட வஞ்சனை நெஞ்சு அவர்களை மேலும் குரூரமாகப் பழி வாங்கும் என எண்ணினாரோ! தாம் அவர்களுக்குச் சிறிதே ஆதரவு காட்டினாலும் ஹ்ருதயர் ராட்சதனாகி விடுவார் என நினைத்தாரோ? தமது அன்னை சந்திரமணி தேவி எதைக் கற்பனை செய்து கொண்டு பயந்தாளோ அது வாஸ்தவமாகவே நிகழ்ந்துவிடும் என எண்ணினாரோ? சந்திரமணி தேவியும், பொறாமை பிடித்த ஹ்ருதயரின் கொடுமைக்கு ஆளாகித் தவித்தவள் தான். பொறாமைப் பிசாசின் ஆளுகைக்குள் விழுந்துவிட்ட ஹ்ருதயர் ராமகிருஷ்ணரையும், சாரதாமணியையும் கொலை செய்து விடக்கூடும் என்றே நடுநடுங்கியிருக்கிறாள் சந்திரமணி — இந்தத் தம்பதியின் புனிதமான இனிய தொடர்பைப் பார்த்த பின். அதெல்லாம் இப்போது ராமகிருஷ்ணருக்கு நினைவு வந்ததோ? ஹ்ருதயரும் சாரதையும் ஒரே சமயத்தில் தக்ஷிணேசுவரத்தில் இருப்பது முடியாத காரியம் என்கிற அளவுக்கு முன்னவரின் சின்னத்தனம் முற்றிவிட்டது. திரிகால ஞானியான ராமகிருஷ்ணருக்கு ஹ்ருதயரின்

தக்ஷிணேசுவர வாசம் எத்துணை நாள் நீடிக்கப் போகிறது என்பது தெரியாதா என்ன?

அடுத்த ஒருசில வாரங்களில் தக்ஷிணேசுவர ஆலயம் ஸ்தாபிதமான வருடாந்தர உற்சவம் வந்தது. அன்று ஹ்ருதயர் ஆலயம் எடுப்பித்த மூல புருஷரில் ஒருவரான காலஞ்சென்ற மதுர்பாபுவின் பேத்தியைக் கன்யா பூஜைக்குத் தேர்ந்தெடுத்து, அந்தச் சிறுமிக்குக் கௌரி பூஜை செய்தார். இதனால் மதுர்பாபுவின் புதல்வர் திரைலோக்யநாத் பெரிதும் மகிழ்ந்து தம்மை வெகுமானிப்பார் என்று எண்ணினார்.

ஆனால் நடந்தது முற்றிலும் வேறு! 'ராமகிருஷ்ணர் சமாசாரம் தனி. அவர் மனைவியைக் கூடப் பூஜிக்கலாம். இந்த ஹ்ருதே நம் மாதிரி ஒரு வெற்று ஆள். இவன் மீனவர் பெண்ணைப் பூஜிப்பதாவது? அக்கிரமமாக அல்லவா இருக்கு?' என்று கண்டனப் பேச்சே எழுந்தது.

திரைலோக்யநாத் துடிதுடித்தார். ஹ்ருதயர் செய்த பூஜையை ஏற்றால் தம் செல்வ மகளுக்கே உற்பாதம் ஏற்படக்கூடும் என்று அஞ்சினார்.

உடனுக்குடனே ஹ்ருதயரின் சீட்டைக் கிழித்தார்.

ராமகிருஷ்ணர் ஒரு வார்த்தை சொல்லியிருந்தால் திரைலோக்யர் ஹ்ருதயரை மன்னித்திருப்பார்.

ஆனால் இப்போதும் வாய் திறக்கவில்லை அதிசய 'மாமா'!

கெடுவான் கேடு நினைப்பான் என்பது ஹ்ருதயர் விஷயத்தில் பிரத்யட்சமாயிற்று. தக்ஷிணேசுவரத்தை விட்டு நிரந்தரமாகப் போய்ச் சேர்ந்தார்.

பாசத்தினால் மோகமடைந்து மோசம் போன பைரவி பிராம்மணி, இறுமாப்பின் எல்லையில் இருந்து கொண்டே, பொய்யான சமத்துவத்தைக் காட்டிய உடனே இச்சரிதையிலிருந்து விடை பெற்றது நினைவிருக்கும். அதேபோல் செருக்குக் கொண்ட ஹ்ருதயரும் சூதான சமத்துவத்தைக் காட்டியவுடன் நம்மிடமிருந்து விடை பெறுவது அற்புதமான பொருத்தம் அல்லவா? ராமகிருஷ்ணரைப் போன்ற அவதார வரிஷ்டரின் பக்கலிலேயே இருந்தாலும் ஒருவருக்கு அகங்காரம் முளைத்து விட்டால் எத்துணை விபரீதமாகிறது என்பதற்கு பிராம்மணியும், ஹ்ருதயரும் இரண்டு உதாரணங்கள்.

ராமலால், ராமகிருஷ்ணரின் தமையனார் ராமேசுவரின் புதல்வன். ராமேசுவர் காலகதியடைந்தவுடன் ராமலால் தக்ஷிணேசுவரம் வந்து பூஜைக் காரியங்களில் உதவி புரிந்து வந்தான். இப்போது ஹ்ருதய் போனவுடன் அர்ச்சகனாகவே பதவி உயர்வு பெற்றான். ஆனால் சிறு வயதிலேயே காளியிடம் தம்மை ஒப்புவித்துக் கொண்ட சிற்றப்பா போல் அவன் இருக்கவில்லை. நேர்மாறாக இந்தப் பெரிய அந்தஸ்து கிடைத்ததில் அவனுக்குத் தலைக் கனம் மேலிட்டது. அந்த மயக்கத்திலே பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணருக்குப் பணிவிடை புரியும் புனிதக் கடமையையும் மறந்தான்.

பணிவிடை புரியும் விஷயத்தில் ஹ்ருதயர் இதய சுத்தமுடன் இருந்தவர். ராமகிருஷ்ணர் அடிக்கடி பாவ பரவசங்களில் மூழ்கிவிடுவார். அவரைத் தட்டி எழுப்பி யாரேனும் குளிப்பாட்டி, உணவூட்டி, சயனிக்கச் செய்தால்தான் உண்டு. அவரைக் கண்ணில் வைத்து இமையால் மூடிக் காத்த ஹ்ருதய், சாரதை இருவரும் இன்று அங்கில்லை. உறவு முறையால் நெருக்கம் கொண்ட ராமலாலைத் தவிர மற்ற சீடர்களுக்கும் பக்தர்களுக்கும் அவரிடம் சுவாதீனமாகப் பழக இன்னும் துணிவு வரவில்லை. ராமலாலோ அவரை எவ்வளவு அலட்சியம் செய்யலாமோ அவ்வளவும் செய்தான்.

ராமகிருஷ்ணருக்கு உடல்நிலை பாழாயிற்று. சரீர உணர்வு ஏற்பட்ட சமயங்களில் அந்த மகாபுருஷனும் அவதிப்படுவது போல் தோன்றியது. சாரதையைத் தாம் திரஸ்கரித்ததும் இப்போது அவரை உறுத்தியது போலும்! வெள்ளை உள்ளத்தினரான அவர் அதன் பின் தயங்கவில்லை. பிரதிக்ஞை செய்து போன சாரதைக்கு முன், கணவன் என்கிற தமது அந்தஸ்தை அவர் எண்ணவில்லை. தாமாகவே சாரதாமணிக்குத் தூது அனுப்பினார் ராமகிருஷ்ணர். ருக்மிணி துவாரகாதீசனை வருமாறு கோரி அந்தணரிடம் தூது சொல்லியது போல், லக்ஷ்மண் பாயின் என்பவர் மூலம் ராமகிருஷ்ணர் சாரதைக்குப் பின்வரும் செய்தி அனுப்பினார்:

''நான் இங்கே அவஸ்தைப் படுகிறேன். காளி மாதாவின் பூஜாரியான வுடன் ராம்லால் மற்ற பூஜாரிகளோடு சேர்ந்து விட்டான். என்னை அவன் முறைப்படி கவனித்துக் கொள்ளவில்லை. நீ வரத்தான் வேண்டும். டோலியோ பல்லக்கோ வைத்துக் கொண்டு வந்து சேர். அதற்கான செலவுகளை நான் ஏற்கிறேன் — பத்து அல்லது இருபது ரூபாய் ஆனாலும் கூட.''

அவதார புருஷன் நம் அம்பிகைக்கு அனுப்பிய செய்தி எத்தனை எளிமையாயிருக்கிறது! **(தொடரும்)**


விக்கோ டெர்மரிக் வானிஷிங் கிரீமைத்
தடவியவுடன் நூறு சதவிகிதமும்
இயற்கையாக என்ணெய்ப்பசை
மாறுகிறது. இதில் மஞ்சள் சத்து சுத்த
மான சந்தன எண்ணெயுடன் கலக்கப்
பட்டிருக்கிறது. பண்டைக் காலமுத
லாகவே கிருமிநாசினியும், அலர்ஜி
அழிப்பு சாதனமுமான மஞ்சள் எழிலை ஒளிரச்
செய்ய உபயோகிக்கப்பட்டுவருகிறது. அது
தேவையற்ற பொடி ரோமம் வளர்வதைத் தடை
செய்கிறது. மஞ்சளின் இத்தன்மைகள் பண்
டையகாலம் முதல் அறியப்பட்டவையே!
கிருமி நாசினியான இந்தக்கிரீம் முக சவரத்
திற்குப் பின் ஏற்படும் புண், வெட்டுக்காயங்
களைக் குணப்படுத்துகிறது. முகச் சருமத்தில்
சோப்பினால் ஏற்படும் கெட்ட விளைவுகளை
அகற்ற உதவுகிறது.
எழிலுக்கு இயற்கையானவழி...
விக்கோ டெர்மரிக்
வானிஷிங் கிரீம்
VICCO
TURMERIC
VANISHING CREAM
IN SANDAL PERFUME
VICCO LABORATORIES, BOMBAY 14
VICCO
SNOW
WITCH HAZEL
மேனி எழிலை அதிகப்படுத்திப்
பாதுகாக்க மென்மையும் குளுமையும்
கொண்ட விக்கோ ஸ்னோவும் இருக்
கிறது. இதில் "விட்ச்ஹேஸல்"
(Witch Hazel) என்ற புகழ் பெற்ற
சருமத்தைலம் அடங்கியுள்ளது.
விக்கோ லாபரெட்டரீஸ்
தாதர், பம்பாய் 14
TML

மூன்று மந்திரவாதிகள்

கதை: வாண்டுமாமா
சித்திரம்: ராஜி
22




வெள்ளத்திலிருந்து வெளியேறிய சசாங்கன் தன் மந்திர சக்தியால் சுற்றிலும் நெருப்பை உண்டாக்கினான். அதற்கும் அஞ்சவில்லை பார்த்திபன். அதே போல, தான் அடிப்பதையும் நிறுத்தவில்லை.
பார்த்திபனிடம் சசாங்கனின் பலப் பரீட்சை பலிக்கவில்லை. கழியடியினால் அவன் உடல் கலகலத்துப் போயிற்று.
அடி வாங்கி, ஓடி ஓடி ஓய்ந்து போன சசாங்கனுக்குப் பார்த்திபனிடம் அடங்கி ஒடுங்குவதைத் தவிர வேறு வழியில்லை. பார்த்திபன் கொட்ட மடங்கிய குதிரையைக் கொண்டு போய் லாயத்தில் அடைத்தான்.
புவனா, வா... வா! எப்படி இருக்கிறார் உன் அப்பா?
உடலெல்லாம் கட்டு...ரத்தக் காயம். எழுந்திருக்கவே முடிய வில்லை அவரால். கடிவாளத்தை விட்டீர்களோ நான் பிழைத்தேன்.
ஐயோ, அம்மா! தாங்க முடியவில்லையே. வலி உயிர் போகிறதே! ம்... ஹா... ஊ...
ஐயையோ! இதென்ன புவனா, உனக்கென்ன?
எனக்கொன்றுமில்லை. இப்படி என் அம்மாவும் சகோதரிகளும் அங்கே அடியடித் தவிக்கிறார்கள், முக்கலும் முனகலும் பெரு மூச்சுமாக.


அவர்கள் நம்மை மறந்திருக்கும் இந்த வேளைதான் நாம் தப்பிச் செல்ல ஏற்ற சந்தர்ப்பம். லாயத்துக்குப் போய், அங்குள்ள கோஞ்சான் குதிரையை அவிழ்த்து அதன் மீது ஏறிக் கானகத்துக்கு வாருங்கள். நான் அங்கு உங்களுடன் சேர்ந்து கொள்ளுகிறேன்.
பார்த்திபன் புவனாவின் திட்டப்படிக் குதிரையோடு கானகத்துக்கு வந்தான். ஆனால் ஒரு தவறு செய்து விட்டான்.
கோஞ்சான் குதிரையால் என்ன முடியும். புவனா ஏதோ தவறாகச் சொல்லி இருக்க வேண்டும்.
இளவரசே! என்ன காரியம் செய்து விட்டீர்கள்? நான் சொன்ன குதிரையைக் கொண்டு வரவில்லையே.
நம் இருவரையும் சுமந்து செல்ல இந்த வலுவான குதிரையினால் தானே முடியும். அதனால் தான்...
இங்கு தான் தவறு செய்து விட்டீர்கள். கோஞ்சான் குதிரை மந்திரக் குதிரை. எண்ணத்தை விட வேகமாகச் செல்லும் ஆற்றல் படைத்தது...
ஏமாந்து விட்டேனா?
சந்தேகமில்லாமல்...! ஆனால் இனிக் குதிரையை மாற்றிக் கொண்டு வர நேரமில்லை. போகலாம் கிளம்புங்கள்.
குதிரை மீது புவனாவைத் தன் முன்னால் வைத்துக் கொண்டு பார்த்திபன் சசாங்கனின் கோட்டையிலிருந்து தப்பிச் செல்லலானான்.
தொடரும்

ஸ்வஸ்திக்
பெர்:ப்யூம்ட் கேஸ்டர் ஆயில்

பரட்டையான படியாத கேசத்தையும் பணியவைக்கும். நாள் முழுவதும் கேசத்தை எடுப்பாக எழிலோங்கச் செய்யும்.



ஒளி சிந்தும் எழிலோங்கும் கேசம்...ஆரோக்கிய நறுமணம் வீசும் கேசம்...நாள் முழுதும் எடுப்பாக விளங்கச்செய்கிறது ஸ்வஸ்திக் பெர்:ப்யூம்டு கேஸ்டர் ஆயில்.

3 சைஸ்களில் கிடைக்கிறது.



திரு உள்ளம் எப்படியோ?

கோமதி ஸ்வாமிநாதன்

பட்டினத்திலிருந்து ஊருக்குத் திரும்பியதும் தணிகாசலம் தம் பெட்டியைக்கூடத் திறக்கவில்லை. மனத்தைத்தான் திறந்தார். ''ஏய், அமிர்தம்! இங்கே வாயேன்! ஒரு சந்தோஷ சமாசாரம்'' என்று தம் மனைவியைக் கூப்பிட்டார். ''நம்ப ரஞ்சிதத்துக்கு ஒரு நல்ல இடமா அமையும் போலே இருக்கு. இந்தத் தடவை மெட்ராஸ் டிரிப் வெறும் வியாபார டிரிப்பாகப் போகலே! குடும்பத்துக்கு உபயோகமான ஒரு காரியமும் நடக்க உதவும்னு நம்புறேன். இந்த இடம் குதிர்ந்தால் நம்ப ரஞ்சிதம் ரொம்ப அதிருஷ்டக்காரி'' என்று தாம் சொல்ல வந்ததைச் சொல்லி முடித்தார்.

தணிகாசலம் கும்பகோணத்தை அடுத்த நாச்சியார்கோயிலில் ஒரு முக்கியமான புள்ளி. நிலபுலன்கள் வசதி உள்ளவர். சும்மா உட்கார்ந்து சாப்பிடக் கூடாது என்பதற்காகக் கடைத் தெருவில் பெரிய அளவில் ஒரு பலசரக்குக் கடையை நிறுவி வியாபாரியாகவும் விளங்கினார். ரஞ்சிதம் அவருடைய மூத்த மகள். மல்லிகா இரண்டாவது மகள். இரண்டு பேருக்கும் இரண்டே வயதுதான் வித்தியாசம். இருவரும் கும்பகோணத்துக்கு வில் வண்டியில் போய்த் தங்கள் பள்ளிப் படிப்பை முடித்திருந்தார்கள். சென்ற ஆண்டிலிருந்தே அவர் ரஞ்சிதத்தின் கல்யாண முயற்சியில் தீவிரமாக இறங்கியிருந்தார். உறவு வட்டத்துக்குள் பையனைப் பொறுக்க அவர் விரும்பவில்லை. அந்நியத்திலிருந்து ஏதாவது தொழில் செய்யும் பையனைத் தேர்ந்தெடுக்க விரும்பினார். ஆனால் சுலபமாக அப்படி யாரும் கிடைப்பதாகத் தெரியவில்லை.

ஒரு நாள் அவர் பட்டினம் போகத் திருச்சி எக்ஸ்பிரஸைக் கும்பகோணத்தில் காலை ஒன்பது மணிக்குப் பிடித்து ஏறினார். சிதம்பரத்தில் திருஞானத்தின் அறிமுகம் கிடைக்க வாய்ப்பு ஏற்பட்டது.

திருஞானம் சிதம்பரத்தில் ஒரு பெரிய நிலக்கிழார். அவர் பையன் நடராஜன் சென்னையில் ஒரு பெரிய வழக்கறிஞரிடம் தொழில் பழக ஆரம்பித்திருந்தான். சிந்தாதிரிப் பேட்டையில் ஒரு வீட்டையே விலைக்கு வாங்கிப் போட்டுத் தாயும் தகப்பனும் கூடவே இருந்தார்கள். நடராஜனுக்கு இன்னும் திருமணம் ஆகவில்லை. திருஞானம் அவ்வப்போது சிதம்பரம் வந்துவிட்டுப் போவார்.

மாலையில் எழும்பூர் ஸ்டேஷனில் விடை பெற்றுக் கொண்டபோது தணிகாசலம் அவசியம் மறுநாள் காலையில் சிந்தாதிரிப் பேட்டைக்கு வருவதாக வாக்களித்தார். பையனைப் பார்த்த பிறகு திருப்தியாக இருந்தால் எப்படியாவது திருஞானம் குடும்பத்தில் ரஞ்சிதத்தை நுழைத்துவிட வேண்டும் என்று தீர்மானமும் செய்து விட்டார். மேலும் மாப்பிள்ளை பட்டினத்தில் ஹைகோர்ட் வக்கீல் என்றால் பெருமை தானே!





சிந்தாதிரிப்பேட்டை வீடும், அங்குள்ள வசதிகளும் நடராஜனின் பண்பு மிகுந்த தோற்றமும் அவனுடைய அமைதி

யான பேச்சும், தணிகாசலத்தின் ஆசையை வலுப்படுத்தின.

திருஞானம் ஓரளவு முற்போக்கான கொள்கைகளை உடையவர். ''இதோ, பாருங்க, தணிகாசலம்! ஜாதகம்னு பார்க்கப் போனுக்க ஆளுக்கு ஒண்ணு சொல்ற காலமாக இருக்கு. என் சம்சாரத்துக்கு அந்தக் காலத்திலே செவ்வாய் தோஷம் ரொம்ப பலம்னு யாரோ ஜோசியர் சொன்னாராம். என் ஜாதகத்திலேயும் தோஷம் இருந்ததுன்னு எங்களை இணைச்சுப் போட்டாங்க. போன வருஷம் சிவகாமி ஜாதகத்தை ஒருத்தர் கிட்டே காண்பிச்சேன். அது ஒரு நாளும் தோஷ ஜாதகம் இல்லேன்னு ஓரே போடா கப் போட்டாரு! எதை நம்பறதுன்னு தெரியல்லே. நாங்க சௌக்கியமாக நல்லாத்தான் இருக்கோம். இதிலேயிருந்து நான் ஜாதக விஷயங்களிலே அதிகமாக மண்டையைக் குடைஞ்சுக்கறதில்லே என்று தீர்மானிச்சுட்டேன். உங்க திருப்திக்கு நட்சத்திரப் பொருத்தம் பார்த்துக்குங்க. எங்க திருப்திக்குப் பொண்ணைப் பார்த்துக்கறோம். இரண்டும் சரியாக இருந்தா கல்யாணத்தை நடத்திப்புடுவோம்'' என்று சொல்லிவிட்டார். சிவகாமி அம்மாளும் இதை ஆமோதித்து விட்டாள்.


தணிகாசலத்துக்கு எந்தவித ஆட்சேபணையும் தோன்றவில்லை. ''ரொம்ப சரி! அப்படியே செய்துடுவோம்'' என்று ஆமோதித்து விட்டார். ஊருக்குத் திரும்பிய பிறகு மனைவி அமிர்தத்துடன் கலந்து யோசித்துப் பெண் பார்க்க வர ஒரு நாளையும் குறிப்பிட்டு எழுதுவதாகச் சொல்லி விடைபெற்றுக் கிளம்பினார்.


இந்த விவரங்களையெல்லாம் கேட்டுத் தெரிந்துகொண்ட அமிர்தம் தன் பெண் ரஞ்சிதத்தின் கல்யாணம் நடந்துவிட்டது போலவே ஆனந்த பரவசம் அடைந்தாள். ஆரம்பத்தில் அவள் ஜாதகம் பார்க்க வேண்டும் என்பதை வலியுறுத்தினாலும் நட்சத்திரப் பொருத்தத்தை ஒப்புக் கொண்டு கடைசியில் விட்டுக் கொடுத்தாள்.

அப்புறம் திருஞானம் சிதம்பரம் வந்திருந்த சமயம் தணிகாசலம் அவரைப் போய்ப் பார்த்து லௌகிக விஷயங்களைப் பேசித் திருப்திகரமாக முடித்தார். அவர் சென்னைக்குப் போய் மனைவியையும் பிள்ளையையும் அழைத்து வரச் சௌகரியமாக ஒரு நாளைப் பெண் பார்க்கக் குறிப்பிட்டுவிட்டு நாச்சியார் கோயிலுக்குத் திரும்பினார்.

ரஞ்சிதத்துக்கு வீணையில் நல்ல பயிற்சி உண்டு. பக்கத்துச் செம்பங்குடியிலிருந்து ஒரு வைணிகர் அவ்வப்போது வந்து பயிற்சி அளித்துக் கொண்டிருந்தார். அவள் தங்கை மல்லிகாவுக்கு நல்ல சாரீரம். அவளுக்கு வானொலி மூலம் கேட்கும் எல்லாவிதப் பாடல்களையும் மனத்தில் வாங்கி அப்படியே திருப்பிப் பாடும் திறமை உண்டு. ஆனால் அமிர்தம்

கல்யாணக் கதைகள்-7





எவ்வளவோ சொல்லியும் அவள் முறைப்படி இசை கற்றுக் கொள்ளத் தயாரில்லை.

குறிப்பிட்ட நாளில் தணிகாசலம் தம் ஆட்களைக் கும்பகோணம் ஸ்டேஷனுக்கு டாக்ஸியுடன் அனுப்பியிருந்தார். ஆனால் மதுரை பாஸஞ்சரில் வருவதாக எழுதியிருந்த

திருஞானம் குடும்பத்தினர் வரவில்லை. அன்றைய தபாலில் தகவலும் வரவில்லை. தணிகாசலத்துக்குக் காரணம் புரியவில்லை.

அன்று பிற்பகலில் யாரும் எதிர்பார்க்காத நேரத்தில் தணிகாசலத்தின் வீட்டு வாசலில் ஒரு டாக்ஸி வந்து நின்றது. திருஞானம், அவர் மனைவி சிவகாமி, நடராஜன், இன்னொரு மூதாட்டி ஆக நான்கு பேர் வந்து இறங்கினார்கள். தணிகாசலம் உற்சாகமாக வரவேற்று வீட்டுக்குள் அழைத்துப் போய் ஹாலில் உட்காரச் செய்தார். மூன்று பேராகப் பெண் பார்க்க வரவேண்டாம் என்ற நினைப்பில் சிதம்பரத்தில் இறங்கி, சிவகாமி அம்மாவின் சகோதரியையும் அழைத்துக் கொண்டு நேராக டாக்ஸியில் வந்துவிட்டார்கள்.

தூங்கிக் கொண்டிருந்த ரஞ்சிதத்தை எழுப்பிச் சிங்காரிக்க ஏற்பாடு செய்தாள் அமிர்தம். மல்லிகா பக்கத்துத் தெரு உறவினர் வீட்டுக்குப் போயிருந்தாள். மூக்குக் கண்ணாடியை அவசரத்தில் எங்கோ வைத்துவிட்டு அதைத் தேடக்கூட அவகாசம் கிடைக்காமல் தணிகாசலம் உற்சாகத்துடன் வந்திருப்பவர்களோடு பேச ஆரம்பித்தார். அமிர்தமும் அவ்வப்போது எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

அப்போதுதான் மல்லிகா வீட்டுக்குத் திரும்பினாள். ஹாலில் யாரோ உட்கார்ந்திருப்பதைப் பார்த்து வராந்தா வழியாக உள்ளே போக முயன்றாள். தணிகாசலம் அதைக் கவனித்துவிட்டார். ''வா, அம்மா! வந்திருக்கிறவங்களையெல்லாம் வணங்கு'' என்றார் ஆதரவாக.

மல்லிகா பளிச்சென்று ஒரு நைலக்ஸ் புடவைதான் கட்டியிருந்தாள். நெற்றியில் பெரிய குங்குமப் பொட்டு. தலையை அள்ளி முடித்த பின்னல் கொண்டை. தகப்பனார் உத்தரவைத் தட்டாமல் அவள் பூஜை அறையில் சுவாமி படங்களுக்குமுன் நமஸ்காரம் செய்வது போல் சிரத்தையுடன் எல்லாருக்கும் நமஸ்காரம் செய்துவிட்டுக் கிளம்பத் தயாரானாள். அப்போது சிவகாமியின் சகோதரி மல்லிகாவின் கையைப் பிடித்துக் கொண்டு திருஷ்டி கழித்து, ''அம்மாடி! ஒரு பாட்டுப் பாடேன் கேட்போம்'' என்று சொல்லி வைத்தாள். தணிகாசலமும் தலையை அசைத்தார். மல்லிகாவின் நினைவுக்கு அவள் சமீபமாகக் கேட்ட திரைப்படப் பாட்டுத்தான் நினைவுக்கு வந்தது. ஆனால் அது ஒரு பக்திப் பாடல். அவள் அதை மனம் விட்டுப் பாடியபோது திருஞானம் வீட்டார் மெய்மறந்து போனார்கள். பாட்டு முடியும் கட்டத்தில் மல்லிகா அதீதமான அந்த ரசனையைக் கண்டு வெட்கப்பட்டு உள்ளே போய்விட்டாள்.

''ஐயா தணிகாசலம்! எங்களுக்குப் பெண்ணைப் பிடித்து விட்டது'' என்றார் திருஞானம். அவசரம் அவசரமாகச் சோபா



மீனு குமாரி

சாஸ்திரிய முறை வழுவாத நிருத்தம்; பரபரப்பில்லாத நடை; துல்லியமான பாவங்கள்; தெய்விக உணர்ச்சியையே தூண்டும் சுத்தமான ஜதிகள்; கண் சொட்டும் லக்ஷணமான முகத் தோற்றம் - இவை கலந்திருந்தன, கும்பகோணம் மீனுகுமாரியின் நடன அரங்கேற்றத்தில். பிரும்மகான சபை ஆதரவில் மியூசிக் அகாடெமி அரங்கில் சென்ற 6ம் தேதி அரங்கேற்றம். ஆரம்பமே ஸ்ரீ தியாகராஜ சுவாமிகளின் சௌராஷ்டிர கணபதி கீர்த்தனையோடுதான். வர்ணத்துக்குப் பஞ்சரத்ன கீர்த்தனையில் ஒன்றான 'ஸாதிஞ்சனே' என்ற ஆரபி ராகக் கீர்த்தனை. சம்பிரதாய வர்ணத்துக்குப் பதில் இது இடம் பெற்றது ஆசிரியை சீர்காழி குமாரி வனஜாவின் ரசிகத்தன்மையைக் காட்டியதுடன் அரங்கேற்றங்களில் மாணவிகளின் நிருத்தியப் பயிற்சியின் முதிர்வையும் வெளிக்காட்ட வல்லது இக்கிருதி என்பதை மீனுகுமாரியின் நடனங்கள் நிரூபித்தன. ராகமாலிகையில் பாடப்பட்ட பஞ்சரத்ன சுலோகங்களுக்கும் தீக்ஷிதரின் ''மாமவ மீனாக்ஷி'' வராளி ராகக் கிருதிக்கும் அபிநயம் பிடிப்பது அரங்கேற்ற கட்டத்திலுள்ள எந்த மாணவிக்கும் சுலபமல்ல என்றாலும், மீனு குமாரியின் அபிநயங்கள் அழகாக இருந்தன. கானடா ராகத் தில்லானா தனியாகக் குறிப்பிட வேண்டிய அம்சம். குமாரி மீனு குமாரி கும்பகோணம் ஹோமியோபதி டாக்டர் ஆர். ஜே. மூர்த்தியின் புதல்வி என்பதுடன், சில ஆண்டுகளுக்கு முன் பரதக் கலையில் பாராட்டுதல்கள் பெற்ற சாருபாலா, இந்துபாலா இருவரும் குமாரி மீனுகுமாரிக்கு அத்தை முறையாக வேண்டும். பரதக் கலைக்குக் கூட பாரம்பரியம் உதவுகிறது என்று சொல்லத்தான் வேண்டும். பத்மஸ்ரீ கே. என். தண்டாயுதபாணி பிள்ளையிடம் பயிற்சி பெற்ற நடன ஆசிரியை குமாரி வனஜாவின் அரங்கேற்றமாகும் முதல் மாணவி மீனு குமாரி. ஆசிரியை, மாணவி இருவருக்குமே நல்ல ஆரம்பம்.


இலவசம்!
ரூ.3 மதிப்புள்ள
உடைக்க
முடியாத
பெரிய டப்பா
இரண்டு பாட்டில்கள்
விவா வாங்குவோருக்கு!
ஆரோக்கியம்
வேண்டுவோர்
விரும்புவது
விவா
விவா
VIVA
ViVA
FREE!
முந்துங்கள்! சரக்கு
மிதமாக உள்ளது!
கவர்ச்சியான
வண்ணங்களில்
கிடைக்கிறது
இந்த விசேஷ சலுகை தமிழ் நாடு,
கேரளம், ஆந்திர பிரதேசம் மற்றும்
மைசூர் மாநிலங்களில் மட்டுமே.
விவா— ஆரோக்கிய
பானங்களில் கண்டறியாத
அருஞ்சுவையுள்ள பானம்

வின் ஓரத்தில் அகப்பட்டிருந்த மூக்குக் கண்ணாடியை எடுத்து மாட்டிக் கொண்ட தணிகாசலம் விழித்தார்.

''ஐயா!..... இது என் இரண்டாம் மகள் மல்லிகா! நீங்க இன்னும் ரஞ்சிதத்தைப் பார்க்கவே இல்லே'' என்றார். காலையில் ரஞ்சிதமும் சிவப்பு நைலக்ஸ் புடவை கட்டிக் கொண்டிருந்தாள். கண்ணாடி அணியாத தணிகாசலம் எட்டத்தில் இருந்தவள் மல்லிகா என்பதைச் சரியாகக் கவனிக்காமல் உள்ளே கூப்பிட்ட தவற்றை அப்போதுதான் உணர்ந்தார். குரல் கேட்ட பிறகுதான் அவருக்குத் தாம் செய்த தவறு புரிந்தது, பளிச்சென்று. அவசரம் அவசரமாக எழுந்துபோய் ரஞ்சிதத்தை அழைத்து வந்தார். ஆடை அணிகலன்கள் மேக் அப் பின் சகிதம் ரஞ்சிதம் வந்து ஒரு கீர்த்தனை வாசித்துவிட்டு, நாசூக்காகக் கரமீ கூப்பி விட்டுப் போய்விட்டாள். வந்தவர்கள் உடனடியாக ஒன்றும் பேசவில்லை. அவர்கள் தங்களுக்குள் கலந்து ஆலோசிக்கட்டும் என்று தணிகாசலமும் உள்ளே போனார்.

திருஞானம் குடும்பத்துக்கு என்னவோ மல்லிகாவை ரொம்பப் பிடித்துப் போய் விட்டது. ரஞ்சிதம் அழகில் சிறந்தவளாக இருந்தாலும் மல்லிகாவின் எளிய தன்மையும் குனிந்து வணங்கும் சுபாவமும் குரல் இனிமையும் அவர்கள் மனத்தைக் கவர்ந்து விட்டன. நடராஜன் விஷயத்தைத் தாயின் விருப்பத்துக்கு விட்டு விட்டான். சிவகாமி மல்லிகாவைத்தான் விரும்பினாள்.

தணிகாசலம் அவர்கள் முடிவைக் கேட்டு முதலில் திகைப்படைந்தார். அப்புறம் தயங்கினார். அமிர்தத்துடன் கலந்து ஆலோசித்தார். அமிர்தம் முதலில் முடியாது என்று பிடிவாதம் பிடித்தாலும் தணிகாசலம் விருப்பப்படி திருவுளச்சீட்டுப் போட்டுப் பார்த்து விடலாம் என்பதற்கு ஒப்புக் கொண்டாள். தணிகாசலம் இந்தத் திருவுளச் சீட்டு பற்றித் திருஞானத்திடம் சொன்னபோது, அவர்கள் யோசித்தார்கள். கடைசியில் ஒப்புக்கொண்டார்கள். மல்லிகாவே மருமகளாக வந்து சேர வாய்ப்பு இருக்கிறதல்லவா!

அவர்கள் பூஜை அறையில் திருவுளச் சீட்டுக்கு ஏற்பாடு செய்து கொண்டிருந்த போது சிவகாமி பின்னால் கொற்றடிக்கு வந்தாள். அதைச் சமையலறையிலிருந்து மல்லிகா கவனித்து விட்டுச் சிவகாமி பின்னாலேயே போனாள்.

''பெரியம்மா! நான் ஒரு விஷயம் சொல்றேன்! தயவு செய்து கேட்பீங்களா?'' என்றாள் மல்லிகா கரகரத்த குரலில். அவள் கண்கள் குளமாயின.

சிவகாமி அவளை அன்புடன் அணைத்துக் கொண்டாள். அவளுக்கு ஒன்றும் புரியவில்லை.

''பெரியம்மா உங்க அன்புக்கு நான் ரொம்பவும் நன்றி செலுத்துகிறேன். ஆனால் என் அக்கா கண்ணிலே என்னை ஒரு போட்டிக்கு முளைத்த விஷச் செடின்னு மாத்திரம் காண்பித்துக் கொடுத்திடாதீங்க! ஜன்மம் உள்ள அளவும் என்னை மன்னிக்க மாட்டாள். என்னைப் பார்க்கவேண்ணு நீங்க அவளைத்தானே மருமகளாக்கிக்கிட்டு இருப்பீங்க! அப்படித் தயவுசெய்து நினைச்சுக்குங்க அம்மா! எனக்கு ஒரே அக்கா! அவள் என்னை விரோதியாக நினைக்க வைச்சுடாதீங்க. அவள் ரொம்ப நல்லவ'' என்று விசும்பினாள் மல்லிகா. சிவகாமியும் தன் கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

''இந்தாங்க! சீட்டுக் கீட்டு ஒன்னும் வேணாம். குழந்தை ரஞ்சிதத்தைக் கூப்பிட்டு இன்னொரு கீர்த்தனை வாசிக்கச் சொல்லுங்க. அவதான் நம்ப வீட்டு மருமகள்'' என்று சொன்னபோது எல்லோருக்குமே வியப்பாக இருந்தது. மல்லிகா அவசரம் அவசரமாகக் கண்களைத் துடைத்துக் கொண்டு ஹால் பக்கம் எட்டிப் பார்த்தாள்.

ரஞ்சிதம்—நடராஜன் திருமணம் வெகு பிரமாதமாக நடந்தேறியது.

(சம்பவம் உண்மை; பெயர்கள் மட்டும் மாற்றப் பட்டுள்ளன.)



★ ருஷ்யாவிலிருந்து சோவியத் குழு அண்மையில் பாரத நாட்டுக்கு வந்து பல நகரங்களிலும் நடன நிகழ்ச்சிகளை நடத்தினது. [illegible]


பெண்மை.
மதிமயக்கும்,
மலைப்பூட்டும்,
மனம் வாட்டும்,
மகிழ்வூட்டும்.
பெண்மையின்
பத்துவித
சித்தங்களைப்
படித்தறிந்த
படைப்பு
'மெ:ப்ரின்'
மெஃப்ரின்
மபத்லால்
க்ரூப்

பொன்னியின் செல்வன்

அமரர் கல்கி

அத்தியாயம் தொண்ணூற்றொன்று

மலர் உதிர்ந்தது!

வந்தியத் தேவன் ஓலையை வாங்கிக் கொண்டு வானதியைப் பார்த்து, ''இளவரசி! என்னைத் தங்களுக்கு நினைவிருக்கிறதா? அடியோடு மறந்து விட்டீர்கள் என்றல்லவோ நினைத்தேன்?'' என்றான்.

''ஐயா! தங்களை எவ்வாறு நான் மறக்க முடியும்? எனக்கும் என் கணவருக்கும் தாங்கள் செய்துள்ள உதவிகளைத்தான் எப்படி மறக்க முடியும்?'' என்றாள் வானதி.

''அதனாலேதான் நான் இல்லாத சமயம் பார்த்துத் தங்கள் திருமணத்தை நடத்திக் கொண்டீர்களாக்கும்!'' என்றான். வானதி குறும்புப் புன்னகையுடன், ''ஆமாம், தாங்கள் இருந்திருந்தால் பொன்னியின் செல்வரின் மகுடாபிஷேகத்தைப்போல் திருமணமும் நடந்திருக்கலாம் அல்லவா? தாங்கள் என்ன சூழ்ச்சி செய்திருப்பீர்களோ என்னமோ, அதை யார் கண்டது?'' என்றாள்.

''நானா பொன்னியின் செல்வருக்கு மகுடாபிஷேகம் நடக்காதபடி செய்தேன்? பூங்குழலியிடம் போட்டி போட்டுக் கொண்டு தாங்கள் 'சிங்காதனம் ஏறுவதில்லை' என்று செய்த சபதம் அல்லவா அதற்குக் காரணம்? படகுக்காரப் பெண்ணுக்கு அதிர்ஷ்டம் அடித்தது! என்மீது குறைப்பட்டு என்ன பயன்?'' என்றான் வந்தியத்தேவன்.

''அவளே அந்த அதிருஷ்டத்தை அநுபவிக்கட்டும்! அதற்காக அவள் பேரிலும் எனக்குக் குறை இல்லை; தங்கள் பேரிலும் குறையில்லை. மகிழ்ச்சிதான். ஆனால் தங்களுடைய திருமணத்துக்கு நாள் குறிப்பிடும்போது மட்டும் நல்ல சோதிடராகப் பார்த்து நாள் குறிப்பிடச் செய்யுங்கள்!'' என்றாள்.

''குடந்தை சோதிடரையே நாள் வைக்கச் சொன்னால் போகிறது! தங்களுக்கெல்லாம் அவரிடத்திலேதானே நம்பிக்கை!'' என்று வானதியைப் பார்த்துச் சொன்னான் வந்தியத்தேவன்.





வானதி கலீர் என்று சிரித்துவிட்டு இளையபிராட்டியை நோக்கி, ''அக்கா! இவர் குடந்தை சோதிடரைப் பற்றிச் சொன்னதும் ஒரு விஷயம் ஞாபகம் வருகிறது!'' என்று சொல்லி விட்டு மறுபடியும் கலகலவென்று சிரித்தாள்.

''எதை நினைத்துக் கொண்டு சிரிக்கிறாய், வானதி! 'உன் வயிற்றிலே பிறக்கப்போகிற பிள்ளை மூன்று உலகத்தையும் ஆளப் போகிறான்' என்று அந்த ஜோசியர் உளறினாரே, அதை எண்ணிச் சிரிக்கிறாயா?'' என்றாள் குந்தவை.

''அதை ஏன் உளறல் என்கிறீர்கள், தேவி! அந்த ஜோசியம் பலிக்கப் போகிறது!'' என்றான் வந்தியத்தேவன்.

வானதி தன்னை யறியாமல் ஏற்பட்ட கூச்சத்தினால் சிரிப்பை அடக்கிக்கொண்டாள். பிறகு ''அக்கா! நான் ஒன்று சொல்ல வந்தால், தாங்கள் பேச்சை வேறு பக்கம் திருப்புகிறீர்களே? குடந்தை சோதிடரிடம் நான் 'இளைய பிராட்டிக்குத் தகுந்த கணவர் எங்கிருந்து வரப் போகிறார்?' என்று கேட்டேன். 'இந்த நிமிஷமே ஆகாசத்திலிருந்து வந்து குதித்தாலும் குதிப்பார்' என்றார் ஜோசியர். மறுநிமிடம் இவர் ஜோசியருடைய சீடனுடன் சண்டையிட்டுக் கொண்டே உள்ளே வந்து குதித்தார்! அந்தச் சம்பவத்தை நினைத்துச் சிரித்தேன்!'' என்றாள்.

குந்தவை பொங்கி வந்த சிரிப்பை அடக்கிக் கொண்டு கள்ளக் கோபத்துடன், ''போதும் உன் விளையாட்டு! அவசரமாக வந்திருக்கும் ஓலையை இவர் படிக்கட்டும்!'' என்றாள்.

வந்தியத்தேவன் ஓலையைப் படித்த போது அவனுடைய முகத்தில் தோன்றிய கவலைக் குறியை இரண்டு பெண் மணிகளும் கவனித்தார்கள்.

''என்ன சேதி? கந்தமாறன் என்ன எழுதி யிருக்கிறான்?'' என்று இளைய பிராட்டி ஆர்வத்துடன் கேட்டாள்.

''தாங்களே படித்துப் பாருங்கள்!'' என்று வந்தியத் தேவன் ஓலையைக் குந்தவையிடம் கொடுத்தான்.

ஓலையில் பின்வருமாறுஎழுதியிருந்தது:

''என் அருமைத் தோழனாகிய வல்லவரையன் வந்தியத்தேவனுக்கு, நான் உனக்குச் செய்த குற்றங்களையும் இழைத்த அநீதிகளையும் மன்னித்துவிட்டு, என் சகோதரி மணிமேகலையைக் கடைசி முறை பார்ப்பதற்காக உடனே புறப்பட்டு வந்து சேரவும். இளஞ் சம்புவரையன் கந்தமாறன்.''

குந்தவை அதைப் படித்து விட்டு, ''ஒருவிதத்தில் இது நல்ல செய்திதான். மணிமேகலை அகப்பட்டுவிட்டாள் என்று தெரிகிறது!'' என்றாள்.

''அது என்ன? மணிமேகலை எங்கே போயிருந்தாள்?'' என்று வந்தியத் தேவன் வியப்புடன் வினவினான்.

''மணிமேகலையைப் பற்றிய செய்தி ஒன்றுமே தங்களுக்குத் தெரியாதா?''

''தெரியாது! தங்களைக் கேட்கவே எண்ணி யிருந்தேன்.''

''நானும் சொல்ல விரும்பினேன். ஆனால் இவ்வளவு கல்நெஞ்சுடன் அவளைப் பற்றி விசாரிக்காமல் இருப்பவரிடம் எப்படி அவள் பேச்சை எடுப்பது என்று தயங்கினேன்.''

''தேவி! மணிமேகலை விஷயத்தில் நான் கல்நெஞ்சனாவது எப்படி? அவளைப் பொறுத்தவரையில் நான் இறந்தவனாகிவிட்டேன் அல்லவா?''

''இல்லை; அவளுக்குத் தாங்கள் இறந்தவராக வில்லை. இறவாத வரம் பெற்ற அமரராகி விட்டீர்கள்!''

''போகட்டும்; இப்போதாவது மணிமேகலையைப் பற்றிச் சொல்லுங்கள்.''

''சொல்லுவதற்கே வருத்தமா யிருக்கிறது. செம்பியன்மாதேவி மணிமேகலை தம்முடன் இருக்கட்டும் என்று எவ்வளவோ சொன்னார். சம்புவரையர் அதற்கு இணங்கவில்லை. கந்தமாறன் எல்லைப் பாதுகாப்புக்குப் போய்விடுவான் என்றும், தம் புதல்வியாவது தம்முடன் இருக்க வேண்டும் என்றும் வற்புறுத்தி அழைத்துச் சென்றார். கடம்பூர் மாளிகை எரிந்துபோய் விட்டபடியால் பாலாற்றின் வடகரையில் புதிய மாளிகை கட்டிக்கொள்ளச் சக்கரவர்த்தியின் அநுமதியும் பெற்றுக் கொண்டு புறப்பட்டார். வழியில் வீர நாராயண புரத்துக்கு அருகில் இரவு நேரத்தைக் கழிப்பதற்காகக் கூடாரம் போட்டுக் கொண்டு தங்கினார். மறுநாள் பொழுது விடிந்து பார்த்தால் மணிமேகலையைக் காணவில்லையாம். ஒருவேளை இங்கே திரும்பி ஓடி வந்து விட்டாளோ என்று பார்ப்பதற்காக ஆள் அனுப்பினார். இங்கே வரவில்லை என்று சொல்லி அனுப்பினோம். அது முதல் எங்களுக்கெல்லாம் ஒரே கவலையாக இருந்தது. ஒருவேளை வீரநாராயண ஏரியில் விழுந்து உயிரையே மாய்த்துக் கொண்டிருப்பாளோ என்று நினைத்து நினைத்து வருந்தினோம். நாலா திசைகளிலும் ஆட்கள் தேடிக் கொண்டிருப்பதாகச் செய்தி கிடைத்தது. கந்தமாறனுடைய ஓலையிலிருந்து மணிமேகலை இருக்குமிடம் தெரிந்து அவளைக் கண்டுபிடித்து விட்டார்கள் என்று தோன்றுகிறது.''

''அவளை நான் போய்ப் பார்ப்பதிலே தான் என்ன பயன்? என்னை அவன்

தெரிந்து கொள்ளப் போவதில்லை!'' என்றான் வந்தியத்தேவன்.

''இருந்தாலும் தாங்கள் அவசியம் போக வேண்டும். 'கடைசி முறையாக' என்று கந்தமாறன் எழுதியிருக்கிறான். அதன் பொருள் என்னவோ தெரியவில்லை'' என்றாள் குந்தவை.

''அக்கா! இவர் கொஞ்சமும் ஈவு இரக்கம் அற்றவர். மணிமேகலையின் அன்புக்குக் கொஞ்சமும் பாத்திரமில்லாதவர். ஒவ்வொருவர் அன்புக்காகப் பெரிய சாம்ராஜ்யத்தையே தியாகம் செய்கிறார்கள். இவரோ ஒரு பிரயாணம் செய்வதற்குக் கூடத் தயங்குகிறார்'' என்று வானதி ஒரு போடு போட்டாள்.

வந்தியத்தேவன் ''இளவரசி! உலகத்தில் ராஜ்யங்கள் கொஞ்சமாகத்தான் இருக்கின்றன. ஆகையால் அன்புக்காக ராஜ்யத்தைத் தியாகம் செய்கிற காரியம் சிலராலேதான் முடியும். ஆனால் முதலில் தாங்கள் கூறியது உண்மையே. மணிமேகலையின் அன்புக்கு நான் சிறிதும் தகுதியில்லாதவன். தெய்வத்தினிடம் வைக்க வேண்டிய காதலை அவள் என்னிடம் வைத்துவிட்டாள். நான் தேவனல்ல, குற்றங்குறைகள் உள்ள சாதாரண மனிதன். மணிமேகலையின் அன்பு கடவுளுக்கு அர்ப்பணமாக வேண்டியது!'' என்றான்.


''இருந்தாலும் தாங்கள் ஒரு தடவை அவளைப் போய்ப் பார்த்துவிட்டு வருவதில் தவறு ஒன்றுமில்லையே? கந்தமாறனும் 'கடைசித் தடவையாக' என்று தானே எழுதியிருக்கிறான்?'' என்றாள் இளையபிராட்டி குந்தவை.

''நான் போக மாட்டேன் என்று சொல்லவில்லையே? போவதில் பயன் உண்டா என்றுதான் சந்தேகிக்கிறேன். நான் அவளுக்கு இறந்து போனவன் ஆயிற்றே என்று தயங்குகிறேன். ஆயினும் 'கடைசித் தடவையாக' என்று கந்தமாறன் எழுதியிருப்பதின் பொருள் நன்றாக விளங்கவில்லை. அப்புறம் அவளைப் பார்க்கக் கூடாது என்று கட்டுப்பாடு விதிக்கப் போகிறானா என்ன? அல்லது புத்த மதத்தாரின் கன்யாமாடத்தில் அவளைக் கொண்டு போய்ச் சேர்த்துவிடப் போகிறானா?''

''தாங்கள் ஒரு நாள் பிரயாணம் செய்தால் எல்லாம்தெரிந்துவிடுகிறது!'' என்றாள் இளையபிராட்டி குந்தவை.

*　　　*　　　*

வந்தியத்தேவன் பழையாறையிலிருந்து வீர நாராயணபுரத்துக்கு ஒரு நாள்தான் பிரயாணம் செய்தான். ஆனால் முன் முறைகளில் போலன்றி



''நேத்து நாம மொத்தம் பத்து லட்ச ரூபாயில்ல கொள்ளை யடிச்சுக்கிட்டு வந்தோம். பேப்பர்லே ஒரு லட்சந்தான் திருட்டு போச்சுன்னு போட்டிருக்காங்களே!''

''மிச்சமெல்லாம் கறுப்புப் பணம்!''

—தோ

இந்தத் தடவை அந்த ஒரு நாள் ஒரு யுகம் செல்வதுபோல் சென்றது. அவனுடைய உள்ளத்தில் அவ்வளவு நினைவுகளும் அநுபவங்களும் குமுறிக் கொண்டிருந்தன. முதன் முதலில் அவன் இந்த வழியாகத் தஞ்சை சென்றபோது எத்தனையோ இனிய காட்சிகளைக் கண்டான்; எவ்வளவோ ஆகாசக் கோட்டைகள் கட்டினான். அவையெல்லாம் ஆகாசக் கோட்டைகளாகப் போய் விடவில்லை. நடக்க முடியாத பல காரியங்கள் நடந்தேறி விட்டன. சோழ நாட்டின் செல்வக் குமாரரை, தமிழகமெல்லாம் போற்றிக் கொண்டாடிய வீர இளவரசரை, தன் கையில் வந்த சாம்ராஜ்ய மகுடத்தை இன்னொருவர் சிரஸில் சூட்டி அதனால் மேரு மலையை விட உயர்ந்து தியாக சிகரமாக விளங்கும் பொன்னியின் செல்வரை அவன் உயிர் நண்பராகப் பெற்றான். அத்தகைய பொன்னியின் செல்வர் போற்றி வணங்கும் இளையபிராட்டியின் இதயத்தில் இடம் பெற்றான். ஈழ நாட்டிலுள்ள சோழ சைன்யத்தின் மாதண்ட நாயகன் பதவியை ஏ அடைந்தான். இவ்வளவும் தன் சாமர்த்தியத்தினால் என்று சொல்ல முடியுமா? ஒரு நாளுமில்லை. கடம்பூர் மாளிகைக்கு அன்றிரவு, தான் தற்செயலாகப் போய்ச் சேர்ந்ததும், அங்கே சிற்றரசர்கள் செய்த சதியாலோசனையை அறிந்ததும் பின்னால் தொடர்ந்த நிகழ்ச்சிகளுக்கெல்லாம் காரணமாயின. இந்த எட்டு மாத காலத்துக்குள் எவ்வளவு எவ்வளவோ காரியங்கள் நடந்து விட்டன. அவற்றில் சில மிக முக்கியமானவை. வானத்தில் தோன்றிய தூமகேது தன்னுடைய விபரீதச் செயலைப் புரிந்துவிட்டு மறைந்தது. ஆதித்த கரிகாலர் மறைந்து விட்டார். வால் நட்சத்திரத்துக்கும், ஆதித்த கரிகாலருக்கும் சம்பந்தம் இருக்க முடியுமா? லட்சக்கணக்

கான மக்கள் அத்தகைய நம்பிக்கை கொண்டிருப்பது பொய்யாகுமா? வானத்தில் ஊழி ஊழி காலம் சஞ்சரிக்கும் கிரகங்களுக்கும் நட்சத்திரங்களுக்கும் இந்த மண்ணுலகில் இன்று தோன்றி நாளை மறையும் மனிதர் வாழ்வுக்கும் என்ன சம்பந்தம் இருக்க முடியும்? ஆயினும், மனிதர்கள் அறிய முடியாத ஏதோ ஓர் அதீதமான சக்தி, ஏதோ ஒரு மாற்றுதற்கரிய நியதி மனிதர் வாழ்வை நடத்தி வைக்கிறது என்பதில் சந்தேகமில்லை. இல்லாவிட்டால் சென்ற எட்டு மாதங்களில் தான் எத்தனையோ இடுக்கண்களில் அகப்பட்டுக் கொண்டு அவற்றிலிருந்து எவ்வாறு மீண்டிருக்க முடியும்? எத்தனை எத்தனை பேர் அந்தந்த இடுக்கண்களிலிருந்து தப்பித்துக் கொள்ளத் தனக்கு உதவி செய்திருக்கிறார்கள்! அவர்களையெல்லாம் அந்தந்தச் சமயத்தில் தன்னுடைய உதவிக்காகக் கொண்டு வந்து சேர்த்தது யார்? அந்த அதிசயமான சக்தியைத்தான் பெரியோர்கள் இறைவன் என்று போற்றி வணங்குகிறார்களா! சிவன், திருமால், மகாசக்தி என்றெல்லாம் பெயர் கொடுத்துப் பாடிப் பரவுகிறார்களா!

மிகமிக நெருக்கடியான சந்தர்ப்பங்களில் அவனுக்கு எதிர்பாராதவிதமாகக் கிடைத்த உதவிகளை நினைத்தபோது வந்தியத்தேவனுக்கு ஒரே வியப்பாயிருந்தது. உதவி செய்தவர்களை நினைத்தபோது உள்ளம் உருகியது. கந்தமாறன் பின்னால் தனக்கு எவ்வளவு தீங்கிழைத்த போதிலும் முதலில் அவன் செய்த உதவியை என்றும் மறக்க இயலாது. ஆழ்வார்க்கடியான் அவனுக்கு எவ்வளவோ சகாயம் புரிந்தான். மோகினி உருக் கொண்ட ராட்சஸி நந்தினியும் அவனுக்கு உதவினாள்! அவளிடம் இளையபிராட்டி இன்னமும் கொண்டிருக்கும் உள்ளக் கனிவை நினைத்து நினைத்து அவன் வியந்தான். ஓடக்காரப் பெண் பூங்குழலி செய்திருக்கும் உதவியை ஈரேழு பிறவிகளிலும் மறக்க முடியாது. அவள் சோழ சாம்ராஜ்ய சிங்காதனத்தில் வீற்றிருக்கத் தகுதி வாய்ந்தவளே.

சேந்தன் அமுதனாக முதலில் அவன் அறிந்த உத்தமச் சோழர் செய்த உதவியை என்னவென்று சொல்வது? அதற்கு ஈடு இணை உண்டா? அவரை வைத்தியர் மகனின் ஈட்டியிலிருந்து காப்பாற்றியதனால் தன் நன்றிக்கடனைச் செலுத்தி விட்டதாகுமா? ஒரு நாளுமில்லை. தன் உடலில் உயிர் உள்ள வரையில் சோழ குலத்துக்குத் தொண்டு செய்வதின் மூலமாகத்தான் அந்தக் குலத்துக்குத் தான் பட்ட கடனைத் தீர்க்க முடியும். அப்புறம் தனாதிகாரி பெரிய பழுவேட்டரையர்! தமது நெடிய திருமேனியில் அறுபத்து நாலு போர்க் காயங்களைத் தாங்கிய அந்த மகா வீரரைப் பார்க்கக் கொடுத்து வைத்தால், அதுவே தான் செய்த பெரும் பாக்கியம் என்று அவன் நினைத்திருந்த காலம் உண்டு. அவரைப் பார்த்ததுமல்லாமல் அவருடைய அநாவசியமான கோபத்துக்கும் துவேஷத்துக்கும் அவன் உள்ளாக நேர்ந்தது. கடைசியாக, அவ்வளவுக்கும் அவர் பரிகாரம் செய்து விட்டார். தான் எறிந்த கத்தி குறி தவறி ஆதித்த கரிகாலரைக் கொன்றுவிட்டதாக ஒப்புக் கொண்டு அவனை விபரீதமான பழியிலிருந்தும் கொடுந் தண்டனையிலிருந்தும் காப்பாற்றினார்! அவர் அல்லவோ மகான்? இனி அவருக்கு எந்தவிதத்தில் அவனுடைய நன்றியைச் செலுத்த முடியும்?

இவர்கள் எல்லாரும் இருக்கட்டும். அந்தப் பேதைப் பெண் மணிமேகலை! அவள் எதற்காக இவனிடம் இத்தகைய தெய்விகமான அன்பு வைக்க வேண்டும்? ஏன் இப்படிப் பைத்தியமாக வேண்டும்? இவனைக் காப்பாற்றுவதற்காகக் கொலைக் குற்றத்தைத் தான் ஏற்றுக் கொள்ள ஏன் முன் வர வேண்டும்?

எல்லாம் அந்த மூடன் கந்தமாறனால் வந்த வினை, முதலில் கந்தமாறன் மணிமேகலையிடம் இவனைப் பற்றி இந்திரன்—சந்திரன், அர்ச்சுனன் — மன்மதன் என்றெல்லாம் புகழ்ந்திருக்கிறான். அப்போதே அந்தப் பேதைப் பெண் அவளுடைய உள்ளத்தைப் பறி கொடுத்து விட்டாள் போலும்! அதெல்லாம் வந்தியத்தேவனுக்குத் தெரியாது.

“என் தங்கையை நீ மறந்துவிடு! பெரிய இடத்தில் அவளைக் கொடுக்கப் போகிறோம்!” என்று கந்தமாறன் சொன்னதும், வந்தியத்தேவன் உண்மையாகவே அவளை மறந்துவிட முயன்றான். இளைய பிராட்டியைச் சந்தித்ததும் அதற்குத் துணையாயிருந்தது. ஆனால் மணிமேகலையோ தன் மனத்தை மாற்றிக் கொள்ளவில்லை; மாற்றிக் கொள்ள முயலவும் இல்லை. பலர் அறிய அவள் உள்ளத்தை வெளிப்படுத்தத் தயங்கவும் இல்லை. ஆகா! என்ன இனிய குணம் படைத்த பெண்! எவ்வளவு அடக்கம், அமரிக்கை! அவளுடைய மனந்தான் எத்தனை தூய்மையானது! பச்சைக் குழந்தையைப் போன்ற உள்ளம்! உண்மையிலேயே அவள் குழந்தைதான்! பால் போன்ற மனம்; அதில்

பல குறும்புத்தனம். தன்னை இறந்து விட்டவனாக அவள் எண்ணிக் கொண்டிருப்பது மிக்க நல்லது. எப்போதுமே சித்தப் பிரமை கொண்டவளாக அவள் இருந்துவிட மாட்டாளே! சில காலம் போனால் உள்ளம் தெளிந்துவிடும். வேறொரு வீர வாலிபனை மணந்து அவள் ஆனந்த வாழ்க்கை நடத்துவாள்!... உண்மையில், அப்படி நடக்குமா? அல்லது என்னை நானே ஏமாற்றிக் கொள்கிறேனா? மணிமேகலையை இந்த நிலைக்கு உள்ளாக்குவதற்கு நான் பொறுப்பாளியாவேனா? 'கடைசி முறை பார்ப்பதற்கு வரவும்' என்று கந்தமாறன் எழுதியிருப்பதன் பொருள் என்ன? ஒரு வேளை... ஒரு வேளை.... ஆகா! அந்த எண்ணமே எவ்வளவு வேதனை தருகிறது!

* * *

வந்தியத்தேவனுடைய எண்ணங்களின் வேகத்தையொட்டி அவன் ஏறியிருந்த புரவியும் வேகமாகச் சென்றது. நல்ல வேளையாகக் கொள்ளிட நதியில், பெரு வெள்ளம் போகவில்லை. படகும் தேவையாக இல்லை; குதிரை மாற்ற வேண்டிய அவசியமும் ஏற்படவில்லை. கரையோரமாகச் சென்றுகொண்டிருந்த சிறிய பிரவாகத்தில் குதிரையை இறக்கி விட்டுக் கடந்து, பரந்து விரிந்திருந்த வெண் மணல் திட்டுக்களையும் கடந்து அக்கரையை அடைந்தான்.

கடம்பூர் மாளிகை தீயில் எரிந்து கரி ஏறிய சில தூண்களும் சுவர்களுமாக நின்ற கோரக் காட்சியைத் தூரத்திலிருந்தே பார்த்துவிட்டு மேலே சென்றான். வீர நாராயணபுரத்துக்கு அருகிலேயே கந்தமாறனுடைய ஆட்கள் அவனுக்காகக் காத்திருந்தார்கள். "சின்ன எஜமானர் எங்கே?" என்று கேட்டதற்கு, "ஏரிக் கரையில் படகுடன் காத்திருக்கிறார்கள்!" என்று பதில் வந்தது.

ஏரிக் கரையில் எதற்காகக் காத்திருக்க வேண்டும் என்று சிந்தித்துக் கொண்டே வந்தியத்தேவன் வீர நாராயண ஏரியை அணுகினான். அந்த ஏரியின் நெடிதுயர்ந்த கரை ஒரு பெரும் கோட்டைச் சுவர்போல் அப்பாலிருந்த தண்ணீர்ப் பரப்பை மறைத்துக் கொண்டிருந்தது. முதல் தடவை அந்த ஏரிக் கரைக்கு அவன் வந்தபோது, பதினெட்டாம் பெருக்கு விழாவுக்காக அங்கே மக்கள் திரண்டு இருந்ததையும், ஆண்களும் பெண்களும் குழந்தைகளும் கோலாகலமாக ஆடிப் பாடி விளையாடி விருந்துண்டு மகிழ்ந்ததையும் நினைவு கூர்ந்தான். இப்போது அந்த ஏரிக் கரையில் அவ்வளவு அதிக ஜனங்களைக் காணவில்லை. அங்கொருவர் இங்கொருவர் தான் காணப்பட்டார்கள். ஏரியில் எல்லா மடைகளிலிருந்தும் அச்சமயம் தண்ணீர் குபுகுபுவென்று பாய்ந்து கொண்டிருந்தது. அவ்விதம் தண்ணீர் பாயும் ஓசை சந்தை இரைச்சல் போன்ற பேரொலியாகக் கேட்டது. இச்சமயம் ஒரு சில கணவாய்களிலிருந்து மட்டும் மெல்லிய சலசல ஒலியுடன் தண்ணீர் பாய்ந்து கொண்டிருந்தது. ஏதோ சோக கீதத்தைப் பாடிக் கொண்டு ஆடும் நடனக்காரியின் சிலம்பின் புலம்பலைப் போல் அது தொனித்தது.



செங்குத்தாக உயர்ந்த ஏரிக்கரையின் மேல் குதிரையை லாகவமாக வந்தியத்தேவன் ஏற்றி உச்சியை அடைந்தான். அங்கிருந்து அவன் கண் முன் தோன்றிய காட்சியும் மாறுதலாகவே இருந்தது. தண்ணீர் நிறைந்து ததும்பி ஏரிக் கரையை உடைக்க முயல்வது போல் அலை மோதிக் கொண்டிருக்கவில்லை. கரையின் அடிப் பகுதியிலிருந்துதான் தண்ணீர்ப் பரப்பு தொடங்கியது. தண்ணீரின் செங்காவி நிறம் அடியோடு மாறிப் பளிங்குபோல் தெளிந்திருந்தது. கரையோரமாக அல்லியும், செங்கழுநீரும், தாமரையும், நீலோத்பலமும் இளம் இலை, முற்றிய இலை, இளம் மொட்டு, பாதி விரிந்த மொட்டு, முழுதும் மலர்ந்த மலர் — என்று இவ்வளவு பிரிவினையுடன் அடர்ந்து தழைத்திருந்தன. சிற்சில இடங்களில் தண்ணீரே அவற்றினால் மூடப்பட்டிருந்தது.

ஏரியின் தென் கரை ஓரமாக வடவாற்றிலிருந்து நீரோட்டம் சுழிகளும்

சமோசா, பட்டீஸ், ஆகியவற்றை அதிமெல்லியதாக வும், முறமுறப்பாகவும் தயாரிக்கவும் (2 கோப்பை சாதா மாவுக்கு 1 டேபிள்ஸ்பூன் போதுமானது). குழைவான சுவைமிகு சூப், கிரேவி ஆகியவற்றைக் கெட்டியாகத் தயாரிக்கவும். இளம் குழந்தைகள், நோயாளிகள் ஆகியோருக்குத் தென்புதரவும் ஆரோக் கியமான பண்டம் பிரவுன் & போல்ஸன் கார்ன் ஃப்ளவர். இது அருமையான பொருள்களிலிருந்து மிகுந்த கவனத்துடன் பக்குவப் படுத்தப் பட்டதால கார்ன் ஃப்ளவர்களில் மிகவும் சிறந்தது.

உங்கள் வசதியை முன்னிட்டு டப்பாக்களிலேயும் வருகிறது.



பக்குவ முறை: (விழுதாகச் செய்ய) 1 முட்டை. 227 கிராம் பிரவுன் & போல்ஸன் பேடெண்ட் கார்ன் ஃப்ளவர். 227 கிராம் மை... ¼ தேக்கரண்டி உப்பு.

மெல்லியதாக நறுக்கிய பட்டாணி, காரட்டு, உருளைக் கிழங்கு, பிரெஞ்சு பீன்ஸ், முட்டைக்கோசு மற்றும் குடமிளகாய் தலா 1 கோப்பை. 1 தேக்கரண்டி ரெக்ஸ் பேகிங் பவுடர். 3 பச்சை மிளகாய் 2.5 செமீ. இஞ்சி. 6 துண்டு உள்ளிப்பூண்டு. பச்சை கொத்தமல்லி. 1 தேங்காய் மூடி—எல்லாம் நன்றாக அரைக்கப்பட்டது. 1 வெங்காயம் (மெல்லியதாக நறுக்கப்பட்டது). ½ எலுமிச்சம் பழச்சாறு. உப்பு. ரொட்டித் துண்டங்கள்.

முட்டைக் கருவைக் கடைந்து. மெல்லிய விழுதாகச் செய்யவும். மற்ற பொருள்களை நீருடன் கலந்து. விழுதாக்கி தனியே வைக்கவும்.

நறுக்கிய வெங்காயத்தை வறுத்துக்கொள்ளவும். பொன்னிறமானதும், அரைத்துள்ள மசாலாவை சேர்த்து. வறுக்கவும். காய்கறிகளைக் கூட்டவும். நன்றாகக் கலந்து. ரெக்ஸ் பேகிங் பவுடரையும் சிறிது நீரையும் சேர்க்கவும். சமைக்கப்பட்டதும், எலுமிச்சம் பழச் சாற்றையும் உப்பையும் சேர்க்கவும்.

விழுதை சிறு சிறு வடைபோல் தட்டவும். (சிறிதளவு விழுதை தனியே வைக்கவும்). அதில் வெஜிடபிள் கலவையை வைத்து. விழுதில் தோய்த்து. ரொட்டித் துண்டுகளை வைத்து உருட்டி, பொரிக்கவும்.

இதுபோல் இன்னும் பலவகையான தின்பண்டங்களைத் தயார் செய்து உங்கள் குடும்பத்தினரை மகிழ்விக்கலாம். பின்வரும் இதழ்களைக் கவனித்து வாருங்கள்.

இலவசம்! பக்குவ முறை நூல். இலவசப் பிரதி ஒன்றுக்கு எழுதுக (கவரின் மீது முகவரியை ஆங்கிலம் / இந்தியில் மட்டுமே எழுதவும்): பப்ளிஸிடி டிபார்ட்மெண்ட், கெ. K-2,

கார்ன் பிராடக்ட்ஸ் கோ. (இந்தியா) பிரைவேட் லிட்.

ஸ்ரீநிவாஸ் ஹவுஸ், வாட்பி ரோடு, பம்பாய்-1 (பி. ஆர்.).

ஏகபோக விற்பனை ஏஜெண்டுகள்: **பாரி & கம்பெனி,** டேர் ஹவுஸ், சென்னை-1. மற்றும் அவர்களது கிளைகள்.

SHB/7859 TM

சுழல்களுமாக வந்து ஏரி நீரில் கலந்து கொண்டிருக்கவில்லை. அந்த ஆற்று நீரோட்டத்தின் வழியாக வெண் சிறகு விரித்த அன்னப் பட்சிகளைப் போல் படகுகள் மிதந்து வந்துகொண்டிருக்கவுமில்லை. நதியின் வெள்ளம் ஓடிக் கொண்டிருந்த ஏரி ஓரப் பகுதிகளில் இப்போது மரங்களும் செடிகளும் நாணற்புதர்களுமாகக் காட்சி அளித்தன. அவற்றின் இடையிடையே வெள்ளைக்கொக்குகளும் நாரைகளும் ஒற்றைக் காலில் நின்று தவம் செய்து கொண்டிருந்தன.

இவற்றையெல்லாம் கவனிப்பதற்கு வந்தியத்தேவனுக்குச் சில விநாடிகளுக்கு மேலாகவில்லை. அதற்குள் சற்றுத் தூரத்தில் ஏரிக் கரையோரமாக நின்ற படகு அவன் காட்சிக்கு வந்தது. அந்தப் படகில் இருப்பவர்களில் ஒருவன் கந்தமாறன் என்பதையும் தெரிந்து கொண்டான். உடனே அந்த இடத்தை நோக்கிக் குதிரையை விரைந்து செலுத்தினான். குதிரையின் மேலிருந்து தாவிக் குதித்துப் படகை அணுகினான். கந்தமாறன் ஒரு கையை நீட்டி வந்தியத்தேவன் கரத்தைப் பிடித்துப் படகில் ஏற்றிக் கொண்டான். படகுக்காரர்களுக்குப் படகை விடும்படி சமிக்ஞை செய்துவிட்டு வந்தியத்தேவனைக் கண்ணீர் ததும்பிய கண்களால் சோகமாகப் பார்த்தான்.

''நண்பா! சீக்கிரமாகவே வந்துவிட்டாய்! மிக்க வந்தனம்! இன்று வராமல் நாளைக்கு நீ வந்திருந்தால் ஒருவேளை மணிமேகலையை உயிருடன் பார்த்திருக்க முடியாது!'' என்றான்.

வந்தியத்தேவன் கல் நெஞ்சு படைத்தவன் என்பது உண்மைதான்! நெஞ்சில் அவ்வளவு உறுதியில்லாவிட்டால், சென்ற எட்டு மாதங்களில் அவன் அத்தனை காரியங்களை அலட்சியமாகச் செய்திருக்க முடியுமா? தனக்கோ மற்றவர்களுக்கோ நேரக்கூடிய அபாயங்களைப் பற்றிச் சிறிதும் சிந்திக்காமல் உயிரைத் திரணமாக மதித்துப் பல நெருக்கடியான சந்தர்ப்பங்களில் நடந்து கொண்டிருக்க முடியுமா?

அத்தகைய நெஞ்சுறுதி படைத்தவன் கந்தமாறனின் வார்த்தைகளைக் கேட்டுக் கலங்கி விட்டான். 'கடைசித் தடவை பார்ப்பதற்கு' என்று கந்தமாறன் எழுதியதன் பொருள் இப்போது ஐயமின்றி விளங்கிவிட்டது. அவனுடைய கண்களில் கண்ணீர் ததும்பிக் கலகலவென்று கன்னங்களில் வழிந்து ஓடியது.

''கந்தமாறா! மணிமேகலையின் உயிருக்கே ஆபத்தா? அது எப்படி? அவள் சித்தந்தானே தவறியிருந்தது? அதுவும் உன்னையும் என்னையும் பற்றித்தானே?'' என்று தத்தளிப்புடன் வினவினான் வந்தியத்தேவன்.

''நண்பா! இப்போது மணிமேகலையின் சித்தம் தெளிந்துவிட்டது. ஆனால் இன்னும் எத்தனை நேரம் உயிரோடிருப்பாளோ தெரியாது. உன்னைப் பார்க்கும் வரையில் உயிரோடிருக்க வேண்டும் என்று தெய்வங்களையெல்லாம் வேண்டிக் கொள்கிறேன்!'' என்று சொன்னான் கந்தமாறன்.

பிறகு அவன் அறிந்தபடி நடந்த சம்பவங்களைப் பின்வருமாறு கூறினான்:

காஞ்சியில் கந்தமாறன் சக்கரவர்த்தி வந்து தங்குவதற்காகப் பொன் மாளிகையைச் செப்பனிட்டுக் கொண்டிருந்தான். அப்போது சம்புவரையர் மணிமேகலையையும் அழைத்துக் கொண்டு புறப்பட்டு விட்டதாகக் கேள்விப்பட்டான். அதைத் தொடர்ந்து, வீரநாராயண ஏரிக் கரையில் மணிமேகலை காணாமல் போய்விட்டாள் என்ற செய்தியும் கிடைத்தது. உடனே பார்த்திபேந்திரனிடம் விடைபெற்றுக் கொண்டு தங்கையின் கதியை அறிவதற்காகப் புறப்பட்டு ஓடி வந்தான். அவனுடைய தந்தை துயர மிகுதியினால் ஏறக்குறைய பித்துப் பிடிக்கும் நிலையில் இருந்தார். 'இரவில் கூடாரத்திலே படுத்தாள்; பொழுது விடிந்தால் காணவில்லை' என்பதைத் தவிர அவரிடமிருந்து வேறு தகவல் எதுவும் கிடைக்கவில்லை. பழையாறைக்கு ஆள் விட்டிருப்பதாகக் கூறினார். எரிந்து பாழாய்க் கிடந்த கடம்பூர் மாளிகையிலும் சுற்றுப்புறங்களிலும் தேடிப் பார்த்தாகிவிட்டதென்றும் சொன்னார். கந்தமாறன் தானும் தேட ஆரம்பித்தான். பழையாறைக்கு அவள் திரும்பிப் போயிருப்பாள் என்று கருதவில்லை. ஏரியில் விழுந்து முழுகியிருக்கலாம் என்றும், தேடிப் பார்த்து அவளுடைய உடலையாவது கண்டுபிடிக்க வேண்டும் என்றும் எண்ணினான். ஒருவேளை உயிருடனே ஏரியைச் சூழ்ந்திருந்த காடுகளில் சுற்றி அலைந்துகொண்டிருக்கலாம் என்ற ஆசையும் அவன் மனத்தில் இருந்தது.

ஏரிக் கரையோடு சுற்றிச் சுற்றி அலைந்து தேடினான். ஏரியிலிருந்து கிளம்பிய கணவாய்களோடு சிறிது தூரம் சென்று தேடினான். ஏரியில் குறுக்கு நெடுக்காகவும் கரை ஓரமாகவும் படகு விட்டுக் கொண்டு போய்த் தேடினான். ஏரியைச் சூழ்ந்திருந்த காடுகளிலும் தேடினான். இம்மாதிரி சுமார் நாலு

தினங்கள் பயனற்ற தேட்டத்தில் சென்ற பிறகு, ஏரியின் மேற்புறத்துத் தீவு ஒன்றில் அமைந்திருந்த நீராழி மண்டபத்தின் நினைவு கந்தமாறனுக்கு ஏற்பட்டது. வேட்டையாடப் போன வந்தியத்தேவனும் கரிகாலனும் நீரில் விளையாடச் சென்ற நந்தினியும் மணிமேகலையும் அந்த நீராழி மண்டபத்தில் ஒரு நாள் சந்தித்துப் பொழுது போக்கியதும் நினைவு வந்தது. மணிமேகலை அந்த இடத்துக்குப் படகின் உதவியில்லாமல் தனியாகப் போய்ச் சேர்ந்திருப்பது அசாத்தியமான காரியம். கரடி, சிறுத்தை முதலிய வன விலங்குகள் நிறைந்த மேற்குப் பகுதி காட்டின் வழியாக அவள் தன்னந் தனியாக அங்கே சென்றிருக்க முடியுமா? காட்டைக் கடந்திருந்தாலும் வழியில் சிறு கால்வாய்கள் பலவற்றைக் கடக்க வேண்டியிருந்திருக்குமே? இருந்தாலும் அதையும் பார்த்துவிடலாம் என்று எண்ணிக் கந்தமாறன் படகில் ஏறி அந்த நீராழி மண்டபத்தை அடைந்தான்.

மண்டபத்தை நெருங்கியதும் பழைய நினைவுகள் பல அவன் உள்ளத்தில் குமுறிக் கொண்டு தோன்றின. முதலில் மண்டபம் சூனியமாகவே காணப்பட்டது. யாரும் அங்கே இருப்பதாகத் தோன்றவில்லை. மண்டபப் படித் துறையில் இறங்கி நின்று தான் கட்டிய மனக் கோட்டைகள் எல்லாம் வீணாய்ப் போனதை எண்ணிப் பெருமூச்சுவிட்டான். அவனுடைய பெருமூச்சின் எதிரொலியைப் போல் மற்றொரு பெருமூச்சின் ஒலி கேட்டுத் திடுக்கிட்டான். ஓடிப் போய்ப் பார்த்தான். நீராழி மண்டபத்தின் மறு பக்கத்துப் படிக்கட்டில் மணிமேகலை கிடந்தாள். ஒட்டி உலர்ந்து வாடி வதங்கிக் கிடந்தாள். அவள் சேலை பல இடங்களில் கிழிந்திருந்தது. அவள் மேனியில் பல இடங்களில் கீறல்கள் காணப்பட்டன. முதலில் அந்த உடம்பில் உயிர் இருப்பதாகவே தோன்றவில்லை. பல நாட்கள் பட்டினி கிடந்து திக்குத் திசை தெரியாமல் காட்டில் அலைந்து களைத்து களைத்து விழுந்து

வட்ட மேஜை

★என்னுடைய பிள்ளைகளில் ஒருவன் இவ்வூரில் உள்ள விக்டோரியா நடுநிலைப் பள்ளியில் சின்ன வகுப்பில் படிக்கிறான்.

அவன் காலையில் வகுப்புக்குச் சென்றவன் ஒரு மணி நேரம் கழித்து வீட்டுக்குத் திரும்பி வந்தான்.

காரணத்தைக் கேட்டேன். அவன் படிக்கும் வகுப்பு ஆசிரியரிடம் நிறைய தமிழக அரசு பரிசுச் சீட்டு இருப்பதாகவும், ஒரு சீட்டின் விலை ஐந்து ரூபாய் என்றும் வாங்கினால் மூன்று லட்சம் பரிசு விழும் என்றும் சொன்னான். 'நாம்தான் ஏழையாச்சே, சீக்கிரம் பணக்காரர்களாகி விடலாமே!' என்றான்.

இந்தப் பதிலைக் கேட்டு நான் அதிர்ச்சியடைந்தேன். லாட்டரிச் சீட்டு விற்பனை பள்ளி மாணவர்களிடமும் வந்து விட்டதே என்று வருத்தம் அடைந்தேன்.

உடனே பள்ளிக்குச் சென்று சம்பந்தப்பட்ட ஆசிரியர்களிடம் விசாரித்தேன். அவர் சொன்ன பதில் அதற்கு மேல் அதிர்ச்சி அளிப்பதாக இருந்தது.

ஒவ்வொரு ஆசிரியரின் தலையிலும் குறிப்பிட்ட தொகைக்குப் பரிசுச் சீட்டுகள் கட்டப்பட்டிருப்பதாகவும், மாணவர்களிடம் விற்கச் சொல்லித்தான் தங்களிடம் கொடுக்கப்பட்டிருப்பதாகவும் அந்த ஆசிரியர்கள் கூறிய போது நான் அவர்களைப் பரிதாபத்துடன் தான் பார்க்க வேண்டியிருந்தது.

நல்ல கல்வியையும், ஒழுக்கத்தையும் கற்றுக்கொள்வதற்காகப் பள்ளிக்கு அனுப்பப்

★ இக் குறிப்பிட்ட கடிதம் ரூ. 15/- பரிசு பெறுகிறது.

பட்டுள்ள பிஞ்சு நெஞ்சங்களில் குறுக்கு வழிகளில் பணக்காரனாகிவிடும் உபாயங்கள் உருவாக்கப்படுமானால் எதிர்காலத்தில் அவன் படித்து, உழைத்துச் சம்பாதிப்பவனாக உருவாவானா?

திருவண்ணாமலை
24–1–72 கே. வி. ராமதுரை

"ஸ்ரீவித்யா" எனும் சக்தி வழிபாட்டின் அடிப்படைத் தத்துவங்களையும், நுட்பங்களையும், பெருமைகளையும், எல்லாரும் எளிதில் புரிந்துகொள்ளக் கூடிய வகையில் ஸ்ரீ ரா. கணபதி 'அம்மா' என்னும் தொடரில் ஸ்ரீ ராமகிருஷ்ணர் செய்த ஷோடசி பூஜையை வர்ணிக்கையில் சென்ற வாரம் அற்புதமாக விளக்கி யிருக்கிறார். 'கணவனே கண் கண்ட தெய்வம்' என்பதற்கு உட்கிடை 'மனைவியைக் கண்கண்ட தெய்வமாகக் கொள்வது' என்பதை எப்படி ஸ்ரீ ராமகிருஷ்ணர் நிரூபித்தார் என்று அவருக்கே சொந்தமான பாணியில் சொந்தமான நடையில் கணபதி எழுதியிருப்பதைப் படித்து நான் ஆனந்த பரவசம் அடைந்தேன். அதேபோல் எத்தனையோ பேர் இந்த ஆனந்தத்தை அடைந்திருப்பார்கள். எல்லோரின் சார்பிலும் உங்களுக்கு நன்றியையும், கணபதிக்கு எங்கள் மனமார்ந்த வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன். பராசக்தியின் அருள் கணபதிக்குப் பரிபூர்ணமா யிருக்கிறது.

சென்னை-4 அண்ணு சுப்ரமணியன்,
27–1–72 உதவி காரியதரிசி,
ராமகிருஷ்ண மாணவரில்லம்

இறந்து போனவளின் உடலாகவே தோன்றியது. அந்தக் காட்சியைக் கண்ட கந்தமாறனுடைய உள்ளத்தில் ஆயிரம் வேல்கள் பாய்வது போன்ற வேதனை உண்டாயிற்று. மணிமேகலையை எடுத்து மடியில் போட்டுக் கொண்டு புலம்பினான். பெருமூச்சின் ஓசை நினைவுக்கு வரவே, ஒருவேளை உயிர் ஒட்டிக் கொண்டிருக்கலாம் என்ற ஆசை ஏற்பட்டது. நல்ல தண்ணீர் கொண்டு வந்து முகத்தில் தெளித்தான்; வாயில் ஊற்றினான். சூடு பிறக்கும்படி உடம்பெல்லாம் தேய்த்தான். சிறிது நேரத்துக்கெல்லாம் மணிமேகலை கண் திறந்து மலர மலர அவனை நோக்கி விழித்தாள். ''அண்ணா! நீதானா? நான் நினைத்தது உண்மையாயிற்று. சொர்க்கத்துக்குப் போனால் உன்னையும் அவரையும் காணலாம் என்று எண்ணினேன். அவர் எங்கே?'' என்று மிக மெல்லிய குரலில் கேட்டாள். கந்தமாறன் பொங்கி வந்த அழுகையைச் சிரமப்பட்டு அடக்கிக் கொண்டு, ''வருவார், அம்மா, வருவார்!'' என்றான்.

மணிமேகலை தான் சொர்க்கத்திலே இருப்பதாக எண்ணுகிறாள். கந்தமாறனையும் சொர்க்கத்தில் பார்ப்பதாகவே கருதுகிறாள். வந்தியத் தேவனைப் பற்றி விசாரிக்கிறாள் என்பதைப் பற்றியெல்லாம் கந்தமாறன் அறிந்து கொண்டான். அவளுக்கு மன அதிர்ச்சி ஏற்படாதபடி அவளுடைய நம்பிக்கையை யொட்டிப் பதில் கூறிச் சமாளித்தான்.

இதன்பிறகு, மணிமேகலையின் உடம்பில் மேலும் உயிர் தளிர்க்கச் செய்வதற்குத் தான் செய்த முயற்சிகளைப் பற்றியும், அவசரமாக ஓலை எழுதி வந்தியத் தேவனுக்கு அனுப்பியது பற்றியும் கந்தமாறன் கூறினான். கடைசியாக,

''நண்பா! நீ என் ஓலையை மதித்து வந்ததற்காக என் மனத்தில் எழும் நன்றியைச் சொல்ல முடியாது. மணிமேகலை இனி அதிக காலம் ஜீவித்திருக்க மாட்டாள். அணையுந் தறுவாயில் உள்ள தீபச் சுடரைத் தூண்டிவிட்டால் சிறிது நேரம் எரியுமல்லவா? அது போலத்தான் அவள் உயிர்ச் சுடர் பிரகாசிக்கிறது. முக்கியமாக, உன்னைக் காணும் ஆசையே அவளை இன்னும் உயிரோடு வைத்திருக்கிறது! நாம் எல்லாரும் சொர்க்கத்தில் இருப்பதாக அவள் நம்பியிருக்கிறாள். அதற்கு மாறாக நீ எதுவும் சொல்ல வேண்டாம். அவளைப் பார்த்ததும் உனக்குத் துக்கம் உண்டாவது இயல்பே. அதையும் நீ கட்டுப்படுத்திக் கொண்டு அவளிடம் முக மலர்ச்சியுடன் பேச வேண்டும்!'' என்று வேண்டிக் கொண்டான்.

படகு நீராழி மண்டபத்தை நெருங்கி விட்டது. யாழிசையும் மெல்லிய குரலில் பாட்டிசையும் கலந்து கேட்டன. வந்தியத்தேவன் கந்தமாறனை நோக்கினான். ''ஆம், நண்பா! மணிமேகலைதான் யாழிசையுடன் பாடுகிறாள்!'' என்றான் கந்தமாறன். படகிலிருந்து அவர்கள் இறங்கினார்கள். மணிமேகலை பாடுவது என்ன பாடல் என்பதை வந்தியத் தேவன் கவனமாகக் காது கொடுத்துக் கேட்டான். முன்னொரு சமயம் அதே நீராழி மண்டபத்தில் அவள் யாழிசையுடன் பாடிய அதே பாடல்தான்.

'' **இனியபுனல் அருவிதவழ்**
இன்பமலைச் சாரலிலே
கனிகுலவும் மரநிழலில்
கரம்பிடித்து உகந்ததெல்லாம்

கனவுதானோடி – சகியே
நினைவுதானோடி!

* * *

புன்னைமரச் சோலையிலே
பொன்னொளிரும் மாலையிலே
என்னைவரச் சொல்லிஅவர்
கன்னல்மொழி பகர்ந்ததெல்லாம்

சொப்பனந்தானோடி – அந்த
அற்புதம் பொய்யோடி!


* * *

கட்டுக்காவல் தான்கடந்து
கள்ளரைப்போல் மெள்ளவந்து
மட்டிலாத காதலுடன்
கட்டிமுத்தம் ஈந்ததெல்லாம்
நிகழ்ந்ததுண்டோடி – நாங்கள்
மகிழ்ந்ததுண்டோடி!''

பாடல் முடிகிற வரையில் வந்தியத் தேவன் படிக்கட்டிலேயே காத்துக் கொண்டிருந்தான். முடிந்தவுடன் படிகளில் ஏறி மண்டபத்தை அடைந்தான்.

மணிமேகலை அவனைப் பார்த்ததும் யாழைக் கீழே உருட்டிவிட்டு எழுந்திருக்க முயன்றாள். உடலில் பலமில்லாமையால் கால்களை ஊன்றி நிற்க முடியாமல் தள்ளாடி விழப் பார்த்தாள். வந்தியத் தேவன் பாய்ந்து சென்று அவள் கீழே தரையில் விழாமல் தாங்கிக் கொண்டான். மெள்ள மெள்ள அவளை உட்கார வைத்துத் தானும் உட்கார்ந்து கொண்டான். மணிமேகலையைத் தன் மடியில் சாத்திக் கொண்டான்.

மணிமேகலை அடிக்கடி அவன் முகத்தை அண்ணாந்து பார்த்தாள். அவன் வந்தியத்தேவன்தானா, அவள் படுத்திருப்பது அவனுடைய மடியில்தானா என்பதைப்



திருவண்ணாமலை ஸ்ரீ ரமணாஸ்ரமத்தின் தலைவர் திரு டி.என். வெங்கடராமன் அவர்கள் குமாரத்தி சௌபாக்கியவதி சரஸ்வதி B. SC.க்கும் பெரம்பாவூர் திரு வி. ஆர். சீனிவாசன் அவர்கள் குமாரர் சிரஞ்சீவி ரங்கநாதன் B. E.க்கும் ரமணாஸ்ரமத்தில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

வாழ்க மணமக்கள்



ராமேஸ்வரம் கல்கி ஏஜண்ட் ஸ்ரீ *P. S.* பரமேஸ்வர அய்யர் அவர்களுக்கு 1972 ஜனவரி 20௳ அன்று ராமேஸ்வரத்தில் ஷஷ்டி அப்த பூர்த்தி விழா சிறப்பாக நடைபெற்றது. மேற்படி விழாவுக்கு ஏராளமான உறவினர்களும், நண்பர்களும் வருகை தந்து தம்பதிகளிடம் ஆசிபெற்றுச் சென்றனர்.

அடுத்த இதழில்

பொன்னியின் செல்வன்

முடிவுரை

பல முறை பார்த்து உறுதி செய்து கொண்டதாகத் தோன்றியது.

''என் அண்ணன் என்னை ஏமாற்றவில்லை. சொர்க்கம் வெறும் சொப்பனமில்லை. இந்த அற்புதமும் பொய்யில்லை!'' என்று அவள் இதழ்கள் மெதுவாக முணுமுணுத்தன.

''பொய்யில்லை, மணிமேகலை, பொய்யில்லை. இது நிச்சயமாகச் சொர்க்கந்தான்! நான் வந்திருப்பதும் உண்மைதான்!'' என்றான் வந்தியத்தேவன்.

அவன் எவ்வளவு அடக்கிக் கொள்ளப் பார்த்தும் முடியாமல் கண்களில் நீர் ததும்பியது. மணிமேகலையின் முகத்தில் அவனுடைய கண்ணீர்த் துளிகள் முத்துப் போல் உருண்டு விழுந்தன. அவனை அறியாமல் விம்மல் ஒலியும் எழுந்தது.

மணிமேகலையின் முகம் சிறிது நேரம் தெய்விகமான சோபையினால் ஜொலித்தது. அவளுடைய நீண்ட கண்களிலிருந்து வெண்ணிலவின் கிரணங்கள் சுடர் வீசிப் பிரகாசித்தன.

மாதுளை மொட்டை நிகர்த்த அவளுடைய இதழ்கள் விரிந்து ஏதேதோ மதுரமான சொற்களைப் பொழிந்தன. வந்தியத்தேவன் எவ்வளவோ கவனமாகக் கேட்டான். ஆனால் அவள் என்ன சொன்னாள் என்பதை மட்டும் அவனால் தெரிந்துகொள்ள முடியவில்லை.

எதற்காகத் தெரிந்து கொள்ள வேண்டும்? அவள் கூறியவை என்ன வார்த்தைகளாயிருந்தால் என்ன? இதயமாகிய பொற் கலசம் திறந்து அன்பாகிய அமுதம் பொங்கி வரும்போது வெறும் சொற்களின் உபயோகம் என்ன?

சிறிது நேரத்துக்கெல்லாம் மணிமேகலையின் கனி இதழ்கள் குவிந்தன; கண்ணிமைகள் மூடின. முகத்தில் தவழ்ந்த தெய்விக சோபை குன்றியது; அமைதி குடிகொண்டது.

நீராழி மண்டபத்தின் மேலே படர்ந்திருந்த மரக் கிளையின் மீது இளந்தென்றல் வீசியது; மரக் கிளையில் குலுங்கிய செந்நிற மலர்களில் சில உதிர்ந்தன.

மணிமேகலையின் உயிரும் அவளுடைய உடலிலிருந்து உதிர்ந்தது.

உடலைப் பிரிந்த உயிர் எங்கே சென்றது? எவ்வழியே சென்றது? மந்தமாருதத்துடன் கலந்து சென்றதா? இளங் காற்றில் எழுந்த சிற்றலைகளின் இனிய ஓசையில் ஏறிச் சென்றதா? இதய தாபம் தொனிக்கப் பாடிய பூங்குயில்களின் மதுர கீதத்துடன் ஒன்றி விண்ணில் பறந்து சென்றதா?

எங்கே சென்றது? சகல புவனங்களையும் சகல ஜீவராசிகளையும் ஆக்கி அளித்து அழிக்கும் பரம்பொருளின் பாதார விந்தத்துக்குச் சென்றதா?

அல்லது கண்ணீர் பெருக்கும் கற்சிலை போல் நினைவற்றுச் செயலற்று உட்கார்ந்திருந்த வந்தியத்தேவனுடைய உள்ளத்திலேதான் கலந்து போய் விட்டதா?

யாருக்கும் தெரியாது; தெரிந்தாலும் சொல்ல முடியாது.

ஒன்று மட்டும் நிச்சயம்.

வேடிக்கையும் விளையாட்டும் குறும்பும் குதூகலமும் துணிவும் துடுக்கும் துணிச்சலும் உருக் கொண்டவனாக இருந்த வந்தியத் தேவனை இனி நாம் காணப் போவதில்லை.

கனிந்த உள்ளமும் கருணையும் விவேகமும் வந்தியத்தேவனை அந்தக் கணத்தில் வந்து அடைந்தன.

மணிமேகலையாகிய தெய்வம் அவன் இதயக் கோயிலில் குடி கொண்டாள்.

இனி அவன் எங்கே சென்றாலும் என்ன காரியம் செய்தாலும், அந்தத் தெய்வம் அவனுக்குத் துணை புரியும்.

வல்லவரையன் வந்தியத்தேவன் நல்ல பணிகள் பல செய்ய வல்லவனாவான்; அவனை அறிந்த அனைவராலும் வந்தனை செய்வதற்கு உரியவனாக விளங்குவான்.

வீரனே! உன்னிடமிருந்து தற்சமயம் விடைபெற்றுக் கொள்கிறோம். உன் துயரம் நிறைந்த சிந்தனைகளில் நாங்கள் குறுக்கிட விரும்பவில்லை.

அருள்மொழி வர்மனின் அருமை நண்பனே! நீடூழி நீ வாழ்வாயாக! வீரத் தமிழரின் மரபில் உன் திருநாமம் என்றும் நிலைத்து விளங்குவதாக!

முற்றும்



துணை வழி
தி.சா.ராஜு

''என்ன, இன்னும் சின்னண்ணன் தூக்கத்திலிருந்தே எழுந்திருக்கவில்லையா?'' என்று வினவியவாறே வீட்டின் வெளிக் கதவைத் தள்ளித் திறந்து கொண்டு உள்ளே நுழைந்தார் இளந்திரையன். அவரைத் தொடர்ந்து இன்னும் ஐந்து பேர் உள்ளே வந்து திண்ணையில் உட்கார்ந்தார்கள்.

''இல்லே, இல்லே. அண்ணன் பகலில் தூங்குவதேயில்லே.. இப்போத்தான் குளித்து விட்டுத் துணி மாத்திக்கிட்டிருக்காரு. நிமிஷத்திலே வந்துடுவாரு'' என்று கூறி உள்ளே ஓடினள் மரகதம். அடுத்த சில நிமிஷங்களிலே பெரிய சுருட்டுப்பாய் வெளியே வந்தது. வெற்றிலைத் தட்டு இளநீர் எல்லாம் அதைத் தொடர்ந்தன. வந்தவர்கள் பாயிலே உட்கார்ந்து கொண்டு வெற்றிலையை மெல்லத் தொடங்கினர்கள். வேலைக்காரப் பெருமாள் இளநீரைச் சீவ ஆரம்பித்தான். ஒன்றைப் பொத்து மழவராயரிடம் கொடுத்தபோது, ''இதைக் கொண்டுபோய்ச் சின்னய்யாவுக்குக் கொடு. அவருதான் இளநீர் சாப்பிட்டு எவ்வளவோ வருஷங்கள் ஆகியிருக்கும்'' என்ருர். பிறகு ஓர் இளநீர்க் காயைத் தாமே வாங்கிக் கொள்ளவும் செய்தார்.

''இதென்ன, அசோகனை அழைக்க வந்திட்டு நீங்கள் இங்ஙனே குந்திக்கிட்டு வெத்திலே போடறியளே. அங்கே சனங்க எல்லாரும் காத்துக்கிட்டிருக்காங்க''—மாணிக்கம் சேர்வையும், அம்பலக்காரரும் குறை கூறியவாறே வீட்டினுள் நுழைந்து பாயில் உட்கார்ந்து கொண்டார்கள். மேலும் ஒரு வெற்றிலைத் தட்டு வந்தது. அதைத் தொடர்ந்து சாத்துக்குடிப் பழங்களும் வந்து சேர்ந்தன.

சற்று நேரத்துக்கெல்லாம் ''வணக்கம், மன்னிக்கவேண்டும்'' என்று கூறிக்கொண்டே கூப்பிய கைகளுடன் அசோகன் வெளியே வந்தான். ஆறடிக்குச் சற்றுக் குறைவான உயரம். இடுப்பில் பச்சைக் கால் சட்டை, காலில் உயர்ந்த ரக பாத அணி, மேலே புஷ் ஷர்ட், தோளில் ஆறு நட்சத்திரச் சின்னங்கள். இடது மார்பில் விருதுகள், தலையில் அழகான தொப்பி. அசோகனது வருகை அவர்களுடைய குழுவுக்கே ஒரு புதிய களையைக் கொடுத்ததை மாணிக்கம் சேர்வை உணர்ந்து கொண்டார்.

''தம்பி! நீ சொன்னபடியே செய்திருக்கோம். வண்டி ஏதும் வைக்கலே. அண்ணுரு முன்னமேயே பந்தலுக்குப் போயிட்டாரு. ஊர் சனங்க தங்கள் பிரியத்துக்கு ஏதானும் செய்தாங்கன்னு அதை மறுக்காமெ ஏத்துக்கணும்.''

அந்திக் காக்கைகள் கரைந்தன. பட்சிகள் மேல் திசையை நோக்கி அணிவகுத்துப் பறந்தன. மாலை வழிபாட்டுக்காகக் கோயிலில் நாகசுரம் தொடங்கும் சின்னக் கிருஷ்ணன் சீவாளியை 'பீ பீ' என்று ஊதிச் சத்தம் செய்தான்.

அசோகன் வீதியில் நடக்கத் தொடங்கியதும் சிறுவர்கள் வீடுகளிலிருந்து வெளியே வந்து நின்று கொண்டார்கள். மங்கையர்கள் கதவின் அருகில் நின்று எட்டிப் பார்த்தார்கள். வயதான ஆண்களும், இளைஞர்களும் அசோகனைப் பின்தொடர்ந்து கூட்டத்தில் சேர்ந்து கொண்டனர்.

அரச மரத்தடியிலிருந்த பொது மண்டபத்தை அவர்கள் அடைந்தபோது இருள் கவியத் தொடங்கிவிட்டது. காஸ்விளக்குகள் மஞ்சள் கலந்த ஒளியைக் கக்கின. சற்றுத் தொலைவில் நீண்ட மனித நிழல்கள். ஒலி பெருக்கியில் பழைய நாளையப் பாடல். சிதம்பரம் ஜயராமனின் 'காகா'! ஒரு காலத்தில் ஊரையே கலக்கிற்று அந்தப் பாட்டு.

வந்திருந்தவர்கள் அனைவரையும் கைகூப்பி வணங்கிவிட்டு நாற்காலியில் உட்கார்ந்தான் அசோகன். ஊருக்குப் பெரியவரும் நாட்டாண்மைக்காரருமான ரத்தினவேலுத்தேவர் அறிமுகத்தைத் தொடங்கினர்.

''....நான் அதிகப் படிப்பில்லாத ஆளு. பழைய தலைமுறையைச் சேர்ந்தவன். அதனுல் இலக்கியத் தரமான வார்த்தைகள் எல்லாம் சொல்லித் தம்பியைப் புகழத் தெரியாது.... தம்பி அசோகன் நம்ம ஊருக்குப் புதியவரல்ல. அவர்களுடைய குடும்பமே இந்த ஊரின் பெரிய செல்வம். பல காலம் பட்டாளத்திலே இருந்து விட்டுச் சொந்த ஊருக்கு வரணும்கிற எண்ணத்திலே வேலையை விட்டுத் திரும்பிடுச்சி...

''...பட்டாளத்துக்குப் போனவங்க ஆயுசோடு திரும்பறது கொஞ்சம் சந்தேகம். அது உங்களுக்கெல்லாம் தெரியாத விஷயமில்லே. அதுவு மில்லாமல் கைகால் கண் மூக்கு சேதமடையாமல் திரும்பி வந்தால் அது இன்னும் விசேஷம். எல்லாத்தையும் விட மேலானது ஒழுக்கம். கெட்ட பழக்கம் ஏதுமில்லாமல் அங்கிருந்து திரும்பி வர முடியுமானுல் அது தெய்வத்தின் அருள்னுதான் சொல்லுவேன். தம்பி பட்டாளத்துக்குப் போகும்போது சின்னப் பிள்ளை. மீசைகூடச் சரியாய் அரும்பலே. அப்போ எனக்குக் கண்ணிலே தண்ணி வந்திரிச்சு. சிப்பாயாகத்தான் சேர்ந்தது. இன்னிக்கு ஒரு முழு அதிகாரியா நம்மிடையே திரும்பி வந்திருக்கு...

''...அது நல்லபடியா கல்யாணம் கட்டிக்கிட்டுப் புள்ளை குட்டிகளோடு குடும்பப் பெருமையைக் காப்பாத்தணும். ஊரின் நல்ல பெயரை நிலைக்க வைக்கணும்னுதான் ஆண்டவனை வேண்டிக்கிறேன்....''

ஒரே கையொலி. 'அசோகன் வாழ்க!' என்ற பேரிரைச்சல். பின்னுல் இடமின்றி ஒதுங்கியிருந்த தாய்மார்களெல்லாம் தங்கள் குழந்தைகளை உயரத் தூக்கிக் காட்டினர்கள். திமிரி நாயனம் தொடங்கிற்று. சிலம்ப ஆட்டத்தில் மூங்கில் கழிகள் போர் வாட்களைப் போல் மின்னின. தீப்பந்தங்களுடன் கரகம், பின்னல் கோலாட்டம். சின்ன மருது பொய்க்கால் குதிரையுடன் வந்து சேர்ந்தான். இதையெல்லாம் தாக்கி யடிப்பது போல் வாண வேடிக்கை, அதிர்வேட்டு.

அசோகனுக்குத் தலை சுற்றத் தொடங்கிற்று. இப்படி ஊர் மக்கள் அன்பையும், பாராட்டுதலையும் பெற அவன் செய்த செயல் என்ன? தன்னுடைய வருகையை இந்த மக்கள் எதற்காக இப்படிக் கொண்டாடுகிருர்கள்? எந்தச் செயலுக்கு எவ்வளவு மதிப்புக் கொடுக்க வேண்டும் என்று இந்த ஜனங்களுக்கு ஏன் தெரியவில்லை? சமுதாய மதிப்புக்களே தெரியாத ஒரு சமூகத்தினரிடையில்

தன் மிகுதி வாழ்க்கை எப்படிக் கழியப் போகிறது?

இவைகளுக்குப் பிறகு விருந்துக்கு ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது. வறுத்த விரால் மீன், மொச்சைக்கொட்டையும் கருவாடும் இட்ட புளிக் குழம்பு, குருமா, கறி மசாலை, புலவு எல்லாம் அற்புதமாக அமைந்திருந்தன. இவைகளை யெல்லாம் பக்குவம் செய்வதற்கே ஐயம்பேட்டையிலிருந்து இரண்டு ராவுத்தர்கள் வந்திருந்தார்களாம்.

''ஐயாவுக்குக் கோழிக் குருமா இன்னும் போடு. பேசத் தெரியாது என்று சொல்லிக் கொண்டே எத்தனை பெரிய உண்மையைச் சொல்லிப் போட்டாரு!'' என்று கூறிய வண்ணம் தேவரை உபசரித்தார் தருமலிங்கம்.

''போதும் போதும். இந்த வயசிலே இதுக்கு மேலே என்னால் செரித்துக் கொள்ள முடியுமா?'' தேவர் திணறினார்.

''ராணுவத்திலே 'படா கானா'ன்னு ஒரு வழக்கம் உண்டு. பெரிய விழா நாட்களிலும் பிரிவு உபசாரங்களிலும் இந்த மாதிரி பெரிய விருந்து கொடுப்பாங்க. நீங்க என்னடான்னா, ஊருக்கு வந்த அன்னிக்கே இவ்வளவு நல்ல சாப்பாட்டைப் போடறீங்க. மறுபடியும் புறப்பட்டுப் போயிடுன்னு இதுக்கு அர்த்தமா?'' என்று அசோகன் புன்னகையுடன் வினவினான்.

''உண்மையிலேயே இது எங்களுக்குப் பெரிய நாள் தம்பி. இந்த மாதிரி ஊரிலுள்ள எல்லாப் பொதுமக்களும் தங்களுக்குள் இருக்கிற பூசலை மறந்து, உனக்கு வரவேற்பளிக்க முன் வந்தார்களே என்று எனக்கு மட்டிலடங்காத மகிழ்ச்சி. இதை எப்படி வார்த்தைகளினாலே சொல்லிவிட முடியும்?'' தேவர் உணர்ச்சி பொங்கக் கூறினார். கூட இருந்தவர்கள் அவருடைய கூற்றைத் தங்கள் பார்வையினால் ஆமோதித்தார்கள்.

விருந்துக்குப் பிறகு கலைநிகழ்ச்சி ஒன்று ஏற்பாடாகி யிருந்தது. அதில் பங்கெடுத்துக் கொண்டவர்கள் அனைவரும் குழந்தைகள். கலை நிகழ்ச்சி முடிந்த பிறகு அசோகன் ஊர் மக்களுக்கு நன்றி கூறினான். அவர்கள் அவனுடைய நன்றியுரையைப் பெரிதும் ரசித்தார்கள். நிகழ்ச்சிகள் முடிவடையும்போது இரவு மணி ஒன்று.

ஊர் மக்கள் அந்த நாள் நிகழ்ச்சியை மறக்கவே இயலாதவாறு அது அமைந்துவிட்டது.

2

''எங்கே நீலா அவசரமாகப் போய்க்கிட்டிருக்கே, எதிரே ஆள் வருவது கூடத் தெரியாமல்?'' லீலாவதி கோபித்துக் கொண்டாள்.

''அடடா, நீயா, மன்னிச்சுடு லீலா, மனோன்மணி அக்கா ஆள் விட்டு அனுப்பிச்சுது. அவங்க வீட்டுக்குத்தான் போறேன். இரண்டு முறை கூப்பிட்டு விட்டுப் போனாங்க.''

''என்ன விசேஷமாம்?''

''ஒண்ணும் பெரிய விஷயமில்லே. மனோன்மணி அக்கா இப்படித்தான் மாசத்திலே ஒரு வாட்டி எல்லோரையும் கூப்பிட்டு விருந்து கொடுக்கும். இப்போ அதன் தம்பி லீவில் வந்திருக்கு. நீயுந்தான் வாயேன்.'' லீலாவதியைக் கூப்பிட்டாள் நீலா. இருவரும் கனகரத்தினத்தின் வீட்டுக்குச் சென்றார்கள். அங்கே இவர்களுக்கு முன்னரே தோட்டத்துப் பெஞ்சுகளில் பல ஆண்களும் பெண்களும் உட்கார்ந்திருந்தனர். வந்தவர்களுக்கெல்லாம் வாழைப் பழமும், கேக்கும், பிஸ்கட்டும் வழங்கினார்கள், மனோன்மணியும் அவள் தங்கை சகுந்தலாவும். லீலாவதியையும், நீலாவையும் அன்புடன் வரவேற்றார்கள் சகோதரிகள்.

தோட்டத்துப் பெஞ்சுக்கு எதிராக ஒரு திரை கட்டியிருந்தது. தேநீர் குடித்து முடித்ததும் ஓர் ஊதல் ஒலி. திரை நகர்ந்தது. ஒரு மூங்கில் மேஜை. அதன் அருகில் இரு நாற்காலிகள். ஒரு தென்னங் குரும்பையை ஒரு குச்சியில் பொருத்தி மைக்கைப் போல் வைத்திருந்தார்கள்.

ஏழு வயதுள்ள ஒரு குறுகுறுப்பான பையன் மேஜையருகில் வந்தான். தோளில் நட்சத்திரச் சின்னங்கள். தலையில் இராணுவத் தொப்பி. வந்த சிறுவன் ஒரு மிலிட்டரி சல்யூட் அடித்து அனைவரையும் வணங்கினான்.

''வேஷப் பொருத்தம் மிக நல்லாயிருக்குதே!'' சின்னத்துரை சுந்தரத்திடம் கூறினார். ''பொறுத்திருந்து பாருங்கள். பையன் படு சுட்டி.'' சுந்தரம் பதிலிறுத்தார்.

சிறுவன் செல்வராஜ் சுற்றுமுற்றும் பார்த்தான். ''தலைவர் இல்லையே, எப்படிக் கூட்டத்தைத் தொடங்குவது?'' அவன் முணுமுணுத்தான். ''இதோ நான்தான் தலைவர்'' என்று கூறியவாறு சகுந்தலா தந்தையின் மேல் துண்டை எடுத்துப் போர்த்திக்கொண்டு பக்கத்திலிருந்த நாற்காலியில் அமர்ந்தாள்.

''பேரன்பு மிக்கோரே, பெரியோரே, தாய்மாரே!'' — பையன் கனிவான குரலில் பேசத் தொடங்கினான்.

''ஏதேது, பாரதிதாசன் தோற்றார்'' — கங்காதரன் பாராட்டினார்.

''இந்த மண்ணுக்கும் இந்த மண்ணில் தோன்றிய பெரியோருக்கும் என் வணக்கங்கள்!'' — பையன் நிலத்தைத் தொட்டு அஞ்சலி செய்தான். ''இங்கு வருமுன்பு உங்கள் முன்னால் எந்த ஆடையை அணிந்து கொள்ளுவது என்று தயங்கினேன். என் தந்தையின் தனியறைக்குள் சென்றேன். அதனுள் தூய வெள்ளை ஆடைகள் இருந்தன. அதை அடுத்து என் தமையனார் எனக்காக அன்புடன் வாங்கி வைத்திருந்த துணிமணிகளைப் பார்த்தேன். அழகிய கைத்தறி உடைகள். கூடவே இரு வண்ணத் துண்டு.''

குழுமி யிருந்தவர்கள் கையொலி செய்தார்கள்.

''இந்த நாட்டின் துரதிருஷ்டம், நாம் எந்த ஆடையை அணிகிறோமோ அதற்கேற்ப அரசியல் வண்ணம் தந்துவிடுகிறார்கள். ஆகவே, இந்தச் சீருடையே எல்லாக் கட்சிகளுக்கும் அப்பாற்பட்டது என்று கருதி இராணுவ உடையையே அணிந்து உங்கள் முன்னால் நிற்கிறேன்....''

''அசோகன் நல்லாத்தான் பேசியிருக்காரு. அன்னிக்கு என்னால் கூட்டத்துக்கு வர முடியாமல் போய்விட்டது. பையனும் நல்லாவே நடிக்கிறான்.'' பெரியசாமி கூறினார். தொடர்ந்து செல்வராஜ்பேசுவதை ரசித்தார்.

''...படையிலே சேர்ந்து நான் கொரியாவுக்குப் போனேன். காஜாவிலும் பணி புரிந்தேன். பின்னர் காங்கோவுக்குச் சென்றேன். சீனக்காரன் வட எல்லையைக் கடித்துக் குதறியபோது அங்கே ஓடி வந்தேன்.'' பையன் கூடவே தன் மார்பிலிருந்த விருதுகளை எல்லாம் தொட்டுக் காட்டினான். ''சீனர்களிடம் போர்க் கைதியாகி லாஸாவுக்கும் நான்கிங்கிற்கும் சென்றேன். திபேத்தில் அவர்கள் இழைத்திருக்கும் கொடுமைகளை நேரில் கண்டு பதறினேன். பின்னாளில் பாகிஸ்தான் பாஞ்சாலத்தில் படையெடுத்தபோது அந்தப் போரிலேயும் பங்கு பெற்று வீரச் சக்கரம் அடைந்தேன். இவ்வாறு ஒரு குறுகிய கால இடைவெளிக்குள் அடுக்கடுக்காகப் போர்க்களங்களைக் கண்ட பிறகு ஒரு முழுமையான வாழ்க்கை வாழ்ந்து விட்ட நிறைவு தோன்றியது. 'இனி பிறந்த மண்ணுக்குத் தொண்டு புரிவோம்' என்று ஊர் திரும்பி விட்டேன்...''

''ஊரை நல்லா ஏமாத்தலாம்!'' வின் சென்ட் என்ற இளைஞன் சற்று உரக்கவே கூறினான். குழுமியிருந்தவர்கள் ஏளனத்துடன் அவனை நோக்கினர்.

''கொரியாவிலும் காஜாவிலும் என்னைச் சந்தித்தவர்கள் காந்தியடிகளைக் குறித்தும், நேருவைப் பற்றியும் கேட்டனர். இந்தியா



என்றால் காந்தியும் நேருவும் என்றுதான் வெளிநாட்டில் கருதியிருக்கிறார்கள். கோலாலம்பூருக்கு வந்தபோது இரண்டு முஸ்லிம்கள் கேட்டார்கள். 'அண்ணா, நலமா?' என்று. என் உள்ளம் பூரித்தது.''

ஒரே கைவொலி. 'ஆஹா' என்ற பாராட்டு.

''நம் நாடு பரந்தது. பல உத்தமர்களைப் பெற்றுத் தந்தது. ஒவ்வொருவரும் அற்புதமான ஆற்றல் உடையவர்கள். நமக்கு வழிகாட்டத்தக்க வாழ்க்கை வாழ்ந்து காட்டியிருக்கிறார்கள். அவர்களுடைய மேலான தன்மைகள் அனைத்தும் நம்மிடம் விகசிக்க

நாவல்

வேண்டும். அப்போதுதான் நாம் முழுமை பெற்ற மனிதனாவோம்.

''காந்தியடிகளின் நினைவுநாளை பிலிப்பைன்ஸ் நாட்டில் கொண்டாடுகிறார்கள். அர்ஜண்டைனாவில் அவரைப் பாராட்டுகிறார்கள். ஆனால் நாம் அண்ணலை மறந்துவிட்டால் அதைவிடப் பாவ காரியம் வேறு ஏதுமில்லை.''

சிறுவன் செல்வராஜுக்கு மூச்சு வாங்கிற்று. கூடியிருந்த நண்பர்கள் ஓடி வந்து அவனைத் தூக்கிக் கட்டி அணைத்தார்கள். ஒருமுகமான பாராட்டுதல்கள் கிடைத்தன.

வெளிவாசலில் நிற்கும் அன்பரைக் கண்டு சிறுவன் குதித்துக் கொண்டு ஓடினான். அவருக்கு ஓர் இராணுவ சல்யூட் அடித்துக் கையைக் குலுக்கினான்.

''வாருங்கள், வாருங்கள் அசோகன்.''—ரளகரத்தினம் அவனை வரவேற்றார். ''இவ்



வளவு நேரம் பையன் உங்களைப் போல் நடித்துக் காட்டிக் கொண்டிருந்தான்.''

''நீங்கள் இவ்வளவு அழகாகப் பேசியது குறித்து எனக்கு மிகவும் பெருமையாக இருந்தது. வியப்புங்கூட...'' பெரியசாமி கூறினார்.

''வியப்புக்குக் காரணம்?'' என்று சின்னத் துரை வினவினார்.

''இவ்வளவு வருஷங்களாய் வெளிநாட்டில் இருந்திருக்கிறாரே, தமிழே மறந்திருக்குமோ?'' என்று எண்ணினேன்.

''தமிழ்தானே அசோகனது மூச்சு. 'மணிமிடை பவளமும், நித்திலக் கோவையும், முத்தொள்ளாயிரமும், இப்படி நாம் கேள்விப்பட்டே இராத பெயருள்ள நூல்களையெல்லாம் அவர் பெட்டியில் வைத்திருக்கிறார். அதென்ன அப்படிச் சொன்னீர்கள்?'' சின்னத் துரை கடிந்து கொண்டார்.

''அதெல்லாமில்லே. மனோன்மணி நல்ல முறையில் தம்பியைத் தயார் செய்திருக்கும். ஆனால் எனக்கென்ன பேசத்தெரியும்?''

''ஆமாம், ஆமாம். மனோன்மணிக்கு உன்னைத்தான் நல்லாத் தெரியுமே!'' ஓர் அழுத்தத்துடன் பேசினான் வின்சென்ட். அதில் இலேசான காரமும், ஏளனமும் இருந்



தன. அசோகன் அதைக் கவனித்தும் பொருட்படுத்தவில்லை.

''அப்பா உடம்புக்கு ஒன்றுமில்லாமலிருந்தாரா மனோன்மணி? அத்தான் சௌக்கியமா? அடேடே, அதுதான் சகுந்தலாவா? எவ்வளவு பெரிய பெண்ணாக வளர்ந்து விட்டது?'' அசோகன் வியந்தான்.

மேலே போர்த்தியிருந்த துண்டை நாற்காலியில் வீசிவிட்டு அசோகனே வரவேற்றாள் சகுந்தலா. 'வழி தெரிந்து எங்கள் வீட்டுக்கு வந்தீர்களே, அதற்காக நன்றி.'' — சற்றுக் குத்தலாய்க் கூறினாள்.

''சென்ற ஒரு வாரமாக முறை வைத்து ஒவ்வொரு வீட்டுக்கும் வந்து கொண்டிருக்கிறேன். அதற்குள் கோபித்துக் கொள்ளலாமா?'' அசோகன் கனிவுடன் கேட்டான்.

'' வாருங்க, மருமகப் பிள்ளே, ஊர்த் தண்ணி பிடிச்சுப் போச்சா?'' என்று கேட்டுக் கொண்டே வந்தார் அம்பலவாணர்.

''பெரிசா, பொண்ணை வெச்சிருக்கிறவர் மாதிரிதான் பேச்செல்லாம். இத்தனை பொண்ணைப் பெத்தவர் நம்ப அசோகனுக்குன்னு ஒண்ணை ரிசர்வ் செய்து வைத்திருக்கக் கூடாது? எல்லாத்தையுமா கட்டிக் கொடுத்திடணும்?'' என்று வேடிக்கையாகக் கேட்டார் சின்னத்துரை.

மனோன்மணியும் சகுந்தலாவும் தங்கள் தலையைக் குனிந்து கொண்டார்கள். மூத்தவள் நெட்டுயிர்த்தாள்.

3

வயலின் வரப்பு வழியே தனியாக நடந்து கொண்டிருந்தான் அசோகன். காலில் ரப்பர் செருப்புக்கள், மேஜோடு. வெள்ளை முழுக் கால் சட்டை, அதே நிறத்தில் ஒரு காலர் பனியன். கையிலே ஒரு குறுந்தடி. தென்னை மரங்களுக்கிடையே நடந்து செல்லுவது ஓர் இனிய அநுபவமாக இருந்தது. வரப்போரமாகச் சிறிய நீரோடை. அதன் பொந்துகளிலிருந்து நண்டுகள் வெளிப்பட்டன. வயல்களின் நடுவே வெண்ணாரை. வலியன் குருவிகள் ஒலமிட்டுக் கொண்டிருந்தன. இடையிடையே இருந்த புதர்களில் செம்போத்துக்கள். வானத்தில் நீலப் பட்டாடை விரித்தாற்போல் ஒரு தோற்றம். உயரத்தில் ஒரு கருடன் வட்டமிட்டுக் கொண்டிருந்தது.

அசோகன் சிறிது நடப்பதும், நிற்பதுமாயிருந்தான். வயல் ஓரமாக இருந்த சேரிப் பகுதிகளில் எல்லாம் சிமிட்டித் தளத்துடன் கூடிய குடியிருப்பு மனைகள் இருந்தன. அவற்றில் தென்னை ஓலைக் குடிசைகள். மூங்கில் கம்புகளிடையில் கருவாட்டுத் தோரணம் காய்ந்து கொண்டிருந்தது. குடிசையைச் சுற்றி ஜாதிக் கோழிகள், நாட்டு நாய்கள். சேரிப் பெண்கள் வெள்ளி நகை அணிந்திருந்தார்கள். வீட்டில் நிறைய அலுமினியப் பாத்திரங்கள். இவையெல்லாம் குடியாட்சியின் விளைவுகள் மட்டுமல்ல, குடிபோனதினுல் ஏற்பட்ட சிறப்புக்கள். தேசியக் கட்சியின் ஆட்சி மாறினுலும் இந்த ஒரு விஷயத்தில் மட்டும் அண்ணு பிடிவாதமாக இருந்தார். குடியினுல் ஏழை மக்களுக்கு விளேயும் தீமைகளே அவர் நேரிடை அநுபவத்தில் உணர்ந்திருந்தார். சேரிகளிலும், உழவர் தெருவிலும் பெரிய பொருளாதார மாற்றம் ஏற்பட்டிருந்ததை அசோகனுல் உணர முடிந்தது. அக்கிரகாரம்தான் தனது தனித் தன்மையை இழந்து தேய்ந்து கொண்டிருந்தது. பெரும்பாலோர், டில்லி, கல்கத்தா ஆகிய நகரங்களுக்குப் போய்விட்டார்கள். மிஞ்சியிருந்த சிலபாலோர் போலி வாழ்க்கை வாழ்ந்து குறுகிக் கொண்டிருந்தார்கள். கைவருந்தி உழைக்க முன் வராதவரை அந்தச் சமுதாய வகுப்புக்கு இனி விமோசனமே இல்லை. மாறிவிட்ட சமுதாய ரீதியை அவர்கள் எவ்வளவு சீக்கிரம் உணருகிறார்களோ அவ்வளவுக்கு அவர்கள் பயன் அடைவார்கள். அசோகனின் உள் மனம் இவ்வாறு எண்ணமிட்டது.

குடியானவத் தெருவில் பற்பல காரை வீடுகள் எழும்பியிருந்தன. புதிதாக எழும்பும் வீடுகளின் முன்னுல் சிறு பூந்தோட்டங்கள்; புறக்கடையில் பழ மரங்கள்; வீதி முழுவதும் மின்விளக்கு. வீட்டுக்கு வீடு ரேடியோ, டிரான்சிஸ்டர், குழல் விளக்கு, தையல் மெஷின், சில வீடுகளில் ரெப்ரிஜிரேட்டரும் வைத்திருந்தனர். இவை அனைத்தும் நல்வாழ்வுக்கு அடையாளங்களே. ஆனுல் மக்களின் அடிப்படை மனோபாவத்தில் மாறுதல் ஏற்படவில்லை. முக்கியமாகத் தங்கள் இல்லங்களின் சுற்றுப்புறத்தைத் தூய்மையாக வைத்துக் கொள்ள வேண்டும் என்ற பொறுப்பே இல்லாமலிருந்தது. குழந்தைகளைக் காலே வேளையில் சாக்கடை ஓரத்தில் உட்கார வைத்தார்கள். பெரியவர்கள் கையில் செம்புடன் சென்று சந்திக் கரை மூலையை அசுத்தமாக்கினுர்கள். ஆற்றங்கரை முன் போலவே தூய்மையற்றிருந்தது.

சீனுவில் இப்போதும்கூட அந்த நல்ல வழக்கம் உண்டாம். எல்லோரும் ஒரு சிறிய மண்வெட்டியுடன் வயலுக்குப் போய்விடுவார்களாம். மனித எருவும் வீணுகாது. காற்றில் அசுத்தமும் பரவாது. இத்தனைக்கும் நாட்டில் புதிய ஆட்சி வந்த பிறகு கிராமத்தில் ஒரு பொதுக் கக்கூசு கட்டப்பட்டிருந்தது. ஆனுல் அதற்கு வெளியிலிருந்த குழாய் வேலே செய்யவில்லை. அதன் தோல் வாஷர் தேய்ந்துவிட்டது. 'அதை ஏன் மாற்றக் கூடாது' என்று பஞ்சாயத்து அங்கத்தினரைக் கேட்டான் அசோகன். 'டெண்டர் போய் இருக்கிறது' என்று பதில் வந்தது. ஐம்பது பைசா வாஷருக்கு டெண்டர். இன்னும் கொஞ்சம் ஆழமாக அலுவலகத்துக்கே சென்று பார்த்தான். போரிங் குழாயும் பிஸ்டனும் வெவ்வேறு அளவுகள் உடையவை. எத்தனை பெரிய வாஷர் போட்டாலும் இரண்டே நாட்களில் பயன் படாது போய்விடும் என்று தெரிந்து கொண்டான். அந்தக் குழாயை அமைத்தது யார்? அப்படிக் குறையுள்ள பொறியைப் பொருத்தியதற்கு என்ன காரணம் என்று ஆராய்ந்து பார்த்தான் — பட்டாளக்காரனல்லவா?— பஞ்சாயத்துப் போர்டு தலைவரும், பம்பு விநியோகம் செய்த கடைக்காரரும் நெருங்கிய உறவு முறை என்பதுதான் இதற்கு விடை.



வெளிநாடுகளிலிருந்து இந்தியாவுக்கு வருபவர்களை பம்பாய் கஸ்டம்ஸ் அதிகாரிகள் திருடர்களைக் கேட்பது போல் கேள்விகள் கேட்கிறார்கள். சாந்தா குரூஸ் விமான நிலையத்திலிருந்து கஸ்டம்ஸ் சோதனை முடிந்து வெளிவர இரண்டு முதல் 10 மணி நேரம் வரை ஆகிறது.

-'இல்லஸ்டிரேட்டட் வீக்லி'

★

முன் அறிவிப்பு ஏதுமின்றி ஒரு சிறு பெண்ணை கடத்திப் போகும் நிகழ்ச்சியை இங்கிலாந்தில் போர்ட்ஸ்மத் நகரில் போலீஸ் ஒத்திகை பார்த்தது. பட்டப் பகலில் ஜனநடமாட்டமுள்ள தெருவில் இது நடத்தப்பட்டது. இருந்தும் யாரும் உதவ முன்வரவில்லை. --டிட்பிட்ஸ்

★

பிரிஸ்டலில் ஒருவர் தம் காரில் ஆயில் ஒழுகுவதை சூயிங் கம்மால் அடைத்து வைத்திருந்தார். அந்தக் கார் திருட்டுப் போய்விட்டது. காரின் கலர், நம்பர், என்ஜின் எல்லாவற்றையும் மாற்றியும் கூட அந்தச் சூயிங்கம் திருடனைக் காட்டிக் கொடுத்துவிட்டது.

- 'காரவான்'

★

இங்கிலாந்து நாட்டில் உபயோகப்படுத்தப்படாத ரயில்வே சீஸன் டிக்கெட்டுகளைத் திருப்பிக் கொடுத்தால் உபயோகிக்கப்படாத நாட்களுக்கும் பணம் திருப்பிக் கொடுத்து விடுகிறார்கள். - 'டிட்பிட்ஸ்'

தொகுப்பு : 'பாலி'

எந்த ஆட்சி வந்தாலும் இந்த நோய்க்கு மருந்து கிடையாது.

வினோபாஜி பவ்னார் கிராமத்தில் செய்தது போல் காலை வேளையில் ஒரு மண் வெட்டியோடு வீதி முனையில் நிற்போமா என்று யோசித்துப் பார்த்தான். அதன் விளைவு விபரீதமாகிவிடும். சமுதாயத்தைச் சீர்திருத்த எண்ணுபவன் அந்த மக்கள் அந்த வழிகளைப் புரிந்து கொள்வார்களா என்று யோசனை செய்ய வேண்டும் என்ற எண்ணம் அவனுக்கு வந்தது. காந்தி வழி கால் நூற்றாண்டுக்கு முன்பு. அப்போதே அண்ணலுடைய பரந்த மனப்பான்மையைப் பொறுக்காமல் அவரைக் கொன்றுவிட்டார்கள்.

அசோகன் சொந்த ஊருக்கு வந்து மூன்று வாரங்கள் ஆகிவிட்டன. தன்னால் அவர்களுக்கு ஏதாவது உதவி செய்ய முடியுமானால் அதைச் செய்யத் தயாராக இருப்பதாகக் கூறினான். ஊரார் சிலர் அவனது பண்பைப் புகழ்ந்தார்கள். பலர் அதை வெளிவேஷம் என்று கருதி, அதை வாய்விட்டே கூறவும் செய்தார்கள்.

உள்ளூர் எம். எல். ஏ. அவன் எந்தக் கட்சியைச் சேர்ந்தவன் என்று ஆராய முற்பட்டார். அவனுடைய அரசியல் நோக்கங்களை அறிய விழைந்தார். யார் கண்டது? அடுத்த தேர்தலுக்கு ஆளும் கட்சி அவனுக்கு டிக்கட் கொடுத்துவிட்டால்? இந்த நாளில் வெளிப்பூச்சுக்குத்தானே மதிப்பு !

உள்ளூரிலே எதிர்க்கட்சிக்காரர் பல்லாண்டுகளாகச் சட்டசபையை அலங்கரித்தவர். சென்ற தேர்தலில் நிகழ்ந்த புயலின் விளைவினால் சாய்ந்தவர். 'பையன் பார்வைக்கு நன்றாக இருக்கிறான். தமிழ் தெரிகிறது — பண்டைய இலக்கியம் உள்பட அனுபவம் மிகுந்தவனாகவே காணப்படுகிறான். அழகான மேடைப் பேச்சு. தமிழ் நாட்டில் இது ஒரு பெரிய தகுதி. அடுத்த தேர்தலில் இவன் நம் கட்சிச் சேவலாக இருக்கட்டுமே?' என்று எண்ணினார்.

தர்மகர்த்தா தேவராயபிள்ளை அசோகனைப் பார்த்தபோதெல்லாம் பயந்த மாதிரி தெரிந்தது. தற்போது வாழ்வுக்கு அவர் கோயிலைத்தான் நம்பியிருந்தார். இந்தப் புது ஆள் அதைக் கெடுத்துவிட்டால் ?

மொத்தத்தில் ஊரில் உள்ளவர்கள் அவனால் என்ன பயன் அடையலாம் என்று பார்த்தார்களே தவிர அவனுக்கு என்ன உதவி செய்யலாம் என்று எண்ணவே இல்லை. அவனுடைய வருகையினால் மகிழ்ச்சி உற்றவர்கள் சிறப்பாக நாலு பேர்கள். அந்த நால்வரும் பெண்பாலர்.

முதலாவது அண்ணி ! காமாட்சி. கொழுந்தன் வீட்டோடு வந்து குடும்பப் பொறுப்பைப் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்று அவள் விழைந்தாள். அண்ணன் அரசியல் பணியை மேற்கொண்ட பிறகு குழந்தைகளை அடக்குபவர் யாருமே இல்லை. அவர்களுடைய படிப்பும் நடையும் சீரழிந்து கொண்டிருந்தன. பண்ணை ஆட்கள் சரிவர வேலை செய்வது நின்றுவிட்டது. இவையெல்லாம் குடும்பத்துக்கு நல்லதல்ல என்று அவளுக்குத் தெரியும்.

அடுத்தது தங்கை மரகதம். அண்ணன் அசோகன் அவளுக்கு ஓர் இலட்சிய புருஷன். அண்ணனின் இலக்கியப் புலமையும், நாடு சுற்றிய அனுபவமும், பேச்சுத் திறனும் அவளுக்கு வாழ்வில் ஒரு புதிய பிடிப்பை உண்டாக்கின. பெரியண்ணன் வீட்டைக் கவனிப்பதில்லை. தன்னுடைய திருமணம் இளையவன் வந்த பிறகுதான் நடைபெற முடியும் என்று அவள் உறுதியாக நம்பினாள். அதனால் அவள் அசோகனின் வருகையைப் பெரிதும் விழைந்தாள்.

மற்றவள் கனகரத்தினத்தின் இரண்டாவது மகள் சகுந்தலா. இவள் அசோகனை எண்ணியே தன் வாழ்க்கைக் கனவுகளை அமைத்திருந்தாள். அடைந்தால் அசோகனைக் கணவனாகப் பெறுவது. இல்லாவிட்டால் கன்னியாகவே வாழ்வது என்று முடிவு செய்து கொண்டிருந்தாள். இந்த விவரம் மரகதத்துக்குக்கூட ஓரளவு தெரியும். அசோகன் ஊர் திரும்பிய பிறகு மரகதத்தைக் காணும் பொருட்டுச் சகுந்தலா அடிக்கடி வீட்டுக்கு வந்தாள். அசோகனுடன் தனியே பழகித் தன் உள்ளக் கிடக்கையை வெளிப்படுத்த ஒரு சரியான வாய்ப்பை எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள்.

கடைசியில் அந்தக் கருகிய மொட்டு — மனோன்மணி. இவள் சகுந்தலாவின் தமக்கை.

அசோகனின் பள்ளிப் பிராயத்துத் தோழி. அவனுடைய நினைவில் தன் உள்ளத்தைப் பறிகொடுத்தவள். ஆனால் அவனுடைய கனவு பலிக்கவில்லை. விதி அவளை வேறு எங்கோ இழுத்து முடிந்திருந்தது.

எத்தனை புதிய கொள்கைகள், ஆட்சி மாற்றங்கள் வந்தால் என்ன? மனித சமுதாயத்தின் அடிப்படை உணர்ச்சிகளில் மாறுதல் ஏதும் இல்லை. அசோகன், மனோன்மணி இவர்களுடைய குடும்பத்தினரும் புதிய கொள்கைகளை வரவேற்பவர்களே. ஆனால், நடைமுறையில் அவர்களுடைய பிணைப்புக்குச் சமய வாழ்வு குறுக்கீடாக நின்றது.

எங்கேயோ கவனமாக நடந்து கொண்டிருந்த அசோகனின் காலை ஒரு பாம்பு சுற்றி வளைத்தது. அதைத் தன் கையிலிருந்த குறுந்தடியினால் விலக்கி எறிந்துவிட்டு மேலே நடந்தான் அவன்.



"ஹரே ராமா... ஹரே கிருஷ்ணா...
ஹரே ராமா.... ஹரே கிருஷ்ணா...."

"இதென்ன! ஆபீஸிலேயே பஜனை?"

"காலிங் பெல் ரிப்பேர்! ப்யூன் ராம கிருஷ்ணனை அழைக்கிறேன்!"

4

சேரிப் பகுதியைத் தாண்டி வந்த அசோகன் தான் கனகரத்தினத் தேவரின் தோட்டத்துக்குள் வந்துவிட்டதை உணர்ந்தான். தேவர் மனோன்மணியின் தந்தை. அவருக்கு இரண்டு பெண்களும் ஒரு பையனும்தான். வசதி உள்ள குடும்பத்தினர்தான் என்றாலும் சிறுவையாளவர் என்ற காரணத்தினால் ஊரிலே சற்று ஒதுக்கியே வைத்திருந்தார்கள். அடிநாளில் அவர் பரம்பரை ஏழை. அவருடைய தாயார் அதே ஊரில் கள்ளி பொறுக்கி ஆப்பம் சுட்டு விற்றுக் கொண்டிருந்தாள். பல ஆண்டுகளுக்கு முன்பு ஒரு தரம் இருதயபுரத்திலிருந்து சமயப் பிரசாரக் கூட்டம் ஒன்று அங்கு வந்திருந்தது. சிறுவன் கனகரத்தினம் அவர்களுக்குக் குற்றேவல் புரிந்தான். பெரிய பாதிரிக்குப் பையனைப் பிடித்திருந்தது. 'வருகிறாயா?' என்று கேட்டார். 'சரி' என்றான். இரவோடு இரவாகத் தாயாருக்குக் கூடச் சொல்லாமல் அவர்களோடு போய் விட்டான்.

கனகரத்தினத்துக்கு உணவும், நல்ல ஆடைகளும் கிடைத்தன. கல்வியும் நல்லொழுக்கமும் போதிக்கப்பட்டன. நாளடைவில் சிறிய உத்தியோகமும் கிடைத்தது. தாயாருக்குப் பொருள் உதவி செய்தார். ஆனால் அவள் அதை ஏற்றுக் கொள்ளவில்லை. அவருடைய அன்னை மரணமடைந்தபோது கூட உறவினர்கள் அவரை சமக்கிரியைகள் புரிய அனுமதிக்கவில்லை. கோவிந்தாக் கொள்ளிதான் வைத்தார்கள்.

மிகுந்த வன்மத்துடன் சொந்த ஊருக்குத் திரும்பி வந்தார் கனகு. சேரிக்கு ஒதுப்புறமாயிருந்த கரம்பு நிலத்தை விலைக்கு வாங்கினார். ஒன்றும் விளையாது என்று ஊரார் எண்ணியிருந்த நிலத்தில் இறங்கினார். டீசல் பம்பு ஒன்று வைத்தார். குடமிளகாய் பயிர் செய்தார். முதல் வருஷம் எல்லாம் சாவி. ஆடுதுறைப் பண்ணைக்கு மண்ணை வாரிக் கொண்டு போனார் கனகு. தேவையான உரத்தை அளந்து கணக்கிட்டுப் போட்டார். அந்த ஆண்டு செடிகள் முழங்கால் உயரத்துக்கு வந்தன. பூ வைத்த வேளையில் அகால மழை வந்து எல்லாவற்றையும் அழுக வைத்து விட்டது. கனகரத்தினம் கலங்கவில்லை. குடும்பத்தோடு முழுமூச்சுடன் பயிர்த்தொழிலில் ஈடுபட்டார். முயற்சி மெய் வருத்தக் கூலி தந்தது. அந்த ஆண்டு விளைச்சலில் ஒவ்வொரு குடமிளகாயும் உரித்த தேங்காய் அளவு இருந்தது. ஊரார் தம் கண்களையே நம்பவில்லை. 'இது ரசாயன உரம் போட்டது, விஷக் காய்' என்று புரளி செய்தார்கள். அவற்றை வாரி வைத்துத் திருச்சி மார்க்கெட்டுக்கு அனுப்பினார் கனகு. மூன்று வருஷ நஷ்டம் ஈடாகிவிட்டது.

டீசல் பம்பு வைத்த இடத்தில் ஆலமரத்தடியில் பெரிய மேடை ஒன்று கட்டினார் கனகு. அதற்குப் பக்கத்தில் சிறிய அறை ஒன்றை எழுப்பினார். சேரிக் குழந்தைகளுக்கு இராப் பள்ளிக்கூடம் தொடங்கப்பட்டது. அதில் முதியவர்களும் கலந்து கொண்டார்கள். பக்கத்தில் காந்திப் பொம்மை ஒன்று வைக்கச் செய்தார். ஒன்றிரண்டு ஊஞ்சல்கள், சறுக்கு மரம் — ஸீ-ஸா, அந்தப் பிள்ளைகள் தங்கள் வாழ்நாளிலேயே கண்டிராத வைபவங்கள் அவை. விளைவு? அவருடைய பயிர்த்தொழில் செழித்தது.

அசோகன் அந்தப் பழைய ஆலமரத்து மேடையில் வந்து நின்றான். அங்கே சிமிட்டித் தரையில் பல்லாங்குழி, தாயக் கட்டம், ஆடு புலி இவையெல்லாம் ஆடுவதற்கு வசதியிருந்தது. பிஞ்சு வயதில் தானும் மனோன்மணியும் அங்கு விளையாடியதெல்லாம் அவன் நினைவில் வந்தது. நெஞ்சு நோகத் தொடங்கிற்று. இலேசாகத் தலை சுற்றலும் மயக்கமும் தொடர்ந்தன. கணுக் காலில் வலி தோன்றவே அங்கே கவனித்தான். பாம்பு தீண்டிய இடத்தில் உதிரம் கசிந்து கொண்டிருந்தது. மரத்தில் கட்டியிருந்த கலயத்திலிருந்து கொஞ்சம் சுண்ணாம்பை எடுத்து அப்பினான். டீசல் எஞ்சினின் இடத்தில் மின்சாரப் பம்பு வந்திருந்தது. அதற்காக ஒரு ஸ்விட்ச் அறையும் அமைத்திருந்தார்கள். அரைமயக்க நிலையில் அதனுள் நுழைந்தான் அசோகன். அங்கே ஒரு நாடாக் கட்டிலும் அதன் மேல்

வைக்கோல் மெத்தையும் இருந்தன. பக்கத்தில் ஒரு மண் கூஜா, கண்ணாடி தம்ளர்.

களைப்புடன் அந்த மெத்தையில் படுத்தான் அவன். வாடிய மல்லிகையின் மணம் நாசியை நெருடிற்று. நெஞ்சிலே பழைய நினைவுகள் கனத்தன. கண்களை இறுக மூடிக் கொண்டு மார்பில் உயிர்ப்பை நிரப்பினான். உறங்கியே போனான்.

மறுபடியும் அவன் கண் விழித்தபோது சேவல்கள் கூவிக் கொண்டிருந்தன. வேப்ப மரத்தில் ஒற்றைக் குயில் இசைக் குரல் எழுப்பிற்று. சிட்டுக்களும் மைனாவும் தத்தம் மொழியில் ஆதவனுக்கு நல்வரவு கூறின. நாகணவாய் 'உக்கும்' கொட்டிற்று. எங்கோ காகத்தின் கரையும் ஓசை கேட்டது.

முந்தின இரவு ஒன்றும் உண்ணாததினால் வயிறு இலேசாக இருந்தது. நெடு நேரம் வரப்பில் கிடந்தால் தண்ணீர்ப் பாம்புக்குக் கூட விஷம் வந்துவிடுமாம். அதன் நீண்டுதல் தான் தனக்கு மயக்கத்தை உண்டாக்கியிருக்க வேண்டும் என்று அவன் நிர்மானித்தான். கணுக் காலில் புண் காய்ந்திருந்தது.

மின்விசையை இயக்கிவிட்டு நீர்க் குழாயில் முகம் கழுவிக் கொண்டான், பல் விளக்கினான், பிறகு குளிக்கத் தொடங்கினான். கனமாகவும், வேகமாகவும் தண்ணீர் மேலே விழுவது இதமான அனுபவமாக இருந்தது. உடம்பு வலி தீரக் குளித்துக் காற்றிலேயே உலர்ந்த துணிகளைத் தரித்துக் கொண்டான். அறையில் மல்லிகையின் நெடி இன்னும் போகவில்லை. அந்த மெத்தையில் முகத்தைப் புதைத்துக் கொண்டு படுத்தான். நெஞ்சு நிறைந்து வந்தது. ஏனோ கேவிக் கேவி அழுதான். பிறகு தானே சிரித்துக் கொண்டு எழுந்து முகத்தைத் துடைத்துக் கொண்டு வந்த வழியே ஊர் திரும்பினான்.

கிராமத்தில் வீதி முனை திரும்பிய போது அவன் பிரமித்துப் போய் நின்றான். பொது ஒதுக்கிடத்துக்கு வெளியில் ஒரு தகர அண்டாவில் மனோன்மணி கிணற்று நீரை நிரப்பிக் கொண்டிருந்தாள். ஊர்க் குழந்தைகளையெல்லாம் அந்தக் கக்கூசை உபயோகிக்கும்படி சற்றுக் கண்டிப்புடனேயே கூறிக் கொண்டிருந்தாள் சகுந்தலா. அசோகனைக் கண்டதும் அவர்களுடைய முகம் மலர்ந்தது.

''என்ன இது, அதிகாலையில் எங்கிருந்து வருகிறீர்கள்?'' என்று சகுந்தலா வினவினாள்.

'' சொன்னால் வியப்பாக இருக்கும். நம்பக்கூட மாட்டீர்கள்.''

''அப்படி எந்த இடமோ அது?'' என்று மனோன்மணி அழகாகப் பற்கள் தெரியச் சிரித்தவாறே கேட்டாள்.

''உங்கள் தோட்டத்து வீட்டில் இரவு முழுவதும் அடித்துப் போட்டாற் போல் உறங்கினேன். பிறகு காலையில் குளித்துவிட்டுத் திரும்புகிறேன்.''

''இரவு முழுதும் தனியாகவா படுத்திருந்தீர்கள்? பயமாக இல்லை? அக்காதான் அங்கே போவது வழக்கம்.'' சகுந்தலா கூறினாள்.

அங்கு நிலவிய மல்லிகை நெடியின் காரணம் அவனுக்குத் திடீரென்று விளங்கியது. மனோன்மணியின் விழித் திரையில் ரகசியமான ஆறுதல் பனிச்சிடுவதைப் பார்த்தான்.

''எத்தனை சுகமான இடம், அற்புதமான மணம், பறவைகளின் இன்னொலி, இரவு எப்படிப் போயிற்று என்று தெரியாது.''

'' அங்கு ஏதோ மோகினிப் பிசாசு குடியிருக்கிறது என்று இருட்டிய பிறகு யாருமே அங்கே போவதில்லை.'' சகுந்தலா கூறினாள். அவளுடைய கண்களிலும் ஒரு மின்னல் வீசியது.

அந்த மோகினிப் பிசாசு யார் என்று அசோகனால் அனுமானிக்க முடிந்தது. ''வரட்டுமா?'' என்று புறப்பட்டான்.

'' எங்கள் வீட்டுத் தோட்டத்தில் இரவு தங்கியிருக்கிறீர்கள். காலையில் குளித்ததும் எங்கள் கிணற்றில். இன்று காலை ஆகாரமும் எங்கள் வீட்டில்தான் உண்ண வேண்டும்.'' மனோன்மணி மிகுந்த கண்டிப்புடன் கூறினாள். அசோகனால் அந்த ஆணையைத் தட்ட முடியவில்லை.

புள்ளிக் கோலமிட்ட சிமிட்டித் தரையில் பாலிஷ் செய்யப்பட்ட அழகிய டைனிங் மேஜை. அதில் வரிசையாகப் பீங்கான் தாலங்கள் வைக்கப்பட்டிருந்தன. மூவரும் நாற்காலியில் உட்கார்ந்தார்கள். தவிசுப் பிள்ளை இடியாப்பம் பரிமாறினார். அதிலே தேங்காய்ப் பால் மணத்தது.

''நீங்கள் பட்டாளத்தில் காலையில் என்ன சாப்பிடுவீர்கள்?'' என்று சகுந்தலா கேட்டாள்.

''ஒரு நாள் 'பாரிட்ஜ்', மற்ற நாள், ப்ளேக்ஸ்' !''

'' அப்படி என்றால் ?''

'' 'பாரிட்ஜ்' என்பது கஞ்சி. ஃப்ளேக்ஸ் தவிட்டைப் போல் இருக்கும். அதிலே பாலை ஊற்றிச் சாப்பிடுவோம். அத்துடன் பாதி வெந்த முட்டை, பிளாட்டிங் பேப்பரைப் போன்ற டபுள் ரொட்டி. இவையனைத்தையும் கத்தி, முள் கரண்டியின் உதவியோடு சாப்பிட வேண்டும். சர்க்கஸ் செய்வதுபோல் இருக்குமே தவிர சாப்பிடுகிற சுவையான அநுபவமே இராது.''

தவிசுப் பிள்ளை காப்பி கொண்டு வந்தார். அசோகன் அவரை அண்மையில் விளித்தான். ''இன்னும் இரண்டு ஆப்பமாவது போட்டால்தான் நான் எழுந்திருப்பேன்.''

மூவரும் குலுங்கக் குலுங்க நகைத்தார்கள்.

5

''சித்தப்பா வந்தாச்சு அத்தை'' என்று குதித்துக் கொண்டே உள்ளே ஓடினான் சேகர். ''சித்தப்பா, சித்தப்பா!'' என்று கூவிக் கொண்டே ஆனந்தி வாசலுக்கு வந்தாள். காமாட்சியும், மரகதமும் அவனைப் பின் தொடர்ந்தனர்.

''ஒரே நாளில் புள்ளைங்களெல்லாம் இப்படி ஏங்கிப் போச்சே. நேத்து எங்கே போயிட்டீங்க, தம்பி?'' கனிந்த குரலில் வினவினாள் அண்ணி காமாட்சி.

ஆனந்தியைத் தூக்கி மடி மேல் வைத்துக் கொண்டான் அசோகன். ''காலேலே பால் சாப்பிட்டியா ஆனந்த்?'' என்று கேட்டு அவளைக் கொஞ்சினான்.

இன்னுமொரு குழந்தையைப் பெறுவதற்குமுன் சற்று

யோசியுங்கள்

முதலில் இந்தக் குழந்தையை நன்றாக வளர்க்க வேண்டாமா?



இக்குழந்தையை நன்றாக படிக்க வைக்க வேண்டாமா? உங்கள் விருப்பப்படி, குழந்தைக்கு வசதிகள் அனைத்தும் அளிக்க வேண்டாமா? இன்னொரு குழந்தையை உடனே பெற்றால், இதெல்லாம் முடியுமா? சிரமம் தான். அடுத்த குழந்தை உடனே வேண்டாம் என்று நீங்கள் கருதுவது இயற்கைதானே.

நீங்கள் மட்டுமல்ல; உலகெங்கிலும் தம்பதிகள் இவ்விதம்தான் கருதுகிறார்கள். வளமுடன் வளர்க்க வசதிகள் பெருகும் வரை, அவர்கள் இன்னொரு குழந்தையைப் பெறுவதில்லை. நீங்களும் 'நிரோத்' உபயோகித்து குழந்தை பெறுவதைத் தள்ளிப்போடலாம். அனைவரும் விரும்பி ஏற்கும் ரப்பர் கருத்தடைச் சாதனம் நிரோத்; இது ஆண்களுக்கானது. தலைமுறை தலைமுறையாக உபயோகத்தில் இருந்துவரும் சிறந்த, எளிய, பாதுகாப்பான கருத்தடைச் சாதனம் நிரோத். நீங்களும் நிரோத் உபயோகியுங்கள்.

நிரோத் எங்கும் கிடைக்கிறது. அரசாங்க ஆதரவு விலை 15 பைசாவுக்கு 3



இன்னொரு குழந்தையை வளர்க்க வசதி பெறும் வரை உபயோகியுங்கள்

நிரோத்

லட்சக்கணக்கான பேர் விரும்பி ஏற்கும் எளிய, பாதுகாப்பான கருத்தடைச் சாதனம் நிரோத்.

71/119

பலசரக்குக் கடைகள், மருந்தகங்கள், வெற்றிலைபாக்குக்கடைகள் இங்கெல்லாம் நிரோத் விற்பனையாகிறது.

''இன்னும் குடிக்கலே, சித்தப்பா வந்தால் தான் சாப்பிடுமாம்.'' சேகர் ரிப்போர்ட் கொடுத்தான்.

''மொதல்லே பாலைக் கொண்டு வாங்க அண்ணி, கூடவே கொஞ்சம் கருப்பட்டியும்.'' அசோகன் கூறினான். அண்ணி உள்ளே சென்றதும் மரகதம் சண்டைக்கு ஆயத்தம் செய்தாள். ''நேத்து உங்களை எங்கேயெல்லாமோ தேடினோம். சினிமாவுக்கு ஆள்விட்டனுப்பினோம். தஞ்சாவூர் பஸ்ஸிலே சொன்னோம்.''

'' சாயங்காலம் ஒரு தண்ணிப் பாம்பு தீண்டிச்சு மரகதம். அது வரப்பிலே கிடந்த பாம்பு போல இருக்கு. எனக்கு மயக்கமா வந்திடுச்சு. கனகரத்தினத்தின் தோட்டத்து அறையிலேயே படுத்து உறங்கிட்டேன்.''

''ஐயய்யோ, அங்கே மோகினிப் பிசாசு இருக்காமே, நீங்க ஏன் அண்ணே அங்கே போனீங்க ?''

''அட போ, எத்தினி ஊர் மோகினிங்களே நான் பார்த்திருப்பேன். இந்தப் பிசாசுதான் என்னைப் பிடிக்குதாக்கும். இந்த ஊர்லே மோகினிதான் என்னைப் பிடிக்கணும்கிறது இல்லையே. கால் பாவுற பொண்ணுங்களே நிறைய இருக்காங்க'' என்றான்.

தம்ளரில் பாலை எடுத்துக் கொண்டு வந்த காமாட்சி, ''சரி, போய்ச் சீக்கிரம் குளியுங்க, இன்னிக்குத் துவாதசி, பெரியவங்க போனப்புறம் நல்ல வழக்கமே வீட்டை விட்டுப் போயிடுச்சு. நீங்களாவது வந்து சீக்கிரம் சாப்பிடுங்க'' என்றாள்.

''என்னை அறியாமலே நேத்து ராத்திரி ஏகாதசிப் பட்டினி இருந்திருக்கேன், அண்ணி. காலையிலேயே எழுந்து குளிச்சுப் போட்டு நம்ப மனோன்மணி வீட்டில் டிபன் சாப்பிட்டுவிட்டு வந்திருக்கேன்.''

''பெரிய நாளும் அதுவுமாய் அவங்க வீட்டிலே ஏன் சாப்பிட்டீங்க?'' என்று அண்ணி கசந்து கொண்டாள்.

'' நம்மிடத்திலே அனுஷ்டானம்தான் மிஞ்சியிருக்கு. பெரிய பெரிய வேதாந்தமெல்லாம் புஸ்தகத்திலேயே முடங்கிக் கிடக்குது. நடைமுறைத் தத்துவங்கள் எல்லாம் அவர்களிடம்தான் குடியிருக்கு. இத்தனை குடும்பங்கள் இருக்கிற ஊரில் அந்தக் கிறிஸ்தவப் பொம்பளைங்க இரண்டு பேருக்குத்தான் ஊரைத் துப்புரவாய் வைத்துக் கொள்ள வேண்டும் என்ற எண்ணம் இருக்கிறது. இன்னிக்குக் காலையிலே பார்க்கிறேன். பொதுக் கக்கூஸுக்கு வெளியிலே தவலையை வைத்து இரண்டு பேரும் தண்ணீர் ரொப்புறாங்க !''

''வாஸ்தவம் அண்ணே, இந்த ஊரிலே பொதுக் காரியம் என்றால் அவங்க ரெண்டு பேர்தான் முன்னால் நிக்கறாங்க.''

'' இங்கே மட்டும் இல்லே; மரகதம் ; இந்தியா முழுதும் போய்ப் பார். தன்னலமற்ற சேவையைக் கிறிஸ்தவர்களிடம் காணலாம். அவர்களுடைய உள்நோக்கம் சமயப் பிரசாரமாக இருக்கலாம். ஆனால் அது அவர்களது தர்மம்.'' அசோகனுடைய கண்கள் உணர்ச்சி மிகுதியினால் பளபளத்தன. ''நான் சில காலம் வடகிழக்கு எல்லையில் வசித்தேன் மரகதம். அங்கே அப்பத்தானி என்று ஒரு மலை ஜாதியினர் வாழ்கிறார்கள். சீனாக்காரன் படையெடுத்து வந்தபோது அவர்கள் எதிரியோடு சேர்ந்து கொண்டார்கள். சண்டைக்கப்புறம் அவர்களிலே ஒருவனைக் கேட்டேன், 'ஏன்டா பாவி, இப்படிச் செய்தீர்கள்?' என்று. 'சுதந்திரம் அடைந்து பதினைந்து வருஷங்களில் நீங்கள் எங்கள் முன்னேற்றத்துக்காக என்ன செய்தீர்கள்?' என்று அவன் திருப்பிக் கேட்டான். எனக்குப் பேச வாயில்லே.''

குழந்தை ஆனந்தியை மடியில் போட்டுக் கொண்டு தரையில் உட்கார்ந்தாள் அண்ணி காமாட்சி. ''அங்கே நாகர்கள் எல்லாம்கூடத் தனி ராஜ்யம் வேண்டும் என்று கேட்கிறார்களாமே!''

''நாகர்கள் மட்டுமில்லே. மிஜோ என்ற ஜாதியும்தான். சுதந்திரம் கிடைப்பதற்குப் பல காலம் முன்னரே வெளிநாட்டுப் பாதிரிகள் பலர் அங்கே குடியேறினார்கள். மக்களுக்கு மருத்துவ உதவி அளித்தார்கள். கல்வி போதித்தார்கள். கல்கத்தாவிலும், டில்லியிலும் வகுப்புக் கலவரங்களைத் தூண்டிவிடுகிற புண்ணியவான்கள் எவரும் எல்லைக்குப் போக முன் வரவில்லை. இப்போது நாகர்களிடம் போய் 'நீங்கள் எங்கள் சகோதரர்கள்' என்று சொன்னால் அவர்கள் செவிகளில் ஏறுமா? நாம் அவர்களுக்குக் கெடுதல் செய்யவில்லை என்பது உண்மை. ஆனால் எல்லைவாழ் மக்களைக் காக்க வேண்டியது நமது கடமை அல்லவா? எந்த ஆக்கிரமிப்பிலும் பாதிக்கப்படுவது அவர்கள்தானே! அங்கே அவர்களுக்கு உதவி செய்த வெளிநாட்டவர்கள் எல்லாம் இந்தியப் பண்பாட்டுக்கு எதிரான கருத்துக்களையேதான் பிரசாரம் செய்து வந்திருக்கிறார்கள். பல முனைகளில் நாம் தவறு செய்திருக்கிறோம், அண்ணி! இதைச் சீர்செய்ய வெகு காலம் பிடிக்கும்.''

''என்ன, பெரிய பிரசங்கமெல்லாம் நடக்குது?'' என்று கேட்டுக் கொண்டே உள்ளே வந்தார் கண்ணப்ப முதலியார். அவர் பஞ்சாயத்து போர்டு தலைவர். அனுபவம் முதிர்ந்தவர்.

''இந்தக் குடும்பத்திலே எல்லோருமே மேடைப் பிரசங்கிகள்தான். இவங்க அப்பா கொஞ்ச பிரசங்கமா செய்தாரு? இப்ப இவரோட அண்ணே உரை நிகழ்த்தாத நாளே இல்லே. தம்பி இத்தனை வருஷமாய்ப் பேசலே. இப்போத்தான் தொடங்கியிருக்கு'' என்று காமாக்ஷி கூறினாள்.

''தம்பி அதிகம் பேசறதில்லையே. காரியத்திலே அல்லவா இறங்கிடுது? தம்பி, அசோகன்! முச்சந்தியிலே பம்பை நட்டுப் போட்டேன்; சாக்கடையையும் மூடிவிட்டேன். பம்பிலிருந்து தண்ணி அருவி கணக்காக் கொட்டுது. உன்கிட்டயே நேரிலே சொல்லிப் போடுவோம்னுதான் வந்தேன். இல்லையானால் நீங்க மாண்பு மிகு முதலமைச்சர் கிட்டயே போய்விடுவீங்க. அவரோ உங்க பச்சைச் சட்டையைக் கருதி இங்கே நேரிலே ஆளை அனுப்பினாலும் வியப்பில்லே. அவருக்கு எல்லாமே இருபத்தி நாலு மணி நேரக் கெடுவுதான்.''

''புதுத் துடைப்பம் நல்லாக் கூட்டும் பாங்க.''

''குடியரசு செய்த தந்திரம்தானே இது? இவன் நல்லாக் கூட்டல்லேன்னு இன்னொருத்தன் தயாராய் நிற்கிறான். பதவி நீக்க

னும்னு பொதுமக்களுக்குத் தொண்டு செய்து தான் ஆகணும்னு ஒரு கட்டாயத்தைக் கொண்டு வந்தாங்க பாருங்க, அந்த அரசியல் அமைப்பைச் சொல்லுங்க. அவங்களைத்தான் வாழ்த்தணும்!''

''மோர் சாப்பிடுங்க, முதலியார்வாள்!'' மரகதம் தம்ளரில் மோரும், தட்டில் வெற்றிலை பாக்கும் எடுத்து வந்தாள். முதலியார் மோரை அருந்தினார். ''தம்பி சாயா தான் குடிக்கும். அதுதான் பழக்கம் இல்லையா?''

''பேசக் கூடாது. ஒரு வேளை பால்; ஒரு வேளை மோர். இடையே இளநீர். அது தான் உடம்பு கட்டு விடாமல் இருக்கு. காப்பியும் சாயாவும் உடம்புக்கு நல்லதுங்களா?''

''இன்னொன்னு சொல்லணும்னு வந்தேன். முதலியார் சற்றுத் தயங்கினார். ''எனக்கு மனசுக்குள்ளாற வச்சுப் பேசத் தெரியாது. பெரியய்யா என் தம்பி மாதிரி. அதனாலே சொல்றேன். நீங்க அந்தக் கனகரத்தினத்தின் குழந்தைகளோடு தொடர்பைக் கொஞ்சம் குறைச்சுக்கணும்.''

அசோகனின் முகம் மாறியது.

''பெரிய பொண்ணு புருஷனை விட்டு வந்தவ. ஏதோ அவங்களுக்குள்ளே ஆயிரம் இருக்கும். இருந்தாலும் நம்ம சமுதாயத்திலே அதைக் கௌரவமாச் சொல்ல மாட்டோம். அதனாலேயே அந்தச் சின்னப் பொண்ணுக்குக் கல்யாணமாகலே. என்ன தான் ஜாக்கிரதையாகப் பழகினாலும் இதெல்லாம் பஞ்சும் நீயும் போலே. தம்பிக்குத் தெரியாதது எதுவுமே இல்லே. நான் இதெல்லாம் சொல்ல வேண்டாம். வரட்டுமா?'' அசோகனின் தோளைத் தட்டி விட்டு அவர் வெளியேறினார். காமுவும் மரகதமும் ஒருவரை யொருவர் பார்த்துக் கொண்டனர்.

அசோகனின் முகம் சற்று வெளிறிற்று. பேசாமல் மாடிக்குச் சென்று தன் அறையை அடைந்து அதைத் தாழிட்டுக் கொண்டான். இழுப்பறையிலிருந்து புகைப்பட ஆல்பம் ஒன்றை வெளியில் எடுத்தான்.

அதிலே ஒரு மங்கை மரத்தைத் தழுவியவாறு நின்றாள். குடத்திலே நீரெடுத்து மலர்ச் செடிக்கு ஊற்றுகிறாள். அசோகனின் தொப்பியைத் தலையில் தரித்திருக்கிறாள். எல்லாம் மனோன்மணியின் வெவ்வேறு நிலைத் தோற்றம்.

'இதற்காகவா மனா, நாம் இப்படியெல்லாம் பழகினோம்?' அசோகன் தன் கண்களிலிருந்து வழிந்த நீரைத் துடைத்துக்கொண்டான்.

6

அடுத்த இரண்டு மாதங்களுக்குள் தங்கை மரகதத்தின் திருமணம் நிச்சயமாயிற்று. மாப்பிள்ளைப் பையன் பக்கத்தூரான கடுவெளியைச் சேர்ந்தவன். ஓரளவு நிலபுலன்கள் இருந்தன. சொந்த வீடு, மாடு கன்றுகள் உடையவன். தவிரவும் ஒழுக்கத்தில் சிறந்தவன். குடும்பம் பரந்த மனப்பான்மை உடையது. தஞ்சையில் ஒரு வங்கியில் வேலை பார்த்து வந்தான். பையனின் பெற்றோர்களைக் கண்டு பாக்கு வெற்றிலை மாற்றுவதிலிருந்து பத்திரிகை அச்சடித்து விருந்தினர்களை வரவேற்பது வரை ஒவ்வொரு ஏற்



''அந்தை! ஒரு வேண்டுகோள்!''
''என்ன?''
''நம்ம குடும்ப ஒற்றுமைக்கும் பங்கம் ஏற்படாவண்ணம் இன்றே, இப்போதே, எனக்கும் உங்க பிள்ளைக்கும் சுயாட்சி உரிமை வழங்கிடல் வேண்டும்!''

பாட்டையும் நுணுக்கமாக ஆராய்ந்து ஏற்பாடு செய்தவன் அசோகன்.

கல்யாணம் கடுவெளியில் நடந்தது. இரண்டு ஊர்க்காரர்களும் குழுமி அதைத் தங்கள் வீட்டுச் சிறப்பாகவே எண்ணிச் செய்தார்கள். அண்ணன் தங்கவேலுவுக்கு ஒரு சிரமமும் வைக்கவில்லை.

''கடைசியில் கல்யாணத்தைப் பண்டைய முறையிலேயே நடத்தி விட்டீங்க. இது சீர்திருத்தத் திருமணமாக இருக்கும் என்று எதிர்பார்த்தோம்.'' மார்பு நிறையச் சந்தனத்தைப் பூசிக் கொண்டே தங்கவேலுவிடம் பேச்சுக் கொடுத்தார் சிதம்பரம். அவர் அந்தக் குடும்பத்தின் பழைய நண்பர்.

''இப்போ நம்ம குடும்பத்துக்கு ஒரு காரு பாரி வந்தாச்சு. வீட்டுக்காரிக்கு என் பேச்சு லட்சியமில்லே. குழந்தைகளுக்கெல்லாம் சித்தப்பாதான் கடவுள். தங்கச்சிக்கோ கேட்க வேண்டாம். அசோகன்தான் குரு. இதைப் பற்றி நாங்கள் நிறைய விவாதித்தோம். அசோகனின் அனுபவத்துக்கு நான் தலை வணங்க வேண்டி யிருந்தது.'' வாய் நிறைய வாசனைப் பாக்கைப் போட்டுக் கொண்டு துளிர் வெற்றிலையை மென்று விழுங்கினார் தங்கவேலன்.

'' 'சரி, அண்ணு! சம்பிரதாயச் சடங்குகள் வேண்டாம். வெளியூரிலிருந்து இரண்டாம் வகுப்புப் படி கொடுத்து ஒரு தலைவரை வரவழைக்கிறீர்கள். அவருடைய பேருரைக்கு ஒரு பண முடிப்பு. இந்தத் தொழில் முறைக்கு ஒரு கூட்டம் இப்போது தமிழ் நாட்டில் உருவாகி யிருக்கிறது. அது நல்லதாகப் படுகிறதா உங்களுக்கு?' என்று கேட்டான்...

''இதற்கு என்னிடம் பதில் இல்லே. 'உபநிஷதத்திலே ஒரு கதை இருக்குது அண்ணு! 'இது பாட்டன் வெட்டிய கிணறு. அதனாலே நீர் உப்பாக இருந்தாலும் அதைத்தான் குடிப்பேன்னு சொல்றவன் மூடன். ஆனால் இது நல்ல தண்ணியா யிருந்தாலும் இது என்

பாட்டனார் வெட்டிய கிணறு என்பதற்காக அதைக் குடிக்க மாட்டேன் என்பவன் அவனையும் விடப் பெரிய மூடன்.' வாழ்நாள் முழுவதும் தெய்வத்தைப் பற்றியும், சமயச் சடங்குகள் குறித்தும் உயர்வாகப் பேசாத நேரு என்ன உயில் எழுதினார்? 'என் உடம்புச் சாம்பலில் பாதியைப் பிரயாகை நீரில் கரை' என்றார். அவர் அறிவாளி. இல்லையா?' என்று கேட்டான். இதற்கும் என்னால் பதில் தர முடியவில்லை. என்றாலும் சிறிது முரண்டினேன். 'போன மாதம் சேகர் பையனுக்கு நீர்க்குளுவான் வந்து நேரானதும் ஏன் சமயபுரம் போய் வந்தீங்க?'ன்னு ஒரு கேள்வி கேட்டான். 'தம்பி உன் விருப்பப்படியே கல்யாணத்தை நடத்திப் போடு'ன்னுட்டேன்.''

''தம்பி தொடர்ந்து என்ன வேலை செய்யப் போவுது?'' என்று தங்கவேலவரைக் கேட்டார் சிதம்பரம்.

''இன்னும் ஒன்னும் முடிவு பண்ணலே. அதனுடைய மனசு இன்னும் இங்கே ஒட்டினதாகத் தெரியவில்லே. நம்முடைய கிராமத் தொழில்களுக்கு வட இந்தியாவிலும் வெளி நாட்டிலும் நல்ல வரவேற்பு இருக்கிறது. நம்முடைய தொழில்களும் இங்கே ஆதரிப்பார் இல்லாமல் நசித்து வருகின்றன என்ற ரீதியிலே அதன் எண்ணம் போய்க்கிட்டிருக்குது. திடுதிப்புன்னு பத்து ஆட்களை அழைச்சுக்கிட்டுப் போய் மூங்கில் தோப்பை அழித்துப் போட்டது. அதிலே ஏதோ சாணத்தையும் சுண்ணாம்பையும் போட்டுத் தழையை எரித்து விட்டு மறுபடியும் மூங்கிலே பயிர் செய்திருக்கு. ஆனால் அவை யெல்லாம் உத்தரப் பிரதேசத்திலிருந்து வந்தவை. பிரம்பு கணக்கா இருக்கு. அது இன்னும் ஆறு மாதங்களில் வளர்ந்திடுமாம். பிறகு அந்த மூங்கிலினால் பெட்டி, மேஜை நாற்காலி, அலமாரி யெல்லாம் செய்யறதுக்கு மலையாளத்திலிருந்து ஒரு தொழிலாளியை அழைத்து வருமாம். அவர் நம்ம ஊர்க்காரங்களுக்கு அந்தக் கைவேலையைக் கத்துக் கொடுப்பாராம்!''

''நல்ல யோசனைங்க இது! நம்மிலே யாருக்கும் தோணலியே!''

''அது மட்டுமா? நம்ம வீதியிலே யாரும் இப்போ தேங்காய்ச் சிரட்டையை எரிப்பதே இல்லே. அவைகளை யெல்லாம் வாங்கிச் சேர்த்து அதிலிருந்து நல்ல ஓடுகள் உள்ளதாய்ப் பொறுக்கி வைத்தது. மாங்குடியிலிருந்து ஓர் ஆசாரியை அழைத்து வந்து சிறு சிறு பேழைகளாய்ச் செய்து வார்னிஷ் கொடுத்து வெச்சிருக்கு. ஒப்புருட்டி, அதை யாரும் கொட்டாங்கச்சின்னு சொன்னால் நம்பமாட்டான். இதுக்குப் பஞ்சாபிலே நல்ல மார்க்கெட்டு. நம்ம ஊரிலே இப்போ வராட்டி தட்டுறதையே விட்டுட்டாங்க. மாட்டுச் சாணத்திலே ஏதோ காஸ் இருக்குதாமே. பொம்பளைங்க எல்லாம் மத்தியானம் நம்ம வீட்டுத் திண்ணைக்கு வந்துடறாங்க. கொட்டாங்கச்சி இழைக்க வேண்டியது. கன்னாரு ஒட்டித் தட்டும் தேங்காயும் செய்யறாங்க. ஒவ்வொருவருக்கும் ஒரு ரூபாய் தினக் கூலி கசக்குதாங்கறேன்!''

''அண்ணாச்சி! ஒரு இரண்டு மாசத்துக்குத் தம்பியை எங்க ஊருக்கு அனுப்பி வையுங்க. அவர் ஒரு நாலு பேரைத் தயார் செய்தால் போதும்.''

''உங்க ஊரிலே நல்ல பொண்ணு வெச்சிருக்கீங்களா?'' கண்ணைச் சிமிட்டியவாறே வினவினார் தங்கவேலன்.

''அதென்ன அப்படிக் கேக்கறீங்க? தம்பியை மருமகப் பிள்ளையா அடைய எங்க ஊரு கொடுத்து வைச்சிருக்கணுமே! நெசமாய்த்தான் சொல்லறீங்களா?''

''வாஸ்தவம் அண்ணாச்சி. தம்பியின் மனசிலே என்ன இருக்குதுன்னு எனக்குத் தெரியலே. அது அவன் அண்ணிக்குத்தான் தெரியும். வயசு முப்பத்தஞ்சு ஆயிடுச்சு. ஆனால் முப்பதுக்கு மேலே யாரும் மதிக்க மாட்டாங்க. சட்டுனு ஒரு நல்ல பொண்ணைப் பாருங்க. எங்க குடும்பம், மக்களைப் பற்றி உங்களுக்குத் தெரியாதது எதுவுமில்லையே!''

''அவசியம் செய்து போடுவோம். இந்தத் தை வரைக்கும் பொறுக்கலாமுங்களா?'' சிதம்பரம் அன்போடு வினவினார். அவருக்கு அடி நாவில் சுவை ஊறியது.

அன்றைய மாலைக் கலை நிகழ்ச்சிகள் ஊரையே மகிழ்ச்சியூற்றில் ஆழ்த்தின. இரட்டை நாயனம், மல்லிகைப் பூ சாரட்டு, மயில் நாட்டியம், சிலம்பம், கோலாட்டம் என்று எல்லாக் கலைஞர்களும் பங்கெடுத்துக் கொண்டார்கள். அன்றிரவு ஓர் இலக்கிய நிகழ்ச்சிக்கும் அசோகன் ஏற்பாடு செய்திருந்தான்.

கடுவெளிச் சித்தரின் பிறப்பு, வளர்ப்பு, அவர் சித்தனாக மக்களுக்குச் செய்த நன்மைகள், தமிழ் இலக்கியத்துக்கு அதனால் ஏற்பட்ட பெருமை ஆகியவைகளை விளக்கித் திருவையாற்றுத் தமிழ்ப் பண்டிதரை ஒரு கையேடு எழுதச் செய்திருந்தான். அதை அன்று வெளியிட்டு அந்தத் தமிழ்ப் புலவரையே சித்தரின் பெருமைகளைச் சிறப்பித்துக் கூறும்படி வேண்டிக் கொண்டான். அந்தப் புலவர் நிறையப் படித்தவர். 'மனிதன் வெறும் அறிவினால் மட்டும் தொட முடியாத பல உண்மைகளை நெஞ்சினால் காணலாம். அதையும் மிஞ்சி உணர்வினால் அறிந்து ஆன்ம நேயப் பெருவெளியை அணுகலாம். அங்கே காணாத காட்சிகள் புலப்படும். பல புதிய செய்திகள் கேட்கலாம். மக்கள் சமுதாயத்தையே புதிய பாதையில் அழைத்துச் செல்லலாம். அந்தத் தொண்டைத்தான் கடுவெளிச் சித்தர் சிறிய அளவில் செய்தார்' என்று விளக்கினார். படித்தவர், பாமரர், அறிவாளிகள் அனைவரும் திகைத்துப் போய் நின்றார்கள். இப்படி ஒரு பெருமை தம் ஊருக்கு இருப்பதே தெரியாமல் வாழ்ந்து கொண்டிருந்ததை எண்ணி அவர்கள் கழிவிரக்கம் கொண்டனர். வாழ்க்கைக்கு இப்படி ஒரு பரிமாணமும் உண்டு என்று எடுத்துக் காட்டிய தமிழ் அறிஞரை மனமாரப் பாராட்டினார்கள். அவருக்கு ஒரு பொற்கிழி அளிக்கப்பட்டது.

திருமழபாடியைச் சேர்ந்த சிதம்பரம் பிள்ளை கடைசியில் நெஞ்சுருகப் பேசினார்.

''திருவையாற்றில் கோயிலெதிரில் செல்லும் போதெல்லாம் ஆள்கொண்டார் சன்னிதியி லிருந்து குங்கிலியக் கரியை எடுத்து நெற்றி யில் இட்டுக் கொள்ளுகிறோம். அந்தப் பெரி யவர் யார், அவர் எப்படி வாழ்ந்தார், மக்க ளுக்கும் குழந்தைகளுக்கும் அவர் என்ன நன் மைகள் செய்தார் என்று யாராவது ஒரு நிமிஷமாவது யோசித்துப் பார்த்தோமா?

''அவ்வாறு செய்யாமல் வெறும் பொட்டை இட்டுக் கொண்டு வருவதனுல் நாத்திக வாதம்தான் அதிகமாகிறது. இதை இன்று நமக்கு இந்தத் தமிழ் அறிஞர் சொல்லாமல் சொல்லி விட்டார். இத்த கைய அருமையான நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்த அசோகனுக்கு எப்படி நன்றி செலுத் துவது என்றே புரியவில்லை.'' சிதம்பரனு ரும் நெகிழ்ந்தார். குழுமியிருந்தவர்களும் உருகினுர்கள்.

7

பொன் வெய்யில் இன்னும் ஒளிர்ந்து கொண்டிருந்தது. நீல விதானத்தில் கருடன் ஒன்று கூவியவாறு பறந்தது. ஆல மண்ட பத்தை அடுத்த மண் தரையில் அணில்கள் இரண்டு புழுதியில் புரண்டு விளையாடிக் கொண்டிருந்தன. மரத்தின் மேல் உட்கார்ந் திருந்த காக்கை ஒன்று அவைகளை ஓரக் கண் ணுல் பார்த்துக் கொண்டிருந்தது. அவை குஞ்சாக இல்லையே என்பது அதன் துயரம்.

மண்டபத்தின் கீழ்க் கோடியில் அசோகன் உட்கார்ந்து கொண்டிருந்தான். அங்கே சிமிட்டித் தரையில் கீறியிருந்த கோடுகள் அவனுடைய நினைவுகளைப் புதுப்பித்துக் கொண்டிருந்தன. அவனுடைய நெட்டுயிர்ப் பில் இனம் தெரியாத துயரம் இழை யோடிற்று.

தன்னூரின் பொது வாழ்க்கையில் அவன் ஓர் இன்றியமையாத அச்சாணியாகி விட் டான். இவ்வளவு நாட்களாக அசோகனில்லா மல் ஊரின் சமுதாய வாழ்க்கை மூளியாகவே இருந்ததைப் பொதுமக்கள் உணரத்தொடங்கி யிருந்தனர். கூடவே ஒரு தனி மனிதனின் தன்னலமற்ற தொண்டு சமூக வாழ்க்கையில் எத்தனை மாறுதல்களை ஏற்படுத்த முடியும் என்பதையும் உணர்ந்தனர்.

ஆனல் தன்னுடைய சொந்த வாழ்க்கை யில் பயம் தரும் தனிமையை உணரத் தொடங்கினுன் அசோகன். ஊரியக்கம் என்ற விசைப் பொறியில் ஒரு பல் சக்கர மாக அவன் இயங்கும்வரையில் அவனை ஒரு வெறி ஆட்கொண்டிருந்தது. அவன் அசைந் தால் ஊரே ஆடிற்று. ஆனல் அவன் அத னின்று விலகிச் சற்றுத் தனியே வரும்போது அவனை வெறுமை சூழ்ந்தது. அது அவனைத் துரத்தித் துரத்திப் பழி வாங்கிற்று. அந்த மாதிரி வேளைகளில் அவன் ஆல மண்ட பத்தை நோக்கி வந்தான்.

தூரத்தில் சேரி நாய் ஒன்று குரைத்தது. அதைத் தொடர்ந்து இன்னும் சில கவா னங்கள். தொலைப் பாதையில் புதரோரத்தில் ஒரு பெண்ணுருவம் தென்பட்டது. சிவப்புக் கரை போட்ட வெள்ளைச் சேலை. கறுப்பு ஜாக்

உயிரூட்டும் இசை; உணர்ச்சியூட்டும் பாடல்!

அமெரிக்காவிலிருந்த நீக்ரோ அடிமைகள் பெருந் துயருற்றபோதெல்லாம் காஸ்பெல் பாடல் களைப் பாடினுர்கள். அல்லது கேட்டார்கள். இப் பாடல்கள் அடிமைகளின் துன்பங்களைக் கூறின. பயங்கர உண்மைகளைப் பேசின. ஆயின் நம்பிக்கை இழக்கலாகாது எனவும் அறிவுறுத்தின. இப்பாடல் களைக் கேட்டும் பாடியும் அடிமைகள் மனேதிடம் பெற்றனர். ஜாஸ் என்று பிரபலமாகியுள்ள இசை காஸ்பெல் இசையிலிருந்து பிறந்ததுதான்.

காஸ்பெல் பாடல்களைப் பாடுவதில் தன்னிகரற்று விளங்கினுர் மஹாலியா ஜாக்ஸன். இவரது தாத்தா வும் ஓர் அடிமையாக இருந்தவர்தான். ஐந்தாவது வயதிலேயே பாட ஆரம்பித்துவிட்ட மஹாலியா தனது பதின்மூன்றாவது வயதில் ஒரு நாளைக்குப் பத்து மணி நேரம் வேலை செய்தார். சமையல்காரியாகவும், துணி தோய்த்துப் போடுபவளாகவும், குழந்தைகளைப் பராமரிக்கும் ஆயாவாகவும் உழைத்தார். பதினுரு வது வயதில் ஓர் ஓட்டல் சிப்பந்தியாகப் பணிபுரியச் சென்ருர்.

இவ்வாறெல்லாம் கடுமையாக உழைத்த மஹா லியா ரொம்பவும் சாதாரண குடும்பத்தில் பிறந்தவர். அவர் தந்தை பகலில் டாக்டர். இரவில் நாவிதர். ஞாயிற்றுக்கிழமைகளில் ஒரு பாதிரி!

மஹாலியா மாதா கோவில்களில் பாடி நீக்ரோ மக்களின் கவனத்தை ஈர்த்தார். படிப்படியாகப் பிர பலமடைந்தார். நாளடைவில் உலகப் புகழ் பெற்ற அவர் பாடுவதைக் கேட்கும் வாய்ப்பு, பாரத மக்களுக் கும் சமீபத்தில் கிடைத்தது.

புது தில்லியில் அவர் பாடி முடித்த பிறகு தொடர்ந்து பாட வேண்டும் என்று கோரும் முகமாக ரசிகர்கள் இடைவிடாமல் கை தட்டினர். நிகழ்ச்சி முடிந்து விட்டதென வெளிப்போந்து காரில் ஏறிய பிரதமர் ஸ்ரீமதி இந்திரா காந்தி இந்த விவரத்தை அறிந்ததும் காரிலிருந்து இறங்கி மீண்டும் சபைக்கு வந்துவிட்டார்!

மஹாலியாவின் பாட்டுக்கு அத்தனை சக்தி. அண் மையில் அவர் காலமானது இசை உலகுக்குப் பேரிழப்பாகும்.



படம்: சென்னைக்கு மஹாலியா ஜாக்ஸன் வந் திருந்தபோது இசை நிகழ்ச்சி முடிந்ததும் குமாரி மைத்ரேயி ராமதுரை அவருக்கு மாலை அணிவித்தார்.

கெட். கூந்தலில் வெண்ணிற மலர்கள். இடது கையில் ஒரு குடை. கறுப்பு அட்டை போட்ட தடித்த புத்தகம். அவனுடைய அங்க அசைவிலிருந்து அது மனோன்மணி என்று தெரிந்து கொண்டுவிட்டான். ஒற்றைக் குயில் தாபத்தோடு கூவிற்று.

''வா, வா, மனோ! எங்கே இந்த நேரத்தில் தனியாய் வருகிறாய்?''

மனோன்மணியின் முகம் மலர்ந்தது. ''எங்கே, என் ராஜா, இன்னொரு தரம் என்னை அப்படிக் கூப்பிடு!'' அவள் நெஞ்சு பூரித்தது. அவனுடைய நெற்றியைத் தொட்டுத் திருஷ்டி கழித்தாள். அசோகன் தடை சொல்லவில்லை.

''சக்குவும் நானும் தேவாலயத்துக்குப் போனோம். 'மாஸ்' முடிந்தபிறகு அவள் தன் தோழிகளைப் பார்க்க வேண்டும் என்றாள். நான் அமைதியை வேண்டித் தனியே திரும்பினேன்...''

அசோகன் கீழே குதித்துச் சிறு சிறு கல்லாகப் பொறுக்கினான். ''ஆடு புலி விளையாடுவோமா மனோ?'' அவன் கேட்டான்.

மனோன்மணி தன்னுடைய வலது மணிக்கட்டை அவனிடம் காட்டினாள். ''ஒரு தரம் பல்லாங்குழியில் தப்பாட்டம் ஆடினேன் என்று என் கையில் கட்டையால் அடித்தாய் அல்லவா?''

அசோகன் அந்தக் கையைத் தாங்கி மெல்ல வருடினான். ''இப்போது இதைத் தொடக் கூடத் தயக்கமாக இருக்கிறது, மனோ! மேலத் தெருவில் கடம்பவரையர் பங்களா கட்டினாரே, அங்கே மணல் கொட்டிக் கிடக்கும். தினம் சாயங்காலம் அங்கே கிளிக் கூண்டு கட்டுவோமே. அந்தச் சூடான மணல் கூண்டுக்குள் உன் கையைப் பற்றி எத்தனை தடவை....''

''என் கூண்டு காலியாகவே போய் விட்டது அசோகன். இந்தத் தழும்பு ஒன்றுதான் உன் நினைவைப் பசுமையாக்கி வைக்கிறது. தோற்றுப் போனாலும் தவறு செய்யாதே என்று இது கற்பிக்கிறது. அதனால் தான் வேலியை விட்டு வெளியே வராமல் இருக்கிறேன்.''

''வா என்றுதான் இப்போதும் உன்னை அழைக்கிறேன். இந்த ஊரிலே உன்னைத் தவிர வேறு பிடிப்பு எனக்கு எதுவுமே இல்லை. அதை மறக்க வேண்டும் என்றுதான் இப்படி வெறி பிடித்தவன் போல் வேலை செய்கிறேன். ஆனாலும் முடியவில்லை. என்னை இயக்கும் வலிமையே நீயாக இருக்கும்போது நான் உன்னை எப்படி மறப்பது?''

''இந்தச் சொற்களைக் கேட்டுக்கொண்டே இருக்கும்போது என் உயிர் பிரிந்து விட்டால் இனிமையாக இருக்கும் என்று தோன்றுகிறது அசோக். எனக்கு இந்த வாழ்வில் வேறு ஒன்றும் வேண்டாம்.''

''உனக்கு வேண்டாம். ஆனால் எனக்கு நீ வேண்டும் மனோ! இல்லை யென்றால் நான் இந்த ஊரை விட்டே ஓடிப் போய்விடுவேன்.''

''கூடாது அசோகன்!'' அவள் உறுதியாகக் கூறினாள். ''நீ இந்த மண்ணை நேசிக்கிறாய். இந்த ஊர் மக்கள் உன்னிடம் உயிரையே வைத்திருக்கிறார்கள். என் ஒருத்தியின் சுகத்துக்காக ஊர் நலம் பாழாகக் கூடாது. நான் உடைந்த சட்டி. எதற்கும் உபயோகமற்றவள். என் தங்கை சகுந்தலாவைப் பார், அசோக். அவள் உன்னைப் பெரிதும் விரும்புகிறாள். எனக்குக் கிடைக்காத நலத்தை என் தங்கைக்காவது கொடு அசோக். இது என்னுடைய ஒரே வேண்டுகோள்.''

அசோகன் அவளுடைய கையை விலக்கினான். ''நீ இங்கிருந்து போய்விடு. உடனே போய்விடு. முன்பு உன் கையைக் காயப்படுத்தினேன். இப்போது உன்னையே அழித்தாலும் அழித்து விடுவேன். ஒவ்வொரு கணமும் உன் நினைவு என் நெஞ்சைச் சுட்டுப் பொசுக்கிக் கொண்டிருக்கிறது. நீ வேறு என்னை வார்த்தைகளால் சுடுகிறாயா?'' அசோகனின் தொண்டை கமறியது.

''நான் போகிறேன், அசோகன். இந்த உலகத்தை விட்டே போகவும் தயார். ஆனால் அப்போது உன் நினைவும் அல்லவா போய் விடும்! அதை எப்படித் தாங்குவேன்? உன் நினைவு எனக்கு வேண்டுமே!''

அசோகன் வயலில் குதித்துத் தாண்டி வரப்பின் மேல் நடந்தான். இடலிருந்த இலந்தைப் புதரை உலுக்கினான். செங்காயும் பழங்களும் உதிர்ந்தன. அவைகளைப் பொறுக்கிக் கைக்குட்டையில் சேகரிக்கத் தொடங்கினாள்.

''அசோகனைச் சந்திக்கத்தான் இவ்வளவு சீக்கிரம் புறப்பட்டு வந்தாயா, அக்கா?'' குரல் கேட்டுத் திரும்பிப் பார்த்தாள் மனோன்மணி. சகுந்தலா சிறிய கைப் பையுடன் வந்து கொண்டிருந்தாள். அவளுடைய நெற்றியில் வியர்வை அரும்பு கட்டியிருந்தது.

''இல்லையானால் அவரைச் சாதாரணமாகச் சந்தித்துவிட முடிகிறதா சக்கு? அவர் தான் நம்மூரில் ராணுவ ஆட்சி நடத்துகிறாரே! யாராவது அவருக்கு லட்சியமா?''

''இலந்தப் பழம் வேண்டு மென்கிறவர்கள் இங்கே வரலாம். கால் நிறைய முள்ளும் குத்திக் கொள்ளலாம்.'' அசோகன் இடலிருந்தபடியே கூவினான்.

''எனக்கு முள் வேண்டாம். பழம்தான் வேண்டும்.'' சகுந்தலா சிரித்துக் கொண்டே பதிலிறுத்தாள்.

''பழத்தை மட்டும் நீ எடுத்துக்கொள். முள்ளெல்லாம் அக்காவுக்கு இல்லையா?'' போலிக் கோபத்துடன் கேட்டான் அசோகன். மனோன்மணி அவனை நிமிர்ந்து பார்த்துக் கண்களால் கடிந்து கொண்டாள். அந்த வகையில் பேச வேண்டாம் என்று நயன பாஷையில் இறைஞ்சினாள்.

பழத்தைத் தின்று கொண்டே மூவரும் ஊர் திரும்பும் பாதையில் நடந்தனர்.

''கூடிய விரைவில் இங்கேயும் ஒரு பள்ளிக் கூடம் எழும்பிவிடும்.'' சேரிப் பகுதியைச் சுட்டிக் காட்டியவாறு கூறினான் அசோகன்.

''ஏன், இந்தப் பிள்ளைகள் ஊர்ப் பள்ளியில் படிக்கக் கூடாதா?'' ஆதுரத்துடன் வினவினாள் சகுந்தலா.

''அதற்கில்லை பொன்னு. சேரிவாசிகளே ஊருக்குள் வர விரும்பவில்லை. இன்னும் அவர்களிடையே தாழ்வு மனப்பான்மை போகவில்லை. பச்சை மட்டையை மரத்திலிருந்து பிய்த்தால் காயம் ஏற்படும். முதிர்ச்சி ஏற்பட்டால் தானே உதிர்ந்துவிடும். சீர்திருத்தம்

களைக் களைந்து கொண்டு வலியுறுத்தக் கூடாது. அடுத்த தலைமுறைக் குழந்தைகள் தானே முன்னுக்கு வந்துவிடும். பொருளாதார மேம்பாடு சமுதாய பள்ளத்தை எல்லாம் தானே நிரவிவிடும். அதையும் தவிர அருகில் இருந்தால் பிள்ளைகள் தங்கள் பெற்றோர் களுக்கும் தொழில் முறையில் உதவியாக இருப்பார்கள். நமக்கெல்லாம் ஒரு குழந்தை என்றால் ஒரு வயிறு. இங்கே ஒரு சிறுவன் என்றால் இரண்டு கைகள். பெரியவர் தலைமையில் இருக்கும்போது அப்படி ஒரு கல்வித் திட்டத்தையே கொண்டு வந்தார். நம்முடைய துரதிருஷ்டம், நம்மால் அதைப் புரிந்து கொள்ள முடியவில்லை.''

''பிள்ளைகளுக்குக் கல்வி அளித்து விட்டால் மட்டும் போதுமா? வேலை வாய்ப்பு வேண்டாமா?'' என்று மனோன்மணி வினவினாள்.

''அந்தக் காரணத்துக்காகவும்தான் இங்கேயே பள்ளிக்கூடம் வேண்டும் என்கிறேன். உழவன் மகன் சேற்றைக் கண்டு அசிங்கப் படலாமா?''

''உழவன் மகன் விவசாயியாகத்தான் இருப்பான். அதுதான் உங்கள் திட்டம் இல்லையா?'' சகுந்தலா வினவினாள்.

''இது உழவனுடைய நாடு சகுந்தலா. எத்தனை பேர்களை ஆலைத் தொழிலாளிகள் ஆக்கிவிட முடியும்? நம்முடைய திட்டங்களின் தோல்வி பொருளாதாரப் பண்டிதர் களையே திகைக்க வைக்கிறது. இராணுவத்திலிருந்து ஓய்வு பெற்ற ஜெனரல்களையெல்லாம் பார். ஆசையோடு திரும்பி வந்து மண்ணைக் கிளறுகிறார்கள். நாம் மண்ணால் ஆனவர்கள். அதில்தான் நமக்கு வாழ்வு.'' அசோகன் உணர்ச்சியோடு பேசினான். ஊர்முனையில் சகோதரிகள் விடைபெற்றுச் சென்றார்கள்.

8

மாடியறையில் அசோகன் தன் பெரிய பெட்டியைத் திறந்து எதையோ ஒழுங்கு செய்து கொண்டிருந்தான். இடுப்பில் குழந்தையுடன் அண்ணி அங்கே வந்து நின்றாள்.

''இளநீர் கொண்டு வரட்டுமா?''

'வேண்டாம்' என்று தலையை ஆட்டினான் அசோகன்.

''மரகதம் போனப்புறமே வீடு வெறிச்சினு போயிடுச்சி, இல்லையா தம்பி?'' அவள் வினவினாள்.

''அண்ணி எதுக்கு அடி போடுறீங்கன்னு எனக்கு விளங்காமல் இல்லை.''

''எல்லாம் நல்லத்துக்குத்தான் சொல்லுவாங்க. நான் என்ன இந்த வீட்டைத் தனியா ஆளவா வந்தேன்? எனக்கும்தான் அதிகாரம் செய்ய ஒரு கொழுந்தி வேணும்.''

ஏதோ பாட்டை முணுமுணுத்தவாறு மெள்ள நழுவ முயன்ற அசோகனை வழி மறித்தாள் காமாட்சி. ''இன்னிக்கு முடிவு தெரிஞ்சாகணும். திருமழபாடி முதலியாருக்குச் 'சரி'ன்னு சொல்லிடட்டுமா?''

''கல்யாணம்கறது ஒரு தனி ஜீவனைப் பொறுத்தது இல்லையே அண்ணி. நீங்க வாழ்க்கையிலே யாரையாவது....'' இதை அவ்வளவு பெரியவளிடம் எப்படிக் கேட்பது என்று தயங்கினான் அசோகன்.



விந்தையான வைத்தியம்!

தலைவலியைக் குணப்படுத்த பாதத்தில் ஊசியைக் குத்துகிறார்கள்! இது சீனர்களின் வைத்திய முறை. பித்தளையில் செய்த ஊசியை உடலில் குத்திப் புற்றுநோய், மூட்டு வாதம், பார்வை இழப்பு, செவிட்டுத்தன்மை, இப்படிப் பல நோய்களைக் குணப்படுத்த முடியுமாம்! இந்த முறைக்கு 'அகு பங்சர்' என்று பெயர். மயக்க மருந்துக்குப் பதிலாக மணிக்கட்டிலும் முன் கையிலும் இந்த ஊசிகளைச் செருகிப் பெரிய ரண சிகிச்சையைக் கூடச் செய்துவிட முடியும். மயக்கமற்ற நிலையில் அறுவை சிகிச்சை நடக்கும் போதே நோயாளி ஒரு கப் டீ குடிக்கலாமாம்!

இந்த முறையை நம்ப மறுத்த டாக்டர்களுக்காக நேரிடையாக ஒரு பெண்ணுக்கு இருதய ஆபரேஷன் செய்து காட்டி நிரூபித்திருக்கிறார்கள். அவள் பார்த்துக்கொண்டிருக்கும் போதே மார்பைக் கிழித்து இருதயத்தைக் கையில் எடுத்தார்களாம். வலியை மறக்க எந்த மருந்தும் அவளுக்குக் கொடுக்கப்படவில்லை. ஆபரேஷன் முடிகிறவரையில் அந்தப் பெண் சிரித்துக் கொண்டிருந்தாள்.

பிரான்ஸிலுள்ள பல மருத்துவ மனைகளில் இந்த முறையைக் கையாளுகிறார்கள். ரஷ்ய பல்கலைக் கழகங்களில் இதைப் போதிக்கிறார்கள். இங்கிலாந்திலுள்ள பெரிய நகரங்கள் எல்லாவற்றிலும் 'அகுபங்சர்' கிளினிக் ஒன்று இருக்கிறதாம்!

ஊசியைக் குத்துவது பெரிய விஷயமல்ல. எந்த நோய்க்கு எந்த இடத்தில் குத்தினால் கேட்கும் என்பதுதான் முக்கியம். இதில் சீனர்கள் வல்லவர்களாக இருக்கிறார்கள். டிட்பிட்ஸ் -- ''எக்ஸ்ரே''

''உன் மனசு எனக்குப் புரியாமல் இல்லே. நீ என்ன சின்னப் புள்ளையா? ருக்கே வழி காட்டி. அந்தக் கிறிஸ்துவப் பொண்ணு ஏதோ மந்திரம் போட்டு...''

''யாரையும் தரக் குறைவா பேசிவிட வேண்டாம்.'' அவனுடைய குரலில் இருந்த கண்டிப்பைக் கண்டு அண்ணி பின்வாங்கினாள். ''இந்த ஊர்க்காரங்க மேலிருக்கிற வெறுப்பிலே கனகரத்தினம் என்னை மதம் மாறணும்னு கண்டிஷன் போட்டாரு. நான் தன்மானமுடையவன். இல்லையானால் என் விக்கோ அந்தப் பொண்ணு இந்த வீட்டுக்கு வந்திருக்கும்.''

''அதெல்லாம் பழைய கதை தம்பி. இனிமேல் என்ன செய்ய முடியும்? அந்த வாழாவெட்டியை நீ கட்டிக்க முடியுமா?''

அசோகன் பதில் சொல்லவில்லை. மௌனமாகப் பெட்டியிலிருந்த சாமான்களைச் சீர் செய்வதில் ஈடுபட்டான்.

''கல்யாணம்கிறது நெடுங்காலத்துப் பயிர் தம்பி. இந்தக் குடும்ப கௌரவத்தை நினைச்கப் பாரு.''

''அதை நினைச்சுத்தான் இப்படிக் கருகிக் கிட்டுக் கிடக்கேன், அண்ணி. நான் ராத்திரி தூங்கி ஆறு மாசம் ஆச்சு. திரும்பத் திரும்ப அதே யோசனை!'' பெட்டியைப் படீரென்று மூடினான் அவன்.

''இதென்ன? எங்கே பயணம்?''

''கடுதாசி வந்தாச்சு'' — ஒரு மஞ்சள் கவரை எடுத்துக் கொடுத்தான் அசோகன்.

''எனக்கென்ன இங்கிலீஷ் தெரியுமா? என்ன எழுதி யிருக்குது?''

''எல்லையிலே பணி புரிவதற்கு விசேஷ அனுபவமுள்ள அதிகாரிகள் வேண்டும் என்று கேட்டிருந்தாங்க. மனுப் போட்டேன். பதவி உயர்வோடு என்னைச் சேர்த்துக்கிறாங்களாம். நாளை புறப்படணும்.''

''முடியாது: இது நடக்காது.'' காமாட்சி கூவினாள். ''இந்த வீட்டையும் குழந்தைகளையும் நிலத்தையும் என்னால் தனியாளாகக் காபந்து பண்ண முடியாது. ரீலே ஒரு புயலைக் கிளப்பி விட்டிருக்கே. அங்கே ஒவ்வொரு வேலைக்கும் உன் உதவி வேணும். நீ இல்லேன்னு எல்லாம் நின்னு போகும். உன் சுகத்தை எண்ணி நீ தப்பி ஓடறே. நான் ஊரைக் கூட்டி உன்னை நிறுத்துவேன்.''

அசோகன் சிரித்தான். ''தனி மனிதனை விடச் சமுதாயம் பெரியது. சமுதாயத்தை விடத் தேசம் முக்கியமானது. அந்தத் தேசம் தான் தன் சேவைக்காக என்னைக் கூப்பிடுது. நான் போவதாக முடிவு பண்ணி விட்டேன் அண்ணி. நீ தடுக்காமலிரு. நான் இல்லாமல் ஊர் வாழ்ந்திடும். ஆனால் நான் இங்கே வாழ முடியாது.'' அவனுடைய குரல் கமறியது.

''தம்பி, கிழக் தெரு வீட்டைப் புதுசாக் கட்டிக்க. நீ அவளையே கூட்டி வெச்சுக் குடித்தனம் பண்ணு. சொகமாயிரு: அதுக்காக ஊரை விட்டே போகாதே.''

''அந்த வாழ்வு எனக்கில்லே, அண்ணி. நான் எல்லோரையும் போல் வாழப் பிறந்தவன் இல்லே. என் பாதையே தனி. அதைத் தான் எங்கம்மா சொல்லுவாங்களாம்.''

மறுநாள் இரட்டை மாட்டு வண்டியில் சாமான்களை ஏற்றியபோது ஊரே திரளாக வந்து நின்றது. ''ஏன் இப்படித் தம்பி திடீரென்று புறப்படுது? மறுபடியும் சீனாக்காரன் வரானா?'' மழவராயர் கவலையுடன் கேட்டார்.

''தம்பிக்குக் குடும்பத்திலே ஏதோ மன வருத்தம். அதுதான் மறுபடியும் வேலைக்குப் போகுது'' இதைக் கேட்டு அண்ணி காமாட்சி மறுகினாள். அழுதழுது அவளுக்கு மூர்ச்சையே போட்டுவிட்டது. அண்ணன் ஒன்றுமே பேசவில்லை. மெள்ள அசோகனின் தலையைத் தடவி வாழ்த்துக் கூறி அகன்றார். மேல் துண்டை வாயில் வைத்து அடைத்துக் கொண்டார். குழந்தைகள் கதறின.

இரட்டைமாட்டு வண்டி மெல்ல நகர்ந்தது.

மாடியறையில் சகுந்தலா குப்புறப் படுத்து அழுது கொண்டிருந்தாள். அவளுடைய முகமும் விழிகளும் கன்னங்களும் கன்றிச் சிவந்திருந்தன. ''அசோகன் இங்கே வராமலே போய்விடுவாரா அக்கா!'' அவள் அரற்றினாள்.

''அழாதே, தங்கச்சி! அவ்வளவு கல் நெஞ்சர் இல்லை அவர். நீ அழவே கூடாது. இந்த மண்ணின் வீரர், தாய் நாட்டின் அழைப்பை ஏற்று எல்லைக்குப் போகிறார். நம் பிரார்த்தனைகள்தாம் அவருக்குத் துணை நிற்கும்.''

''நீ உன்னையே ஏமாற்றிக் கொள்கிறாய் அக்கா. உண்மையைச் சொல்லு. அசோகன் போகிறதில் உனக்கு வருத்தமே இல்லையா?''

மனோன்மணி சாளரத் திரையை நீக்கி விட்டு வெளியில் பார்த்தாள். நெய்யாடியப்பர் கோயில் கோபுரத்தின் கலசத்தில் கதிரவன் ஒளி பட்டுப் பளபளத்தது. அதற்கருகில் இரண்டு புறாக்கள். அமைதியான காட்சி. அவள் தங்கையைக் கூப்பிட்டு அதைக் காட்டினாள். கோயிலை அடுத்து மங்கையர் வெய்யிலில் நெல்லை உலர்த்தினார்கள். காவிரியிலிருந்து நீரெடுத்துச் செல்லும் முதிய மாது கோயிலுக்கு முன் நின்று தலை வணங்கித் தன்னைத் தானே சுற்றிவிட்டு வழி நடந்தாள்.

மனோன்மணி அடங்கிய குரலில் பேசினாள்: ''இந்த நாட்டில் மக்களின் வாழ்வு அமைதியாக நடைபெற வேண்டுமானால், நமது சமயம், கலாசாரம் எல்லாம் தன் வழியில் தழைக்க வேண்டுமானால் நம்மில் சிலர் பெரிய பெரிய தியாகம் செய்தாக வேண்டும். அத்தகைய மிகப் பெரிய தியாகியை இன்று நாம் வழி அனுப்புவோம். வா எழுந்திரு.''

வாசலில் 'ஜல்ஜல்' என்று மாட்டுக்கழுத்து மணியின் ஓசை தயங்கித் தயங்கிக் கேட்டது. மலர்மாலை, பூச்செண்டு, சந்தனம், சிந்தூரம் ஆகியவற்றுடன் வாசலுக்கு வந்தார்கள் சகோதரிகளும் சிறுவன் செல்வமும். சிறுவன் இட்ட பெரிய பூமாலையைக் கழுத்தில் தரித்துக்கொண்டான் அசோகன். சகுந்தலாவும் மனோன்மணியும் பூச்செண்டை எடுத்து அவனிடம் தந்தார்கள். கிண்ணத்திலிருந்த சிந்தூரத்தை எடுத்து அசோகனின் நெற்றியில் விட்டாள், மனோன்மணி. அவளுடைய கைகள் பதறின. அவனுடைய பாதங்களைத் தொட்டு வணங்கினாள்.


வண்டியில் ஏறிய அசோகன் தன் நெற்றியிலிருந்து சிறிது செஞ்சாந்தை எடுத்தான். மனோன்மணியை அருகில் அழைத்து அந்தச் சாந்தினால் அவள் நேர்வகிட்டை அலங்கரித்தான். மின்னல் நேரத்துக்கு அவனுடைய கண்களில் பொருளுள்ள புன்னகை. 'ஜல் ஜல் ஜனக்கு, ஜனக்கு' — வண்டி நகர்ந்தது.

ஒரே சீரான ஒலியுடன் மூலைக்கடைவரை சென்ற மாடுகள் அங்கே தன் வேகத்தைக் குறைத்துக் கொண்டு வலது பக்கம் திரும்பிய போது நாதபேதம் ஏற்பட்டுச் சுருதிகலைந்தது. மாயா மாளவ கௌளத்தில் சுந்தரம் பிள்ளையின் பாடலை யாரோ இனிமையாகப் பாடினார்கள். சத்தார் சாயபு கடைச் சந்தனத்தைப் போல் அதுவும் மணத்தது.

''.....அத்திலக வாசனைபோல்
அனைத்துலகும் இன்பமுற....''

அசோகனின் கண் முன்பு பனி முடியும் கடலடியும் கொண்ட பாரத நாடு எதிர்ப்பட்டது. அவன் தன் கண்களை மூடி அந்தக் காட்சியை நெஞ்சில் இருத்திக் கொண்டான்.

Printed & published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-31
Managing Editor: T. Sadasivam



GWALIOR RAYON SILK MFG. (WVG.) CO. LTD., BIRLAGRAM, NAGDA (M.P.)

Registered No. M. 4392
Registered as a Newspaper in Ceylon